
கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(04.06.2017 - 04 ஆனி 2017 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 07, கதிர் - 161, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /129 / NEWS / 2017

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05



பரிசுத்த ஆவியின் பெருவிழா ஆனி 04

**தேசிய தலைவர்கள் தங்கள் ஆயுதங்களை பாதுகாத்துக் கொள்ள தங்களை உறுதிபடுத்திக் கொள்ளவேண்டும். இல்லாவிடில் பல அப்பாவி மக்களை இவை பாதிக்கும்.**

திருத்தந்தையின் இம்மாதக் கருத்துக்காக செபிப்போம்



## இலங்கை ஆயர் பேரவையின் செய்தி



எமது நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் பெய்துவரும் பலத்த மழையின் காரணமாக வெள்ளத்தினாலும், மண்சரிவினாலும் பாதிக்கப்பட்ட எம் அன்பு சகோதர, சகோதரிகளுக்கும், பிள்ளைகளுக்கும் எமது துயரத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதன் விளைவாக பல குடும்பங்களில் தங்கள் அன்பு உறவுகளை இழந்தவர்களுக்காக எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களுடைய ஆன்மா சாந்தியடையவும் நாம் பிரார்த்திக்கின்றோம். இலங்கையிலுள்ள அனைத்து கத்தோலிக்க குழுக்களையும் வேண்டிக்கொள்வது யாதெனில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை மனிதாபிமான முறையில் செய்து கொள்ள, மறைமாவட்ட கரித்தாஸ், அரசாங்க சேவை அமைப்புக்கள், சமூகசேவை அமைப்பின் ஊடாக இவர்களுக்கு உதவிபுரிய தங்கள் ஆதரவை அளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இச்சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் தாங்கள் தனிமையாய் விடப்பட்டவர்களல்ல, தங்களுக்கும் உறவுகள் உண்டு என்பதை உணரச் செய்ய, நிதி சார்ந்த உதவி, ஆடைகள், மனிதாபிமான ஆதரவை, உறவுகளை நிலபுலங்களை இழந்த மக்களுக்கு வெளிக்காட்டி அவர்களை திடப்படுத்தவும் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்ந்தும் எங்களுடைய செபத்தில் இவர்களுக்காக செபிப்பதோடு, இவர்கள் ஆன்மீக மனவலிமையை பெறவும், இடர்பாடான இச்சூழலிலிருந்து விடுபட்டு வாழ ஆசீரும் அருளும் வேண்டுகின்றோம்.

மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS,
தலைவர், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

மேதகு ஆயர் டி. வலன்ஸ் மென்டிஸ்
பிரதம செயலாளர், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

## எமது சகோதர மெசஞ்சர் பத்திரிகைக்கு புதிய ஆசிரியர்



**அருட்தந்தை. டொன் அன்டன் சமன் ஹெட்டியாராய்ச்சி**

அடிகளார் விவிலிய அப்போஸ்தலிக்க பணியகத்தின் செயலாளரும், தெஹிவளை கத்தோலிக்க திரித்துவ ஆலயத்தின் பொறுப்பாளராகவும், புனித யோசேவ்வாஸ் குழுவின் செயலாளராகவும், கொழும்பு தெற்கு மறைக்கோட்ட ஆங்கில மறைக்கல்வி மற்றும் விவிலிய அப்போஸ்தலிக்க பணியின் ஒருங்கமைப்பாளரும் ஆவார். இவரை ஞான ஒளி வாழ்த்தி வரவேற்கின்றது.

## தூய ஆவியானவரை நம் மனதிற்குள் நுழைய அனுமதிப்போம்

**தூய ஆவியாரின் பெருவிழாவை முன்னிட்டு திருத்தந்தை.**



எந்த ஒரு தீர்மானத்தையும் எடுப்பதற்கு முன்னால், தூய ஆவியானவரை நம் மனதிற்குள் நுழைய அனுமதிப்போம். நம் வாழ்வில் தூய ஆவியானவருக்கு நாம் எந்த இடத்தைக் கொடுத்துள்ளோம் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். தூய ஆவியாரின் ஆலோசனைகளுக்கு செவிமடுக்காமல், வெறும் கொள்கையளவில் தொடரும் விசுவாசம் என்பது, கதகதப்பில்லாத குளிர்நிலை விசுவாசமாக மாறிவிடும் ஆபத்தையும் சுட்டிக்காட்டினார். எல்லாச் சட்டங்களையும் தெளிவாகப் படித்திருந்தும், தங்கள் இதயங்களை இறுக்கமாக மூடிச் செயல்பட்ட அக்கால யூத மறை வல்லுனர்களைப்போல் மாறாமல் இருக்க வேண்டுமானால், தூய ஆவியாரை நமக்குள் இயங்க அனுமதிக்க வேண்டியது மிகவும் அவசியம். நம் இதயங்களை, நன்மையை நோக்கித் திருப்புபவராகவும், நமக்குத் தூண்டுதல் அளிப்பவராகவும், நம் உள்ளுணர்வுகளைத் தட்டியெழுப்புபவராகவும் தூய ஆவியானவர் இருக்கின்றார். ஆகவே நம் இதயங்களிலும், பங்குத்தளங்களிலும், சமூகங்களிலும் தூய ஆவியார் குடிவரவேண்டும் என செபிப்போம்.

## கொழும்பு உயர் மறைமாவட்டத்தினால்..

## வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு நிவாரணம்





15

## புனித அந்தோனியார் திருவிழா - 2017



கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் வருடாந்த திருவிழா இம்மாதம் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

15

**ஆண்டவரே உம் ஆவியை அனுப்பி, மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர் (தி.பா 104)**




கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் வாழும் எல்லா தமிழ் மக்களுக்காகவும் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் வேண்டுகோளுக்கிணங்க அவரின் தலைமையில் கொழும்பு புனித யோசேவ்வாஸ் மன்றம் இத்திருவிழிப்பு நற்செய்தி விழாவை நடத்துகிறது. கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை, பேராயரின் பதிலாளர் அதிவணக்கத்திற்குரிய மனோகுமாரன் அடிகளார், மற்றும் திருகோணமலை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை போல் ரொபின்சன் அடிகளார் மற்றும் கொழும்பு மறைமாவட்டத்தில் பணியாற்றும் அனைத்து தமிழ் குருக்களும் ஒன்றிணைந்து இத்திருவிழிப்பை வழிநடத்துகிறார்கள்.

கொட்டாஞ்சேனை புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி வளாகத்தில் இத்திருவிழிப்பானது நடைபெறவுள்ளது. வருகிற ஆடி மாதம் 1ம் திகதி சனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும். தேவநற்கருணை ஆசீர்வாதமும், திருப்பலியும் இந்நிகழ்வுகளில் உள்ளடங்கும். சரியாக அதிகாலை 4.00 மணிக்கு ஆயர் அவர்களால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு காலை 5.00 மணிக்கு முடிவடையும். அனைத்து மக்களையும் இதில் பங்கு பற்றி இறையருள் பெற அன்போடு அழைக்கின்றோம்.

இரவு தேநீரும், ஒழுங்கு செய்து தரப்படும். தூர பங்குகளில் வாழும் மக்கள் தலைவர்கள் பஸ் வண்டிகளை ஒழுங்கு செய்து மக்களுக்கு உதவி கரம் நீட்டுமாறு கேட்டுக் கொள்கின்றோம். நோய் பிரச்சினைகள், கஷ்ட துன்பங்களுக்காக செபிக்க விசேட நேரங்கள் ஒதுக்கப்படும் என்று அறியத் தருகின்றோம்.

**தகவல் : அருட்தந்தை ஆனந்தன் பர்னாந்து புள்ளே**



அண்மையில் குருவானவராக திருநிலைப்படுத்தப்பட்ட அருட்பணி. மாலிந்த ஷேன் பீட்டர் விக்ரமசிங்க அடிகளார் தமது முதற் திருப்பலியை தமது சொந்த ஊரான கேகாலையில் ஒப்புக்கொடுத்துவிட்டு, ஊருக்கு வெளியிலான முதற் திருப்பலியை எட்டியாந்தோட்டை புனித மரியாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தார். அவருக்கு உதவியாக அருட்பணி. டேமியன் பர்ணாந்து அடிகளார் மற்றும் அருட்பணி. ஜுட் அடிகளார் கலந்துகொண்டனர். புதிய குருவானவர் தமிழ் முறைப்படி வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.

**படம் : ஜே. அந்தனி**

# புனித சூசையப்பர் ஆலயத் திருவிழா

## 25வது வருட வெள்ளிவிழா (1992 - 2017)



பதுளையாம் பதியில் ஹாலி-எல, ரொக்கத்தன்ன தோட்டத்தில் எழுந்தருளியுள்ள தொழிலாளரின் பாதுகாவலர், குடும்பங்களின் பாதுகாவலர், திருச்சபைப் பாதுகாவலர், நல்ல மரணத்தின் பாதுகாவலர் என்ற பெரும் புகழைப் பெற்றுள்ள புனித சூசையப்பர் திருவிழா வெள்ளிவிழாக் கொண்டாட்டம் வைகாசி மாதம் தொழிலாளர் தினமான மேதினம் 01.05.2017 அன்று வெகுவிமரிசையாக பதுளை மறைமாவட்ட ஆயரின் தலைமையில் கொண்டாடப்பட்டது.

01.05.2017 திங்கட்கிழமை மு.ப 11.00 மணிக்கு திருவிழா திருப்பலி மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சன்ட் பெர்ணான்டோ S.S.S ஆண்டகை தலைமையில் வெகு சிறப்பாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்று பதுளை பேராலய பங்கு தந்தை ஜுட் நிஸ ாந்த பெர்ணான்டோ அடிகளாரும் லுணுகல பங்குத் தந்தை இயூஜின் பெனடிக்ற் அ.ம.தி அடிகளாரும் திருவிழா திருப்பலியில் கலந்து சிறப்பித்தனர். ஆலயத்தின் 25வது வெள்ளிவிழாவை நினைவு கூறும் பொருட்டு ஆயர் அவர்களால் திருப்பலியின் பின் கேக் வெட்டப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

**தகவல் : திருமதி. அன்னம்மா சகாயம், ஆசிரியை**

# புனித அன்னை லூர்து கெபியின் 50வது வருட பூர்த்தி தினம்

## 1967 – 2017

திகனை, புனித வனத்து சின்னப்பர் ஆலய வளவில் அமைக்கப்பட்டுள்ள அன்னை லூர்து கெபியின் 50வது வருட பூர்த்தி தினம் எதிர்வரும் ஆனி 4ந் திகதி நினைவு கூறப்படுகின்றது.

இக்கெபி அப்போது பங்கு குருவாகவிருந்த அருட்தந்தை. பொனிபஸ் கொடிபிலி அடிகளாரின் கடும் உழைப்பால் உருவாக்கப்பட்டது. அப்புனித நாளில், "லூர்து மாமரி" என்ற பாடலை அமரர், அருட்சகோதரி. ஐரின் மோத்தா (படிவத்தை திருச்சிலுவை கன்னியர் மடம்) அனைவரையும் பக்தியுடன் பாட வைத்தார். அந்நாள் முதல் இந்நாள் வரை இப்பாடல் அனைவராலும் இசைக்கப்படுகிறது.

லூர்து அன்னை? தன்னை நாடிவருவோருக்கு அடைக்கலமும், பாதுகாப்பும் அருளி, கத்தோலிக்க விசுவாசத்தை அடியார் மத்தியில் நிலைத்திருக்கச் செய்கிறார். தொடர்ந்தும் அவள் அடியொற்றி வாழ்வோமாக!

**தகவல் : திருமதி. பற்றிமா செபஸ்டியன் பிள்ளை, திகனை.**







கொழும்பு புதுச்செட்டித்தெரு புனித வியாகுல அன்னை மறைப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து வணக்க மாதத்தின் இறுதி நவநாளை 28.05.2017 அன்று காலை 10.30 மணித் திருப்பலியில் சிறப்பித்தனர். அன்றைய தினம் புனித அன்னம்மாள் பாடசாலையில் மாணவர்கள் ஆசிரியர்கள் இணைந்து செபமாலை ஒப்புக்கொடுத்த பின்னர் அங்கிருந்து அன்னையின் திருச்சுரூபம் பவனியான ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. மாணவ தலைவர்கள் திருச்சுரூபத்தை தாங்கிச் செல்வதையும், ஏனைய மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் செபமாலை செபிப்பதையும் படத்தில் காணலாம்.

**தகவல் : புதுச்செட்டித்தெரு மறையாசிரியர்கள்.**

# திரு இருதயநாதர் மறைப்பாடசாலை வருடாந்த விளையாட்டு போட்டு – 2017



விளையாட்டு வினோதம் உடலுக்கும் உள்ளத்திற்கும் நல்லது. கடந்த 2017.05.10 புதன் அன்று 2017ம் ஆண்டிற்கான திரு இருதயநாதர் மறைப்பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி நடைபெற்றது. இதற்கு எமது உதவிப் பங்குத் தந்தை அருட்பணி. மைக்கல் சந்தனம் அடிகளார் தலைமை வகித்தார். இந்த விளையாட்டு போட்டியானது இரு இல்லங்களாக பிரிக்கப்பட்டு (புனித ஆசீர்வாதப்பர் / புனித சில்வேஸ்ரர்) போட்டிகள் நடாத்தப்பட்டது. இவ்விளையாட்டுப் போட்டிகள் சிறந்த முறையில் நடைபெற உதவி பங்குத் தந்தை அருட்பணி. மைக்கல் சந்தானம் அடிகளார், அருட்சகோதரர் பெனின், மறையாசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ மாணவிகள் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கினார்கள்.



எமது திரு இருதயநாதர் ஆலயத்தில் முதன்முதலாக திருப்பலியில் வாசக உடை அணித்து வாசகர்கள் பங்கேற்றார்கள். இவ் உடைகள் அளித்து வாசிக்கப்படும் பொழுது பக்தி உணர்வு மேலிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதை முதன் முதலாக எமது ஆலயத்திற்கு அறிமுகப்படுத்தியவர்கள் எமது பங்கில் இயங்கி வரும் பெற்றோர் சங்கத்தினர் ஆவர்ாகள்.

**தகவல் : திருமதி. கிறிஸ்டினா அன்ரன், இராஜகிரிய.**

ஞான ஒளி
GNANA OLI ඥාන ඔළි
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
04 ஆனி 2017 ஞாயிற்றுக்கிழமை.

## "நீங்கள் போய் எல்லா மக்கள் இனத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை மகன் தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்"

இம்மாதம் பரிசுத்த திருச்சபையானது தூய ஆவியின் பெருவிழா மூவொரு இறைவன் பெருவிழாவை கொண்டாடி மகிழ்கின்றது. "எனது ஆற்றலாலும் அல்ல சக்தியாலும் அல்ல ஆனால். எனது ஆவியாலே ஆகும்". (செக்கரியா 4:6) திருச்சபைக்கும் கிறிஸ்தவர்களுக்கும் தூய ஆவியே ஆற்றல், சக்தி, இயக்கம் எல்லாம். ஆம் பரிசுத்த திருச்சபையானது இன்று தூய ஆவியின் பெருவிழாவை கொண்டாடுகின்றது. திருச்சபையின் கடந்த கால வரலாற்றில் தூய ஆவியார் அறியாதவராக மறக்கப்பட்டவராக இருந்தார். ஆனால் புதிய ஏற்பாட்டில் தூய ஆவிக்கு முக்கியத்துவம் இருந்தும் அவர் மறக்கப்பட்டவராக இருப்பது என்பது புதிராகவே இருக்கின்றது. திருச்சபைக்கு உயிர் நாடி தூ ய ஆவிதான். இதனை நாம் திருவிவிலியத்தில் பல இடங்களில் காண்கின்றோம். உதாரணமாக இயேசுவின் பிறப்பில் தூ ய பேதுரு பெந்தகோஸ்தே நாளில் ஆற்றிய முதலுரையில் புனித பவுலின் நற்செய்திப்பணி வாழ்வில் திருத்தூதர்களின் வாழ்வில் இவ்வாறு திருவிவிலியம் முழுவதுமே தூய ஆவியார் செயற்படுவதை காண்கின்றோம். நுரையீரல் இன்றி மூச்சுவிட முடியாது அதுபோல் தூய ஆவியார் இன்றி கிறிஸ்தவமும் இல்லை. கிறிஸ்தவர்களுக்கு வாழ்வும் இல்லை.

அடுத்து வருவது மூவொரு இறைவன் பெருவிழா. "நீங்கள் போய் எல்லா மக்கள் இனத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை மகன் தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்". (மத்.28:19) திருமுழுக்கு எனும் அருளடையாளம் தண்ணீருக்குள் மட்டுமல்ல மாறாக நம்மை தமதிருத்துவத்திற்குள் மூழ்கடிக்கிறது. நாம் மூவொரு இறைவனுக்குள்ளும் மூவொரு இறைவன் நமக்குள்ளும் உறைகிறோம். எனவே கிறிஸ்தவ வாழ்வு என்பது மூவொரு இறைவனுக்குள் சங்கமிப்பதாகும். மூவொரு இறைவனின் வாழ்வென்பது தந்தை மகன் தூய ஆவியின் அன்பு உறவாகும். மூவொரு இறைவன் பற்றிய வெளிப்பாடு வெறும் கோட்பாடு அல்ல. மாறாக அது அன்புறவில் எழும் தெய்வீக வாழ்க்கை முறையாகும். மூவொரு இறைவன் மூன்று ஆட்களாக இருந்தாலும் ஒரே இறைத்தன்மையை கொண்டவர்கள். தனித்துவத்தை மதித்துச் சமத்துவம் பேணப்பட வேண்டும் என்பதே மூவொரு இறைவன் பெருவிழா கூறும் செய்தியாகும்.

எமது திருச்சபையின் புனிதர்களின் வரிசையில் மக்களால் பெரிதும் போற்றப்படுபவரும் விரும்பத்தக்கவருமாக திகழ்பவர் தூய அந்தோனியார் ஆவார். இவரது திருவிழாவை இம்மாதம் திருச்சபை நினைவுகூர்கின்றது. கோடி அற்புதரான தூ யவரின் வாழ்வு எவ்வாறு இயேசுவுக்கு உகந்த வாழ்வாக அமைந்ததோ அவ்வாறே அத்தூயவரின் வழியாக எமது ஆன்மீக வாழ்வும் இறைவனுக்கு உகந்ததாய் அமைய வேண்டுமென மன்றாடுவோம். பற்பல புதுமைகளாலும், தமது மறையுரையினாலும் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களில் இன்றும் வாழ்கின்ற இப்புனிதரின் வாழ்வு திருச்சபையின் மக்களாகிய எமக்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாய் அமைகிறது என்பதையும் மனதிற்கொள்வோம். அவரது பரிந்துரை வழியாக இறைவனிடமும், இயேசு கிறிஸ்துவிடமும் எமது மன்றாட்டுக்களை சமர்ப்பித்து வெளி ஆடம்பரங்களைத் தவிர்த்து உள்ளத் தூ ய்மையுடனும் உண்மையான பக்தியுடன் இத்திருவிழாவைக் கொண்டாடி மகிழ்வோம்.

அத்தோடு கடந்த மாதத்தில் எம் நாட்டின் பல பாகங்களிலும் மக்கள் முகம் கொடுத்த இயற்கை அனர்த்தத்தின் காரணமாக தமது வாழ்வாதாரங்களை, உறவுகளை, உடைமைகளை இழந்து நிர்கத்திக்கு உள்ளாகியிருக்கும் இவ்வேளையில் அவர்களுக்காக விசேட விதமாக மன்றாடும் அதேவேளை, தேவைக்கு அதிகமாக செய்யும் செலவுகளை தவிர்த்து, அம்மக்களுக்கு எம்மாலான உதவிகளை செய்து அவர்களின் வாழ்வினை கட்டியெழுப்ப உறுதுணையாக உதவிக்கரம் கொடுக்கும் நல்மனம் கொண்டவர்களாக வாழ்ந்திட முன்வருவோம்.

**இறையாசீருடன்**
**ஆசிரியர்**

# தூய ஆவியின் பெருவிழா

## தூய ஆவியினால் நாம் புது படைப்பாகின்றோம்



நமது நாட்டில் பல தேசிய திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. உதாரணம் தீபாவளி, இவ்விழாவில் சமய அனுசாரங்களோடு பல சமூகப் பண்புகளும் பிண்ணிப் பிணைந்துள்ளன. சமுதாயத்தில் அவ்வப்போது ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்துகின்றன. பாஸ்கா விழா, பெந்தகோஸ்து விழா, கூடாரப்பண்டிகை என்பன அவை. இம்மூன்று விழாக்களூடாக அவர்களது வரலாற்றிலே நடந்த மூன்று முக்கிய கட்டங்களை நினைவு கூர்ந்தனர். பாஸ்கா விழாவின் மூலம் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அவர்கள் விடுதலை பெற்ற இரவையும், அவ்விழாவிலிருந்து 50வது நாளன்று கொண்டாடப்பட்ட பெந்தகோஸ்து விழா மூலம் சீனாய் மலையில் மோயீசன் இறைவனிடமிருந்து திருச்சட்டம் பெற்ற நிகழ்ச்சியையும், நினைவுக் கூர்ந்தனர். 50ஆம் நாள் என்று பொருளுள்ள "பெந்தகோஸ்து விழா" அறுவடை முடிந்தவுடன் இறைவனுக்கு நன்றி கூறும் விழாவாகவும், கருதப்பட்டது. இவ்விழாவிற்கு ஜெருசலேமிலிருந்து 20 மைலுக்குள் வசித்த அனைத்து யூதர்களும், அந்நகருக்கு வந்து விழாவில் பங்கெடுக்க வேண்டும் என்ற சட்டம் இருந்தது. எனவே அது யூத சமுதாயத்தின் ஒரு எழுச்சி நாளாக புத்துணர்ச்சி தினமாக விளங்கியது.

பழைய இஸ்ராயேலரின் எழுச்சி நாளையே, இறைவன் புது இஸ்ராயேலாகிய தன் திருச்சபையின் எழுச்சி நாளாக, புத்துணர்ச்சி, தினமாக தேர்ந்தெடுத்ததில் வியப்பில்லை. அந்நாளிலேயே பரிசுத்த ஆவியானவர் இளந்திருச்சபையில் எழுந்தருளி வந்து இத்தகைய புத்துணர்வை ஊட்டுகின்றார். அவரைப் பெற்றுக்கொண்ட அப்போஸ்தலர்கள் தங்கள் கோழைத்தனத்தை விட்டுவிட்டு தைரியத்தோடு இறைவார்த்தையைப் போதிக்கின்றனர். பழையன கழிந்து புதியன புகுந்தது. அன்றே மூவாயிரம் பேர் (திப 2:41) தங்கள் பழைய வாழ்வை விடுத்து மனந்திருப்பி திருமுழுக்குப் பெற்றார்கள். எங்கும் புதுக்குரல், புத்துணர்ச்சி, புதுவாழ்வு தனி மனித வாழ்வில் இத்தகைய புதுவாழ்வு மனந்திரும்பி இறைவனோடு ஒப்புரவாகுவதில் அடங்கியுள்ளது. அத்தகைய ஒன்றிப்பை நிகழ்த்துபவர் தூய ஆவி.

### நாம் அனைவரும் ஒரே ஆவியால் ஒரே உடலுக்குள்ளாக திருமுழுக்குப் பெற்றோம். ஒரே ஆவியால் தாகந்தணியப் பெற்றோம்.

தூய ஆவியானவர் தனி மனிதனை மட்டுமல்ல, ஒரு சமுதாயத்தையே புதுப்பிக்கின்றார். மொழியால் இடத்தால், (பார்த்தர், மேர்த்தர், எலாமித்தர்...திப 2) இனத்தால் ஒரு கும்பல் போல நின்ற மக்களை ஒரு திருச்சபையாக ஒன்று சேர்த்தவர். அவர் பழைய இஸ்ராயேலரின் எழுச்சி தினத்திலேயே, புது இஸ்ராயேல் திருச்சபையாக உருவாயிற்று. மொழி வேற்றுமை, இட வேற்றுமை, இன வேற்றுமை, அவரது புதுமை, வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப்பட்டு திருச்சபை என்னும் ஒரே கடலில் சங்கமமாகி வருகின்றன. "யூதர் அல்லது கிரேக்கர், அடிமைகள் அல்லது உரிமைக்குடி மக்கள் நாம் அனைவரும் ஒரே ஆவியால் ஒரே உடலுக்குள்ளாக திருமுழுக்குப் பெற்றோம். ஒரே ஆவியால் தாகந்தணியப் பெற்றோம் (1 கொரி 12:13, 2ஆம் வாசகம்) இன்றும் நம்மையெல்லாம் ஒரே இறைமக்களாக இணைப்பதன் மூலம் தூய ஆவியானவர் நம் சமுதாயத்தைப் புதுப்பிக்கின்றார்.


### தனி வாழ்வில் புது வாழ்வு

இது தூய ஆவியின் யுகம் என்று கூறப்படுகின்றது. அவரது சலனங்களை திருச்சபையின் பல்வேறு இடங்களிலும் நாம் இன்று காண்கின்றோம். நமது கத்தோலிக்க திருச்சபையிலும் பல்வேறு வழிபாடுகளின் வழியாக அவரது இயக்கம் பரவி வருவதை நாம் காண்கின்றோம். மனிதன் இறைவனோடு ஒன்றித்து ஆழந்த சமய அனுபவம் பெற தூய ஆவி துணை நிற்கின்றார். என்பதை மேற்கண்ட உண்மைகள் உணர்த்துகின்றன.

15

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# மூவொரு இறைவன் பெருவிழா



11 ஆனி

இறைவன் நம் மனம் வாக்கு காயங்களுக்கு அப்பாற்பட்டவர் என்று கூறுகின்றோம். அன்பே கடவுள் (1 யோவான் 4:2) என்பதால் கடவுள் அன்பு மயமாக இருப்பதே நமது சிற்றறிவுக்கு எட்டாத பேருண்மை என்று கூறவேண்டும். இதனால் தான் பரம தந்தையை அன்பு செய்வதும், நாம் முற்றிலும் புரிந்து கொள்ள இயலாத மறையுண்மையாக விளங்குகின்றது. நாம் முற்றிலும் அறிந்து, தெரிய முடியாத கடவுளின் இந்த அன்பு வாழ்க்கையை, அவர் மனிதன் மேல் வைத்த அன்பிலிருந்து ஓரளவு புரிந்து கொள்ளலாம். இந்த அன்பை நுகரும் மனிதன், கடவுள் தன்னிலே எவ்வாறு அன்புமயமாய் - திரித்துவமாய் - இருக்கின்றார் என்பதை ஓரளவு புரிந்து கொள்ளலாம்.

## 1. இறைவன் தன்னை மனிதனுக்கு தருகின்றார்

திருமகன் தன்னை முழுவதும் பரம தந்தைக்குத் தருகிறார். இவ்வாறு ஒருவரை ஒருவருக்குத் தருவது எவ்வளவு நிறைவுள்ளதெனில் அந்த நிறைவே ஒரு தேவ ஆளாக தூய ஆவியாக நிற்கின்றார். இவ்வாறு அன்புமயமாக விளங்கும் இறைவனில், தேவ ஆட்கள் ஒருவரை ஒருவருக்குத் தருகின்றார்கள். இறைவன் நம் மீது அன்பு காட்ட விளையும்போது தன்னை நமக்குத் தருகின்றார். "ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்" (யோவா 3:16). இறைவன் நமக்குத் தந்த அன்பளிப்பு எத்தகையது? பரிசுத்த தமதிரித்துவத்தில் தேவ ஆட்கள் தங்களை முற்றும் ஒருவருக்கொருவர் தருவது போல இறைவன் நம் மேல் கொண்ட அன்பின் காரணமாக தமது மகனையே நமக்குத் தருகின்றார். அன்பளிப்பு எவ்வளவு சிறந்ததோ, அன்பளிப்புத் தருபவரோடு எவ்வளவுக்கு நெருங்கிய தொடர்பு உள்ளதோடு, அவ்வளவுக்கு சிறப்புடையது இந்த அன்பு. பரம தந்தை தமது திருமகனை விட சிறந்த அன்பளிப்பை நமக்குத் தர இயலாது. இப்பேரன்பின் பல்வேறு அதிர்வுகளை முதல் வாசகம் பதிவு செய்து தருகின்றது "அருள் நோக்கும், தயவும், பொறுமையும், அளவில்லாத இரக்கமும் பொருந்திய கடவுளே" (யாத் 34:6) என்று மோயீசன் கடவுளை அழைக்கின்றார்.

## 2. மனிதனும் தன்னை இறைவனுக்குத் தரவேண்டும்.

இறைவன் தன்னையே, தனது திருமகனையே நமக்குத் தந்திருக்க, அவ்வாறு தந்ததின் மூலமாக தன் அன்பை உணர்த்தியிருக்க, நாமும் நம்மையே இறைவனுக்கு அர்ப்பணிப்பதன் மூலமாக நம் அன்பை உணர்த்த வேண்டும். விசுவாசத்தினால் நாம் நம்மையே இறைவனுக்கு அளிக்கின்றோம் "தம் மகனில் விசுவாசம் கொள்ளும் எவரும் அழியாமல் முடிவில்லாத வாழ்வை பெறும் பொருட்டு அந்த ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்" (யோவா 3:6) எனவே, நமது விசுவாச வாழ்வு மூவொரு கடவுளை மறையுண்மையாக ஏற்றுக் கொள்வதில் மட்டுமல்ல, அத்திரித்துவத்தினுள் பரஸ்பர அர்ப்பணத்தை முன் மாதிரிகையாக பின்பற்றுவதிலும் அடங்கியிருக்கிறது.

அதி புனித திரித்துவம் நமது கிறிஸ்தவ வாழ்வின் முன் மாதிரிகை: கிறிஸ்தவ வாழ்வு என்பது அருட்சாதனங்களைப் பெறுவது, அருட்கொடைகளைப் பெறுவது, பேறு பலன்களைப் பெறுவது, கேட்ட காரியங்களைப் பெறுவது என்றவாறு நிற்கும் ஒரு பிச்சை பெறும் நிலை போன்று கருதப்படக்கூடாது. கிறிஸ்தவ வாழ்வு என்பது அடிப்படையாக ஒரு அன்பு வாழ்க்கை. அன்பின் தன்மையை கொடுப்பது. தன்னையே அர்ப்பணிப்பது. எனவே, பரம தந்தை நம் மேல் வைத்த அன்பினால் தன் திருமகனையே நமக்குத் தந்தது போல், நாமும் நம்மை இறைவனுக்கு தரவேண்டும். திரித்துவத்தின் தேவ ஆட்கள் ஒருவரை ஒருவருக்குத் தருவது போல நாமும் இறைவனுக்கு நம்மைத் தரவேண்டும். ஒருவன் தன்னை மற்றவனுக்கு தர தியாக சிந்தை தேவை, தன்னல மறுப்புத் தேவை. அதன் பொருட்டுத் தான் நம்மையே இறைவனுக்கு தரும் கிறிஸ்தவ வாழ்விலே மிகுதியான தியாகமும் தன்னல மறுப்பும் தேவைப்படுகிறது. நமது வாழ்க்கையிலே எவ்வளவு நேரத்தை, எவ்வளவு கவனத்தை, எவ்வளவு அக்கறையை, எவ்வளவு ஆர்வத்தை, எவ்வளவு அன்பை கடவுளுக்கென்று ஒதுக்குகிறோம்?

அயலாருக்கு நம்மை நாம் தருவதன் மூலமாக இறைவனுக்கு நாம் நம்மைத் தருகின்றோம். நமது சின்னஞ்சிறிய சகோதரருள் ஒருவனுக்கு செய்வதெல்லாம் அவருக்கு செய்வதாகும். (மத் 25.40) நமது அன்புக்காக, கவனத்திற்காக, அக்கறைக்காக்க, ஆறுதலுக்காக, நல்ல அபிப்பிராயத்துக்காக, முறையான மதிப்பீட்டிற்காக காத்திருக்கும் அயலாரின் வழியாக இறைவன் நமது அன்பைக் கேட்கின்றார். "நாம் கடவுளுக்கு அன்பு செய்ததில் அன்று, அவரே நமக்கு அன்பு செய்து நம் பாவங்களுக்குப் பரி காரமாக தம் மகனையே அனுப்பியதில் தான், அளித்ததில் தான் அன்பின் தன்மை விளங்குகின்றது. கடவுள் நமக்கு இவ்வாறு அன்பு செய்தார் எனில் நாமும் ஒருவருக்கொருவர் அன்பு செய்தல் வேண்டும் (1 யோவா 4:10-11) மூவொரு கடவுளின் அன்புக் குடும்பத்தை நமது வாழ்க்கைச் சூழலில் பிரதிபலிக்க சிறந்த வழி இதுதான். அவர்கள் ஒருவரை ஒருவர் அன்பு செய்வது போல் நாமும் ஒருவரை ஒருவர் அன்பு செய்தால் தான் ஆண்டவராகிய இயேசுவின் அருளும், கடவுளின் அன்பும், ஆவியின் நட்புறவும் (1 கொரி 13:13) நம்மோடு இருக்கும்.

**மானுட இனத்தை ஒரு குடும்பமாக பார்க்கும் அளவுக்கு, ஏற்கும் அளவுக்கு காட்சியும், இதயமும் விரிவடைய வேண்டும்! இத்தகைய சிறப்பியல்பினைப் பெற்று வாழ்பவன் காலத்தின் நிறைவினை கண்டுகழிக்கின்றான் கடவுளின் அரசினில் அங்கம் வகிக்கின்றான்.**

நன்றி
உயிரூற்று

## உயர்ந்த அன்பு


ஒரு சிறுவன் காட்டிலிருந்த ஒரு மரத்திடம் விளையாடுவது வழக்கம். அதன் கனியை உண்டு நிழலில் இளைப்பாறுவான். சிறிது காலம் அவன் அங்கு வரவில்லை. மரம் அவனை எதிர்பார்த்தது. ஒரு நாள் வந்தான். மரம் விளையாட அழைத்தது. அவனோ "நான் இப்போது பெரியவன் ஆகிவிட்டேன். எனக்கு விளையாட்டுப் பொருட்கள் வேண்டும். ஆனால் என்னிடம் பணம் இல்லை" என்றான். மரம் அவனிடம் "என்னிடமுள்ள கனிகளைப் பறித்து விற்று நீ விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொள்" என்றது. அவனும் அப்படியே செய்தான். சிறிது காலம் கழித்தபின் ஒரு நாள் மரத்திடம் வந்து "நான் வீடு கட்டப் போகிறேன்" என்றான். மரம் என் கிளைகளை வெட்டி வீடு கட்டிக்கொள்" என்றது. அவனும் அதை செய்தான். சிறிது காலம் கழித்து மரத்திடம் "நான் பயணம் செய்ய வேண்டும். ஆனால் என்னிடம் படகு இல்லை" என்றான். மரம் என் அடி மரத்தினை வெட்டி படகு செய்துகொள்" என்றது அவனும் அவ்வாறே செய்தான். பல ஆண்டுகளுக்குப் பின் வயது முதிர்ந்தவனாக அம்மரத்திடம், வந்தான் எப்போதும் போல அவனை விளையாட அழைத்தது. அவன் எனக்கு வயதாகிவிட்டது. விளையாடும் அளவிற்கு தெம்பு இல்லை. நான் உன் அருகில் படுத்து ஓய்வெடுக்கப் போகிறேன். என்றான். மரமும் அவனை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டது.

**நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்புக் கொண்டிருக்க வேண்டும். என்பதே என் கட்டளை தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவான் 15:13–14)**



# அமைதிக்கு ஓர் அன்னை

# புனித அன்னை திரேசா




1957இல் அன்னை தெரசா இங்கே வந்திருக்கிறார். அப்போது இவ்விடம் வெறும் பொட்டலாகக் கிடந்தது. இவ்விடத்தைத் தொழுநோயாளிகளின் மறுவாழ்வுக்குப் பயன்படுத்தலாமே என அன்னை எண்ணியிருக்கிறார். தம் கருத்துக்களை அப்போது மேற்கு வங்கத்தின் முதல்வராக இருந்த டாக்டர் பி.சி ராயிடம் கூறியிருக்கின்றார் அன்னை. முதல்வரும் அதற்கு இணங்கி டிட்டாகூரில் தரிசாகக் கிடந்த 34 ஏக்கர் நிலத்தையும் தொழுநோயாளர் குடியிருப்புக்காக, தெரசாவுக்கு அளித்துவிட்டார்.

இடம் கிடைத்துவிட்டது. இனி வீடுகளை எழுப்பவேண்டுமே. கல்கத்தா மாநகருக்கே சென்று பணம் திரட்டத் திட்டமிட்டார் அன்னை. மகளிர் இயக்கங்களை ஒருங்கிணைத்தார். அவர்கள் கையில் சிறுமணி ஒன்றைக் கொடுத்து வீடு வீடாகச் சென்று பணம் திரட்டக் கோரினார். "உங்களது அனுதாபத்தால் தொழுநோயாளியைத் தொடுங்கள்" (Touch a leper with your compassion) என்னும் வேண்டுகோளைப் பத்திரிகைகளின் வாயிலாகவும் சுவரொட்டிகள் மூலமாகவும் விடுத்தார்.

வங்காள அரசு நல்கிய 34 ஏக்கர் நிலத்தில் 400 வீடுகளைக் கட்டவேண்டுமென்பது அன்னையின் கனவு. அக்கனவு ஒரளவு நனவாகியிருப்பதை நாம் இன்று காண்கின்றோம். அழகிய 200 இல்லங்களையும் கண்கவரும் தோட்டங்களையும் கொண்ட இக்குடியிருப்பு சாந்தி நகர் என அழைக்கப்பெற்று வந்தது. தற்போது அது "காந்திஜி ப்ரேம் நிவாஸ்" என அறியப்படுகிறது. சாந்தி நகர் பல பிரிவுகளைக் கொண்டது. தொழுநோயின் தொடக்க நிலையில் உள்ளவர்கென்று ஒரு பிரிவு. தொடக்க நிலையில் இந்நோயைக் கட்டுப்படுத்துவது மிகவும் எளிது. நோய் முற்றிப் போனவர்களுக்கு என்று மற்றொரு பிரிவு. இங்கே அறுவைச் சிகிச்சையும் உண்டு. நோய் நீங்கி குணமடைந்தவர்கள் இருக்கும் பகுதி மூன்றாவது பிரிவு. இவர்கள் நல்ல நிலையில் இருப்பதனால் இவர்களுக்குப் பல குடிசைத் தொழில்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. பாய் முடைதல், கயிறு திரித்தல், பொம்மை செய்தல் போன்ற கைத்தொழில்களைச் செய்து இவர்கள் வருவாயை விருத்தி செய்து கொள்கின்றார்கள்.

இவற்றைக் கவனிக்கும்போது அன்னையின் தொலை நோக்கையும் நிர்வாகத் திறனையும் நம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது. "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்றார் சுவாமி விவேகானந்தர். அதனைக் கடைப்பிடித்து செயலில் காட்டிவிட்டவர் அன்னை தெரசா. தொழுநோயாளர்களுடைய இடுக்கண் களைய அன்னை எடுத்துக் கொண்ட முயற்சிகள் தான் எத்தனை! எத்தனை!

அன்னை தெரசா புரிந்துவரும் பணிகளுள் ஒன்று அநாதைக் குழந்தைகளை எடுத்துப் பராமரிப்பது. டெஸ்மன்ட்டோயின் என்னும் நூலாசிரியர் அன்னையைப் பற்றி எழுதிய நூலில் சிறு நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிடுகின்றார். கல்கத்தாவின் மக்கள் நெருக்கம் அதிகமான ஒரு தெருப்பகுதி நான்கு மாடிக் கட்டடம் ஒன்று அங்கே தெரிகிறது. அதில் எண்பது குடும்பங்கள் குடி இருக்கின்றன. சமையல் அறைகளே இல்லாத அக்கூட்டத்தில் திண்ணையில்தான் சமையல் நடக்கும். இதனால் அந்தக் கட்டடத்தின் சுவர்கள் யாவும் கரிபிடித்துப் போயிருந்தன.

இக்கட்டடத்தின் அறை ஒன்றில் எட்டுமாதக் குழந்தை ஒன்று படுத்திருக்கின்றது. அதனைச் சூழ்ந்து வேறு ஐந்து குழந்தைகள் அழுது கொண்டிருக்கின்றனர். அவர்களின் பெற்றோர் எங்கே? வறுமையின் பிடியில் சிக்குண்ட தந்தை வீட்டு வாடகை கொடுக்க முடியாமல் மனைவி மக்களை விட்டு ஓடிப்போய்விட்டான். இத்துயரத்தை தாங்க முடியாமல் தாயும் திடீரென்று தற்கொலை செய்துகொண்டாள். இப்போது அந்தப் பிள்ளைகளின் கதி என்ன?

"கொடிது கொடிது, வறுமை கொடிது அதனினும் கொடிது இளமையில் வறுமை" என்று சும்மாவா சொல்லியிருக்கிறார்கள்?

பட்டினியால் வாடிய சிறு குழந்தையால் வாய்விட்டு அழவும் முடியாமற் போய்விட்டது. செய்வதறியாது நின்றுகொண்டிருந்தாள் மூத்த பிள்ளை ரீத்தா. அவளுக்கு 12 வயது இருக்கும். அவள் அக்கம் பக்கத்து வீடுகளுக்குச் சென்று கூலிவேலை செய்ய முயன்றாள். அந்த சோகக் கதையை நூலாசிரியர் டெஸ்மன்ட் டோயிக் "ஸ்டேட்ஸ்மன்" என்னும் ஆங்கில தினத்தாளில், "அழவும் முடியாமற் போன மழலை" என்னும் தலைப்பில் எழுதி வெளியிட்டார். இதைப் படித்த பெரியவர்கள் பலர் அக்குழந்தைக்கு உதவி செய்திட முன்வந்தனர்.



## தொழுநோயாளர்களுக்கு தோள் கொடுத்த அன்னையின் இல்லங்கள்

இச்செய்தியைக் கேள்வியுற்ற அன்னை தெரசா விரைந்து வந்து அந்தக் குழந்தைகள் அத்தனை பேரையும் தாமே வளர்க்கப் போவதாகக் கூறி அவர்களைத் தமது சிசுபவனில் சேர்த்துவிட்டார். இப்போது ரீத்தா, பள்ளிப்படிப்பை முடித்து மணமாகித் தன் கணவரோடு வாழ்ந்து வருகிறாள். அவளுடைய தம்பி, தங்கைகளும் இன்று சிசுபவனில் சகோதரிகளின் அரவணைப்பில் வளர்ந்து வருகின்றனர். அழவும் முடியாமற் போன மழலை இன்று அழுகையை மறந்த மழலையாக வளர்ந்து வருகின்றான். தாய் தந்தையர் இல்லையே என்னும் குறையே அவனுக்கு இப்போது இல்லை. காரணம், அன்னையின் முயற்சியால் அவன் இன்று வெளிநாட்டில் செல்வமிக்க பெற்றோரின் வளர்ப்புப் பிள்ளையாக வாழ்ந்து வருகின்றான்.

தாய் மடத்துக்குப் பக்கத்திலுள்ள சிசுபவன் என்பது அநாதைக் குழந்தைகளின் இல்லம். இ∴து ஒரு சாதாரண இரண்டு மாடிக் கட்டிடம் தான். தெருக்கோடிகளிலிருந்தும், குப்பைத் தொட்டிகளிலிருந்து எடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஓர் இல்லம் தேவைப்பட்டது. ஒருநாள் முஸ்லீம் சகோதரர் ஒருவர் தெரசாவிடம் வந்து பெரிய வீடு ஒன்று வாடகைக்கு விடப்பட இருக்கிறது என்றார். அவர் கொடுத்த முகவரியை வைத்துக் கொண்டு ஆராய்ந்த போது அவ்வீடு தாய்மடத்துக்கு வெகு தொலைவில் இல்லை எனத் தெரியவந்தது. அன்னை அந்த வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அதற்கு "நிர்மல் சிசுபவன்" என்று பெயர் சூட்டினார்.

1953 மாசி மாதம் 15ம் நாள்தான் சிசுபவனுக்கு முதற்குழந்தை கொண்டு வரப்பட்டது. அது முழு வளர்ச்சியடையாத ஒரு குழந்தை. செய்தித் தாளினால் நன்கு பொதியப்பட்டு குப்பை மேட்டின் மீது தூக்கி எறியப்பட்ட ஒரு வேண்டாக் குழந்தை. அ∴து எவ்வளவு மோசமான நிலையில் கிடந்தது என்றால் அதனால் பால்குடிக்க இயலவில்லை. குழாய் மூலம் நாசி வழியாக உணவு செலுத்தவேண்டியிருந்தது. அதன் உயிருக்காக அன்னை நடத்திய போராட்டத்தில் அன்னை தான் வெற்றி கண்டார்.

இவ்வாறு எளிய முறையில் தொடங்கப் பெற்ற குழந்தைகள் இல்லம் இன்று ஏறத்தாழ 200 மழலைகளுக்குப் புகலிடமாக இருந்து வருகிறது. நாளொன்றுக்கு சராசரி மூன்று குழந்தைகள் சிசுபவனுக்கு கொண்டு வரப்படுகின்றன என்கிறார் சகோதரி ஆக்னெஸ். கல்கத்தா மாநகரிலுள்ள பல்வேறு மருத்துவனைகளிலிருந்தும் குழந்தைகள் சிசுபவனுக்கு அனுப்பப்படுகின்றன. மருத்துவமைகளுக்கு கொண்டு வரப்படும் வேண்டாக் குழந்தைகளும் சிசுபவனில்தான் இடம்பெறுகின்றன

**தொடரும்**

**தொகுப்பு**

**அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்**

# மன்னிக்க மறுத்த பணியாளர் உவமை

சென்ற இதழின் தொடர்ச்சி

- (மத் 18:21-35)



### 3. இயேசு காலப் பொருள்

இயேசுவின் பார்வையில் இறையாட்சிச் சமூகத்தில் மன்னிப்பு மிக முக்கியமானது. அது இறையாட்சி வாழ்வுக்கு அடிப்படையானது. இறையாட்சியின் மிக முக்கிய செயலாகிய பகிர்தல் போன்று மன்னிப்பும் இன்றியமையாதது. பொருள்களைக் குவித்து வைத்து அவற்றைப் பாதுகாக்கும் கவலையின்றிப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்பது போல, பழிச்சொற்களையும் காயங்களையும் குற்றச்சாட்டுக்களையும் எதிர்ச் செயல்பாடுகளையும் மனத்தில் குவித்து வைத்து (பொருள்களைக் குவித்து வைப்பது போல) நொந்து நொடிவதை விட அவற்றை உடனே மறந்து, மன்னித்து மனநிறைவுடன் வாழ்வதே இறையாட்சிச் செயல்பாடு என்பது இயேசுவின் பார்வை.

ஒருவர் செய்யும் குற்றத்திற்கான முழுப் பொறுப்பு அவர் மட்டுமல்ல. ஒருவர் செய்யும் குற்றத்திற்கு நாம் வாழும் சமுதாயமும் சக மனிதராகிய நாமும் பொறுப்பேற்றாக வேண்டும் என்பது இயேசுவின் பார்வை. ஒருவிதத்தில் அக்குற்றத்திற்கு அதனைச் செய்தவர் மட்டும் மையப்படுத்திக் குற்றத்தை நோக்காமல் அக்குற்றத்தில் பிறருக்குள்ள பங்கையும் சேர்த்தே பார்க்க வேண்டும் என்பது இயேசுவின் கருத்து. எனவேதான் குற்றம் செய்தவர் எத்தனை முறை குற்றம் செய்யினும் அவர் மன்னிக்கப்பட வேண்டும் என்பதை இயேசு வலியுறுத்துகிறார்.

யூத மரபில் குற்றம் செய்த ஒருவர் மூன்று முறை மன்னிக்கப்பட வேண்டும் என்னும் கருத்து இருந்தது. இதுவேராபிகளின் போதனையாக இருந்தது. மூன்று முறைக்கு மேல் ஒருவர் மன்னிக்கப்பட கூடாது என்று ராபி ஜோன் பெண் கனினா, ஜோஸ் பொன் யெகுடா போன்றவர்கள் கூறிவந்தனர். இந்த அடிப்படையில் தான் ஆமோஸ் 1,2 அதிகாரங்களில் வேற்று நாட்டினரும் யூத, இஸ்ரயேல் மக்களும் செய்த "மூன்று குற்றங்களுக்கு (மன்னிப்பு உண்டு). நான்காவது குற்றத்திற்கு நான் கொடுத்த தீர்ப்பை மாற்றவே மாட்டேன்" (1:2, 6, 9, 11, 13, 2:1, 4, 8) என்று மீண்டும் மீண்டும் உறுதிபடக் கூறப்பட்டுள்ளது. (தமிழ்ப் பொது மொழிபெயர்ப்பில் மூல பாடத்தின் தெளிவின்மையைப் போக்குவதற்காக, "எண்ணற்ற குற்றங்களைச் செய்ததற்காக, நான் கொடுத்த தீர்ப்பை மாற்றவே மாட்டேன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது).

மூன்று முறைதான் மன்னிக்க வேண்டும் என்னும் பொதுவான போதனை யூத மரபில் இருப்பினும் பேதுரு தம் தாராள குணத்தைக் காட்டுகிறார். அவர் இயேசுவிடம், "ஆண்டவரே என் சகோரதர், சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்து வந்தால், நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும்? ஏழு முறை மட்டுமா?" எனக் கேட்கிறார். யூத ரபிகள் மூன்று முறை மட்டுமே மன்னிக்கக் கூறிய வேளையில் இயேசுவின் சீடர் பேதுரு ஏழு முறை மன்னிக்கத் தயாராய் இருப்பது அவரது பெருந்தன்மையும் பல முறை மன்னிக்க வேண்டியதன் தேவையையும் வலியுறுத்துகிறது.

இயேசு ராபிகளின் மூன்று முறை மட்டுமே மன்னிக்க வேண்டும் என்னும் போதனையை ஏற்க மறுக்கின்றார். பேதுருவின் தாராள தன்மையும் போதாது எனக் கருதுகிறார். அவரது பார்வையில் மன்னிப்புக்கு எத்தனை முறை என்னும் பேச்சுக்கே இடமில்லை. மன்னிப்புக்கு எல்லை இல்லை. எத்தனை முறை ஒருவர் குற்றம் செய்யினும் அத்தனை முறையும் அவர் மன்னிக்கப்பட வேண்டும். இதையே அவர் மன்னிக்க வேண்டியது "ஏழு முறை மட்டுமல்ல, எழுபது தடவை ஏழு முறை" (வ22) என அறுதியிட்டுக் கூறுகிறார். இதற்கான காரணம், நாம் ஏற்கனவே பார்த்தது போன்று, மன்னிப்பு என்பது இறையாட்சி வாழ்க்கை முறையின் அடிப்படைப் பண்பு. அதுமட்டுமல்ல, ஒருவர் செய்யும் குற்றத்திற்கு அவர் மட்டுமே காரணம் அல்ல, நாமும் காரணம் தான்! இவ்வாறு இலாமேக்கின் "எழுபது ஏழு முறை பழிவாங்கப்படல்" இயேசுவிலே "எழுபது ஏழுமுறை மன்னிக்கப்படுவதில்" முற்றிலும் மாற்றம் பெற்று நிறைவு பெறுகிறது! எனவே எண்ணற்ற முறை மன்னிக்க வேண்டியது தவிர்க்கப்பட முடியாதது என்பதே இயேசுவின் பார்வை.

### 4. மத்தேயு நற்செய்தியாளர் பார்வையில்

மத்தேயு நற்செய்தி அதிகாரம் 18 இறையாட்சிச் சமூகத்தின் வாழ்க்கை முறை பற்றிப் பேசுகிறது. இறையாட்சி உறுப்பினரின் கூட்டு வாழ்வில் கண்டிப்பாய் இருக்க வேண்டிய சில பண்பு நலன்கள் பற்றி அது அழுத்தமாகக் குறிப்பிடுகிறது.

8:1-5 : இறையாட்சி உறுப்பினர்கள் தங்களுக்குள் யார் பெரியவர், யார் சிறியவர் என்று வேறுபாடு காட்டக்கூடாது. அவர்கள் யாவரும் குழந்தைகளைப் போல் எளிமையாய் வாழ வேண்டும். 18:6-9, இறையாட்சிச் சமூகத்தில் யாரும் யாருக்கும் துர்மாதிரிகையாய் (இடறலாய்) இருக்கக் கூடாது. யாரும் பிறர் பாவத்தில் விழக் காரணம் ஆகக் கூடாது. 18:10-14, இறையாட்சிச் சமூகத்தில் "சிறியோர்" கடவுள் பார்வையில் சிறப்பு மிக்கவர்கள். "சிறியோர்" என்பது இங்குக் குழந்தைகளை விட வழி தவறிச் சென்றோரையே குறிக்கும். இறையாட்சிச் சமூகத்தில் வழி தவறிச் சென்றோரைச் சமூகத்திலிருந்து புறம்பாக்கக் கூடாது. அவர்களைத் தேடிச் சென்று கண்டுபிடித்து மீண்டும் இறையாட்சிச் சமூகத்தில் இணையச் செய்ய வேண்டும். 18:15-20 இறையாட்சிச் சமூகத்தில் தவறுகள் செய்தோர் திருத்தப்பட வேண்டும். அவர்களைத் தனியாகவும், ஒரு சிலருடன் இணைந்தும், இறையாட்சிச் சமூகத்தின் மூலமாகவும் திருத்த முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். இருப்பினும் தொடர்ந்து திருந்த மறுப்பவர் சமூகத்தின் இறையாட்சி வாழ்வுக்கு....

தொடர்ச்சி 15ம் பக்கம்



# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

138

# "பெற்ற தாய் மறந்தாலும் நான் உன்னை மறக்கவேமாட்டேன்"



எமது எதிர்பார்ப்புகள் உடைந்த போது வாழ்வில் பிரச்சினைகள் தலைதூக்கும் போது இறைவனும் எம்மைக் கைவிட்டுவிட்டார் என்று சோர்ந்து போகிறோம். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் தான் ஏசாயா கூறுகிறார். (ஏசாயா49:14-16)

இறைவா எம்மைக் கைவிட்டுவிட்டீர் என்று நாம் கூறுகிறோமே தவிர நாம் இறைவனைக் கைவிட்டு விட்டோம் என்று எண்ணுவதில்லை. இறைவனை விட்டு நாம் தூரமாகும் போது இறைவனை ஏசித் திட்டுகிறோம். நாம் எங்கே பிழைவிட்டோம் என்று பொதுவாகச் சிந்திப்பதில்லை.

"என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது". (விடுதலைப்பயணம் 20:3) நீங்கள் என்னோடு சேரும் போது விடுதலையை அனுபவிப்பீர்கள். ஆனால் வேறு தெய்வங்களோ உங்களை அடிமைப் படுத்துவர். இம்மக்கள் வேறு தெய்வங்களை வழிபட்டனர். இப்படிப்பட்ட நேரத்தில் இறைவன் கொடுத்த மறுமொழி என்ன?

"பால் குடிக்கும் தனது பிள்ளையை தனது வயிற்றில் உருவாகிய தனது பிள்ளையைத் தாய் சில வேளை மறக்கக் கூடும். ஆனால் நானோ உங்களை மறக்கவே மாட்டேன்" என்று இறைவன் கூறுகிறார்.

முன்பு இறைவனை நம்புவோரின் நெற்றியில் சீல் வைப்பர். அதாவது எனக்கு நீங்கள் சொந்தம் என்பதற்கே அந்த அடையாளம் இடுவர். ஆனால் இங்கு "இதோ எனது உள்ளங்கைகளில் உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன்" என்கின்றார் இறைவன். கைகள் வல்லமையின் அடையாளம். எனது கைகளில் உங்களை எனக்குத் தெரிகிறது. ஆகவே உங்களுக்கு எதிராக எனது வல்லமையைப் பாவிக்க முடியாது என்கின்றார் இறைவன். இது அன்பின் ஆழமான வெளிப்பாடாகும். உங்களை என்னால் கைவிட முடியாது என்கின்றார் இறைவன்.

மத்தேயு 6:24-34

இறைவனை முழு பலத்தோடும், முழு மனதோடும், முழு சக்தியோடும், அன்பு செய்ய வேண்டும். அன்று அடிமைகள் இருந்தனர். ஒருவருக்கு அடிமையாக வேலை செய்யும் போது வேறு ஒருவரைத் தனது எசமானாக ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆகவே இருதலைவர்களுக்கு வேலை செய்யமுடியாது. அடிமை என்பது நாம் ஒருவருக்கு உரிமையாகி விடுவோம். இந்த உரிமையை இருவருக்குக் கொடுக்க முடியாது. அதேபோன்று இறைவனுக்கு அரைமனதோடு எம்மைக் கொடுத்து வேலை செய்யமுடியாது. அரமைற் மொழியில் மம்மோனா என்பது பொதுவாக நாம் நம்பிக்கை வைக்கும் சொத்துக்கே செல்வத்துக்கே அச்சொல்லைப் பாவிப்பர். நாம் எதைச் செல்வமாக எண்ணுகிறோம். எமக்குச் சொத்துத் தேவை. ஆனால் அதை இறைவனாக்கக் கூடாது. காரணம் கொஞ்சம் கொஞ்சமாக நாம் அச்சொத்துக்கு அடிமையாகி விடுவோம். இறைவனுக்கும் சொத்துக்கும் இடையில் எமது மனம் அலைபாயத் தொடங்கும். இரண்டுக்கும் இடையில் மோதல் ஏற்படும். படிப்படியாக அச்செல்வத்திற்கு அடிமையாகிவிடுவோம்.

மேலும் கவலைப்பட வேண்டாம் கலவரப்பட வேண்டாம் என்கின்றார் இறைவன். எமக்குச் சரீரமும் உயிரும் உள்ளன. உயிர் வாழ உணவு தேவை. உடலை மூட உடை தேவை. இவற்றைத் தேட வேண்டும். இதற்காக முயற்சி செய்யவேண்டும். ஆனால் அதை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் நோய்தான் வரும். ஆகவே அவற்றை நினைத்துக் கலவரப்படக்கூடாது. இவற்றுக்காகக் கவலைப் படுவதால் நாம் ஒரு முழம் வளரமுடியாது. அதாவது வாழ்நாளைக் கூட்ட முடியாது. மாறாக எமது ஆயுள் குறையும். நோய் வந்துவிரைவில் இறந்துவிடுவோம். பறவைகளை இங்கு உதாரணமாகக் கூறுகிறார். பறவைகள் கலவரப்படுவதுமில்லை சேர்த்துவைப்பதுமில்லை. பறவைகளை இறைவன் இவ்வாறு கவனித்தால் எம்மைக் கைவிட்டுவிடுவாரா? கவலைப்படக் கவலைப்பட எமது ஆயள்தான் குறைந்துவிடும்.

சரீரத்துக்கு உடை தேவை. இங்கே காட்டுப் புல்லை உதாரணமாகக் கூறுகிறார். இதை இவ்வாறு அழகாக ஆக்க முடியுமானால் எம்மை இன்னும் மேலாகப் பார்ப்பார் அல்லவா.

பெரிய விசுவாசம் இருந்தால் எமது வாழ்வில் புதுமைகள் நடக்கும். விசுவாசத்திற்கு எதிரான சொல் கவலைப்படுதல் கலவரப்படுதல் ஆகும். மேலே கூறப்பட்ட குணங்களைக் கொண்ட இறைவனை நாம் முழு மனதோடு சந்தேகம் இல்லாமல் நம்பவேண்டும். அனைத்திற்கும் மேலாக இறைவனது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையதையும் தேடவேண்டும். நீதி நேர்மை அன்பு இவற்றை எமது வாழ்வில் கடைப்பிடித்தவாறு இறைவனை முழு மனதோடும், பலத்தோடும், சக்தியோடும் நம்பினால் இவைகளைப் பெறக்கூடிய வழிகளை இறைவன் காட்டுவார். வீணாகக் கவலைப்பட்டு கலவரப்பட்டு எமது வாழ்நாட்களைக் குறைக்கக் கூடாது. அவரது வாக்குறுதி ஒருபோதும் பொய்க்காது.

தொடரும்

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**



# இறைவார்த்தை வழிபாடு

WLX

- பேதுரு -

## தூய ஆவி பெருவிழா (04.06.2017)

**வாசக விளக்கம்:** பெந்தகோஸ்தே எனப்படும் தூய ஆவியின் வருகைப் பெருவிழாவானது பாஸ்கா காலத்தின் நிறைவு நாளான ஐம்பதாம் நாளையும், அறுவடையின் முதற்கனியை கடவுளுக்கு நன்றியாக ஒப்புக்கொடுக்கும் நாளையும், இஸ்ராயேல் மக்கள் அனைவரும் எருசலேம் தேவாலயத்தில் ஒன்று கூடும் நாளையும், சீனாய் மலையில் கடவுள் கொடுத்த பத்துகட்டளைகளை நினைவுகூரும் நாளாகவும் இருப்பதை நமக்கு நினைவூட்டுகின்றது. ஒரு மனிதனை பயம் ஆட்கொள்கின்றபோது அவன் மனக்குழப்பம் அடைகின்றான். அதே நிலையைத்தான் இன்றைய இறைவார்த்தைகளில் நாம் பார்க்கின்றோம். இயேசுவின் உயிர்ப்பை முழக்கமிடவேண்டிய சீடர்கள் மனக்குழப்பம் அடைந்து முடங்கிக் கிடந்த சூழலில் இயேசு அவர்களுக்குத் தோன்றி சமாதானம் தெரிவிக்கின்றார். அவர்களது இல்லக்கதவுகளை மட்டுமல்ல உள்ளக் கதவுகளையும் இயேசு திறக்கின்றார். அத்துடன் தூய ஆவியையும் அளித்து திடப்படுத்துகின்றார். எங்கு அமைதி, சமாதானம், இருக்கின்றதோ அங்கு அச்சமோ பயமோ இருக்க முடியாது ஏனெனில் அமைதி ஆண்டவரை சார்ந்தது. நீதியை நிலைநாட்டுவது. இன்றைய நாள் திரு அவை புதிதாய் பிறக்கின்ற நாளாகவும் இருக்கின்றது. இன்றைய நாளில் நாம் பெற்ற தூய ஆவியார் நமக்குள் இருந்து செயலாற்ற அருள் வேண்டித் தொடரும் பலியில் பங்கு கொள்வோமாக.

**முதல் வாசகம் : தி.ப 2:1-11**
தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் பேசத் தொடங்கினர்

**பதிலுரைப் பாடல் :** ஆண்டவரே உம் ஆவியை அனுப்பி மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்

**இரண்டாம் வாசகம் : 1 கொரி 12:3-7,12-13**
நாம் எல்லாரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா உம்மில் நம்பிக்கை கொண்டோரின் இதயங்களை நிரப்பியருளும். அவற்றில் உமது அன்பின் தீபற்றியெரியச் செய்தருளும் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவான் 20:19-23**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அருட்பெருஞ்சுடரே அன்பிறைவா! திருச்சபையின் இயங்கு சக்தியாய் விளங்கும் தூய ஆவியாரின் பெருவிழாவை கொண்டாடும் நாம் திருச்சபையின் தலைவரான திருத்தந்தைக்கும், ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் அவர்கள் தம் பணிவாழ்வை முன்னெடுத்துச் செல்லத் தேவையான வலிமையையும், ஆவியாரின் கொடைகளையும், கனிகளையும் பொழிந்தருள வேண்டுமென்று...

அமைதியின் ஊற்றே அன்பிறைவா! உயிர்த்த ஆண்டவர் இயேசு சீடர்களுக்கு தோன்றி அமைதியை அளித்து ஆற்றுப்படுத்தினார். நாட்டை வழிநடத்தும் தலைவர்களும் சமய சமூகப் பொறுப்பாளரும் அமைதியின் தூதர்களாக செயல்பட்டு உண்மைக்கும் நீதிக்கும் சான்று பகர்ந்து நாட்டில் அமைதியை உருவாக்கும் பணியில் நம் ஆளுமையை செலுத்திட வேண்டிய வரங்களை அவர்கள்மீது பொழிந்தருள வேண்டுமென்று...

சமாதானத்தின் முழு வடிவே அன்பிறைவா! திருமுழுக்கின் வழியாக தூய ஆவியைப் பெற்றுக்கொண்ட நாமும், எமது அறியாமையை அகற்றி உயிர்த்த இயேசுவுக்கு சான்றுபகரவும், தனி மனித வாாழ்விலும் குடும்ப வாழ்விலும் பொது வாழ்விலும், அநீதியை அகற்றி பீதியை நீக்கி சீடர்களைப் போன்று துணிவுடன் செயல்பட வேண்டிய வரங்களை எம்மீது பொழிந்தருள வேண்டுமென்று...

## மூவொரு கடவுள் பெருவிழா (11.06.2017)

**வாசக விளக்கம்:** விசுவாசத்தையும், நம்பிக்கையையும் அச்சாணியாகக் கொண்டு மூவொரு கடவுள் என்ற மறையுண்மைப் பெருவிழாவைக் கொண்டாட வந்திருக்கும் அன்பு நெஞ்சங்களே! பிதா சுதன் பரிசுத்த ஆவி என்ற கடவுளின் குடும்பம் பற்றி இன்று நாம் சிந்திக்க அழைக்கப்பட்டுள்ளோம். அன்பும், பரிவும் குடும்பத்தில் தொடங்குகின்றது. மூவொரு கடவுளின் ஒன்றித்த செயல்பாடே நாம் காணும் இப்படைப்பும் இதன் இயக்கமும் தொடர் பராமரிப்பும் ஆகும். இன்றைய மறையுண்மைப் பெருவிழாவானது நம் விசுவாச வாழ்விற்கு வளம் சேர்க்கின்றது. ஆதியிலே உலகைப் படைத்தபோதும் சரித்திரத்திலே இஸ்ராயேல் மக்களை அடிமைத் தளையிலிருந்து மீட்டபோதும் மேகத்தூணாக இருந்து வழிநடத்தியபோதும் தந்தையாகவும், மண்ணுலகில் மனிதனாய் பிறந்து நம் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தபோது மகனாகவும், உயிர்த்த பின் நம்முள்ளிலிருந்து ஆற்றுப்படுத்துகின்ற தூய ஆவியானவராகவும் இறைவன் இருக்கின்றார். தந்தை, மகன் தூய ஆவி மூவரும் ஒரே அன்பில் இணைந்து ஒன்றித்திருப்பதுபோல நாம் ஒவ்வொருவரும் உறவில் நிலைத்து வாழ மூவொரு கடவுளிடம் இருந்து மன்றாடுவோமாக.

**முதல் வாசகம் : வி.ப 34:6-4, 8-9**
இரக்கமும் பரிவும் உள்ளவர் கடவுள்.

**பதிலுரைப் பாடல் :** என்றென்றும் நீர் புகழப்பெறவும் ஏத்திப் போற்றப் பெறவும் தகுதி உள்ளவர்

**இரண்டாம் வாசகம் : 2 கொரி 13:11-13**
இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா இருந்தவரும் இருக்கின்றவரும் வரவிருக்கின்றவரும் எல்லாம் வல்லவருமான கடவுள் தந்தை மகன் தூய ஆவியாருக்கு மகிமை உண்டாகுக. அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவான் 3: 16-18**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முழு முதல் இறைவனே அன்பிறைவா! மூவொரு இறைவன் மீது விசுவாசமும் நம்பிக்கையும் வைத்து தன் மக்களை வழிநடத்தும் திருச்சபைக்காகவும் அதன் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் உமது ஞானத்தை வழங்கி அனைவரும் ஒன்றுபட்டு ஒரே குடும்பமாக திருச்சபையை வழிநடத்தத் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

ஒற்றுமையின் திரு உருவே அன்பிறைவா! தந்தை, மகன், தூய ஆவி மூவரும் ஒரே அன்பில் இணைந்து ஒன்றித்திருப்பது போல நாம் ஒவ்வொருவரும் உறவில் வாழவும் வளரவும் மூவொரு கடவுள் எனும் குடும்பம் போல் எம் குடும்ப வாழ்வு அமையவும், பங்கு என்ற குடும்பத்தில் வாழும் ஏழை மக்களுக்கு எம்மாலான உதவிகள் புரியவும், செபம், தவம் தியானம் இறைவார்த்தைப் பகிர்வு போன்றவற்றில் ஈடுபடவும் வேண்டிய நல்மனதை தந்தருள வேண்டுமென்று...

நம்பிக்கையின் நங்கூரமே அன்பிறைவா! மூவொரு கடவுளை நம்பி விசுவாச வாழ்வில் முன்னேறிச் செல்லவும் எல்லாச் செயல்பாடுகளுக்கும் தொடக்கமும் முடிவுமாக மூவொரு இறைவன் இருக்கிறார் என்பதை நம்பவும், மறையுண்மைகள் எம் விசுவாச வாழ்விற்கு வளம் சேர்க்கின்றன என்பதை புரிந்து கொள்ளவும் வேண்டிய மனப்பக்குவத்தை எமக்குத் தந்தருள வேண்டுமென்று....



## புனித அந்தோனியார் பெற்ற சிறப்புப் பெயர்கள்

சிறுபிள்ளை வயதிலேயே நல்லொழுக்கம் மிக்க
சிறுவனாய் வளர்க்கப்பட்டார்
பக்தி தாழ்ச்சியெனும் பண்பு நிறை குணங்களாலே
**சின்ன சம்மனசு** என்றழைக்கப்பட்டார்

மடை திறந்த மறையுரைகள்
மனங்களை ஊடுருவ
கேட்போர்கள் வியப்பைக் கொண்டார்
**தூய ஆவியின் அருட்கொடைகளைப் பெற்ற**
**பெரும் மேதை**யென
துறவிலே சிறந்து நின்றார்.

கத்தோலிக்கத் திருமறைக்கு களங்கம் கற்பிப்போர்க்கு
கண்டனங்கள் தினம் முழங்கினார்
கயமைமிகு பிரிவினையை கடுமையாயச் சாடுவதில்
**சம்மட்டியாய்** அவர் விளங்கினார்.

திருத்தந்தையின் முன்னிலையில்
தம் வாக்கின் வலிமையாலே
பட்டமொன்று பெற்றுக்கொண்டார்
**வாக்குத்தத்தத்தின் பேழை**யென
அவராலே அழைக்கப்பட்டு
நாவன்மையால் எதிரிகளை வென்றார்

தங்கு தடையின்றி நற்செய்தி மேற்கோள்களையே
தம் மறையுரைகளில் புகுத்திப் பொழிந்தார்
பொங்கும் மகிழ்ச்சியினால் பாப்பிறையும்
புனிதரையே **வேதாகமம் கருவூலம்**
என்று மொழிந்தார்

அவர் மறைந்து புனிதர் பட்டம் பெற்ற
சில தினங்களிள் பின்னாலே
அறிவிப்பொன்று வெளியானது
**உலகமனைத்திற்குமான புனிதர்**
அவரென்று திருத்தந்தை நா மொழிந்தது

திருத்தந்தை பன்னிரெண்டாம் பத்திநாதர்
புனிதரவரை **திருச்சபையின் மாமேதை** என்றார்

தினம் தினம் பரிந்துரை வேண்டி
திசையெல்லாம் மக்கள் நாடும் திருநிலையில்
புனிதர் அந்தோனியார் உயர்ந்தே நின்றார்





இயேசுவின் அன்பில் உயர்வதற்கு நம் உதவும் வகையில் வழிநடத்தும் கரங்களை பற்றி அன்னை மரியாவின் கரங்களில் நம்மை ஒப்படைப்போம்

ஒவ்வொரு அருள் பணியாளரும் தனி கிறிஸ்தவ குருத்துவ மேய்ப்புப் பணியில் சோர்வின்றி ஈடுபட வேண்டும். எளிமையாக இருக்கவும், அஞ்சா நெஞ்சுடன் செயலாற்றவும் அன்னை மரியிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்

மரியாவை நாம் நோக்கும் போதெல்லாம் அன்பு, பரிவு ஆகியவற்றின் புரட்சிக்கரமான பண்பை நாம் நம்புகின்றோம். பணிவும், கனிவும் பலம் இழந்தோரின் பண்புகள் அல்ல, மாறாக அவை பலமுள்ளோரின் பண்புகள் என்பதை மரியிடம் நாம் காண்கின்றோம்

# 50வது உலக தொடர்பாடல் தினத்தை முன்னிட்டு திருத்தந்தை பிரான்

## தொடர்பாடலும் இரக்கமும் ஒரு பலன் கொடுக்கும் சந்திப்பு




அன்பான சகோதர சகோதரிகளே!

தூய இரக்கத்தின் ஆண்டானது எம்மை தொடர்பாடலுக்கும், இரக்கத்திற்கும் இடையேயுள்ள தொடர்பினை பற்றித் தியானிக்க அழைக்கின்றது. இரக்கத்தின் தந்தையின் வாழும் அவதாரமாகிய கிறிஸ்துவின் ஒன்றிப்பில் இணைந்துள்ள திருச்சபை-யானவள் தனது இருப்பிலும், செயல்களிலும் இரக்க-த்தினை செயற்படுத்துகின்ற ஒரு பிரத்தியேக கருவியாகத் திகழ அழைக்கப்படுகின்றாள். நாங்கள் சொல்பவற்றிலும், அவற்றினை சொல்கின்ற முறையிலும், எமது வார்த்தையிலும், வாழ்விலும், இறைவனின் இரக்கத்தையும், அன்பினையும், மன்னிப்பையும் வெளிப்படுத்த வேண்டும். அன்பு தனது இயல்பிலேயே ஒரு தொடர்பாடலாகும் அது நம்மை திறந்த மனநிலைக்கும், பகிர்விற்கும் இட்டுச் செல்கின்றது. எமது இதயங்களும், செயல்களும் பிறரன்பினாலும், இறையன்பினாலும் ஆட்கொள்ளப்படுகின்றபோது, எமது தொடர்பாடல்களும் கடவுளது சொந்த ஆற்றலினாலும், வல்லமையாலும் ஆட்கொள்ளப்படுகின்றன.

கடவுளுடைய மகன்களாக, மகள்களாக நாம் எல்லோரும் எதுவித விதிவிலக்குமின்றி எல்லோருடனும் தொடர்பாடலை ஏற்படுத்த அழைக்கப்படுகின்றோம். இறைதந்தையால் அனுப்பப்பட்ட இயேசுக்கிறிஸ்து கொடுக்கின்ற வாழ்வின் முழுமையை பெறுகின்ற பயணத்தில் இறைமக்களை திடப்படுத்துவதோடு, அவர்களது இதயங்களைத்தொட்டு, சிறப்பான முறையில் இரக்கத்தினை அவர்களுக்கு வழங்குகின்ற விதத்தில் திருச்சபையின் வார்த்தைகளும், செயல்களும் அமைதல் வேண்டும். அதாவது நாம் அன்னையாம் திருச்சபையின் கரிசனையை ஏற்றுக் கொள்ள முனைவதோடு, அதனை ஏனையவர்களுடனும் பகிர்ந்து கொள்வதனூடாக கிறிஸ்துவை ஏனையவர்கள் அறியவும், அன்பு செய்யவும் முயல வேண்டும். இந்தக் கரிசனைதான் விசுவாச சத்தியத்தின் உட்கருவாக அமைகின்றது. நமது போதனையாலும், சாட்சிய வாழ்வாலும் இக்கரிசனையானது அடுத்தவருக்கு வாழ்வு கொடுக்கின்ற நெருப்புப் பொறியாக மிளிருகின்றது.

தொடர்பாடலானது மக்களிடையே பாலங்களை அமைக்க வல்ல சக்தியையும், சந்திப்புக்களை ஏற்படுத்தி, பலரை உள்வாங்குகின்ற ஆற்றலையும், அதனூடாக சமுதாயத்தினை வளப்படுத்துகின்ற திறனையும் பெற்றிருக்கின்றது. மக்கள் தமது வார்த்தைகளையும் செயல்களையும் விழிப்புணர்வோடு தெரிவு செய்வதன்மூலம் புரிந்துணர்வற்ற தன்மைகளை அகற்ற முயற்சிப்பதும், காயப்பட்ட நினைவுகளை குணப்படுத்தி, அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முயல்வதும் எத்துணை அழகானது. வார்த்தைகள் தனிப்பட்டவர்களுக்கிடையிலும், குடும்பங்களுக்கிடையிலும், சமூக குழுக்களுக்கிடையிலும் இணைப்பை ஏற்படுத்த வல்லவை. இந்நிலைப்பாடானது வெளித்தோற்ற உலகிலும், இணைய உலகிலும் சாத்தியமானது. நமது வார்த்தைகளும், செயல்களும் அடுத்தவரை குற்றம் சாட்டுகின்ற நச்சுவட்டங்களிலிருந்தும், வெறுப்பின் வெளிப்பாடுகளை தூண்டுவதன் மூலம் தனிப்பட்ட நபர்களையும், நாடுகளையும் தொடர்ச்சியாக சிறைப்பிடிக்கின்ற, பழிவாங்குகின்ற மனநிலைக-ளிலுருந்தும் நாம் விடுபட நமக்கு உதவி செய்ய வேண்டும். கிறிஸ்தவர்களுடைய வார்த்தைகள் ஒன்றிப்பினை ஏற்படுத்த தூண்டுவனவாகவும், சிறப்பாக தீமையை உறுதியுடன் எதிர்க்கின்ற சூழ்நிலைகளில் உந்துசக்தியாகவும், அவர்கள் உறவுகளையும், தொடர்பாடல்களையும் உடைக்காமல் இருக்கத்தூண்டுவனவாகவும் அமைதல் வேண்டும்.

இக்காரணத்திற்காக, காயப்பட்ட உறவுகளை குணப்படுத்தவும், அற்றுப்போன அமைதியையும், நல்லிணக்கத்தையும் குடும்பங்களிலும், சமூகங்களிலும் மீள கட்டியெழுப்பவும் நாம் இரக்கத்தின் வல்லமையை மீளக்கண்டுகொள்ள வேண்டுமென நான் நல்லெண்ணம் கொண்ட அனைவரையும் அழைத்து நிற்கின்றேன். நமது தொடர்பாடலுக்கும், புரிந்துணர்வுக்குமான பாதைகளில் தடைக்கல்லாகவும், தனிப்பட்டவர்களை சிறைப்பிடிக்கின்ற காரணிகளாகவும், நமது பழைய காயங்களும், அடிக்கடி ஞாபகம் வருகின்ற மனத்தாங்கல்களும் பல வழிகளில் அமைவதை நாம் அனைவரும் அறிவோம். இதே நிலை மக்களுக்கிடையிலான உறவுநிலைகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இந்த ஒவ்வொரு நிலைகளிலும் இரக்கமானது புதிய முறையிலான வார்த்தைகளையும், உரையாடலையும் உருவாக்க வல்லது. ஷேக்ஸ்பியர் அழகாகக் கூறிய வார்த்தைகள்: “இரக்கத்தின் குணாதிசயங்கள் கட்டாயப்படுத்தப்படுபவையல்ல மாறாக வானிலிருந்து நிலத்தினை நோக்கி மென்மையாக வீழ்கின்ற மழைத்துளி போன்றது. அது இரு தடவைகள் ஆசீர்வதிக்கப்படுகின்றது: அது அதனை கொடுப்பவனை ஆசீர்வதிக்கின்றது. அத்தோடு அதனை பெறுபவனையும் ஆசீர்வதிக்கின்றது. (The Merchant of Venice, Act IV Scene I) (வெனீஸ் நகர வர்த்தகன் - நாடகம், அரங்கு 4, காட்சி I )

என்றுமே நம்பிக்கையினை இழக்காத இரக்கத்தினால் எமது அரசியல் மற்றும் ராஜதந்திர மொழிப்பாவனைகள் ஆட்கொள்ளப்படுவது சிறப்பானது. நிறுவனங்கள் மற்றும் அரசியல் துறைகளில் பொறுப்பாயுள்ளவர்களையும், பொது அபிப்பிராயங்களை ஏற்படுத்துகின்ற பொறுப்புக்களில் உள்ளவர்களையும், வித்தியாசமாக சிந்திப்பவர்கள், செயல்படுபவர்கள், தவறிழைத்தவர்கள் மட்டில் அவர்கள் பேசுகின்ற வார்த்தைகள் மட்டில் மிக்க கவனத்துடனும், கரிசனை யுடனும் செயற்படும்படியாகவும், கேட்டுக் கொள்கின்றேன். இச்சந்தர்ப்பங்களை தவறாக பயன்படுத்துவதற்கும், அவநம்பிக்கையின் சுவாலைகளை எரியவிடுவதற்கும், பயம் மற்றும் வெறுப்புணர்வுகளை தூண்டுவதற்கும் ஏதுவான சோதனைகள் இலகுவாக எம்மை ஆட்கொள்ளக்கூடும். இதற்கு மாறாக, மக்களை புரிந்துணர்வுப்பாதைகளில் வழிநடத்தவல்ல மனத்துணிவு தேவையானதாகும். அடிப்படையில் இவ்வகையான ஆக்கபூர்வமான போக்குகளும், படைப்பாற்றல்மிக்க திடனும்தான் தொன்றுதொட்டு வரும் பல முரண்பாடுகளுக்கு உண்மையான தீர்வினையும், நிலையான அமைதியை கட்டியெழுப்பக்கூடிய வாய்ப்புக்களையும் நல்குகின்றன. “அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்: ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்”.(மத்தேயு, 5:7-9)

திருச்சபையின் ஆயர்களாகிய நமது பணிகளும், எமக்கே உரித்தான தொடர்பாடல்முறைகளும், ஓர் எதிரியின் மேல் கொள்ளும் வெற்றி மேலாதிக்கத்தினை வெளிப்படுத்துவதாகவோ உலகினால் தொலைக்கப்பட்ட -வர்களாக, புறக்கணிக்கப்பட்டவர்களாக உள்ளவர்களை தரக்குறைவாக எண்ணுவதாகவே இருக்கக் கூடாதென்று நான் எவ்வளவோ விரும்புகின்றேன். தீர்ப்பின் உணர்வற்ற தன்மையை மட்டுமே அறிந்தவர்களுக்கு, அதன் இதமான உணர்வுகளை அனுபவிக்கவும், மனித வாழ்வின் துன்பங்களை குறைக்கவும் இரக்கமானது உதவ வல்லது. நமது தொடர்பாடல் வழிமுறைகள், பாவிகளை நீதிமான்களிலிருந்து பிரித்துவைக்கின்றவர்கள், அம்மனநிலையிலிருந்து விடுபட உதவுவனவாகும். நாம் பாவ சூழ்நிலைகளான வன்முறை, இலஞ்ச ஊழல், மற்றும் பிறரை சுரண்டுதல் போன்றவைகளை இனம் கண்டு அதேவேளையில், கடவுள் ஒருவரே மனிதர்களின் உள்ளாழத்தை அறிபவராக இருப்பதனால், மனிதர்களை தீர்ப்பிடவும் கூடாது. தவறிழைப்போரைக் கண்டித்துத்திருத்துவதும், தீமைகளையும் அநீதியான செயற்பாடுகளை நிராகரிப்பதும் இவற்றினால் பாதிக்கப்பட்டவர்களை விடுவிப்பதும், விழுந்தவர்களைத் தூக்கிவிடுவதும் எமது பணியாக இருக்க வேண்டும். யோவான் நற்செய்தி கூறுகின்றது, “உண்மை உன்னை விடுவிக்கும்” (யோவான் 8:32). இயேசு கிறிஸ்துவே இறுதியும், நிலையானதுமான உண்மை. அவரது மென்மையான இரக்கமே நமது உண்மையை அறிவிக்கின்ற பணியினையும், அநீதியினை கண்டிக்கின்ற பணியினையும் அளவிடுகின்ற அளவுகோலாகும். நமது அடிப்படை இலக்கானது உண்மையை அன்பினால் மேலோங்கச் செய்வதாகும். (எபேசியர், 4:5) அன்போடு பேசப்பட்டு, சாதுவான இரக்கத்தோடு கூடிய மனநிலையில் வெளிவந்த வார்த்தைகளால் மட்டுமே பாவப்பட்ட இதயங்களைத்தொட முடியும். நீதி மயப்படுத்தப்பட்ட கடினமான வார்த்தைகளும், செயல்களும் நாம் மனமாற்றத்திற்கும், சுதந்திரத்திற்கும் இட்டுச் செல்ல நினைப்பவர்களை தூர விலக்கிச் செல்வதற்கும் அவர்கள் உள்ளத்தின் ஒரு கைவிடப்பட்ட மனநிலையையும் தமது செயல்களை நியாயப்படுத்தும் மனநிலையையும் வளர்த்து விடும்.

இரக்கத்தில் வேரூன்றிய ஓர் சமூகம் என்பது நடைமுறைச்சாத்தியமற்ற அல்லது கட்டுப்பாடுகளே இல்லாததொன்றாகத்தான் இருக்கமுடியுமெனச் சிலர் எண்ணுகின்றனர். ஆயினும் நாம் நமது குடும்பங்களில் கைக்கொண்ட முதல்மையான உறவு நிலை அனுபவங்களை மீளாய்வு செய்து பார்ப்போம். ஏனெனில் நமது ஆற்றல்களுக்கும் சாதனைகளுக்கும் அப்பால் நமது பெற்றோர் நம்மை நாம் யார் என்பதை வைத்தே அன்பு செய்து மதித்து வந்துள்ளனர். பெற்றோர்கள் இயல்பாகவே தமது பிள்ளைகளுக்கு சிறந்தவற்றையே கொடுக்க நினைப்பார்கள். ஆயினும் இவ்அன்பானது எவ்வித நிபந்தனைகளையும், வரையறைகளையும் கொண்டதல்ல. ஓர் குடும்ப வீடானது நம்மை எப்போதும் வரவேற்கின்ற ஓர்

இல்லமாகும். (லூ
ஒரு சமுதாயமான
புதிய மனிதர்கள்
அடையப்போட்டிபே
தளமாக இராது எ
வரவேற்று ஆதரிக்
என்றும் திறந்திருக்
இருக்க வேண்டுமெ
விருப்பம்.

இச்செயற்பா
நடைபெறுவதற்கு,
செவிமடுக்கக்கற்று
வேண்டும். தொடர்
ஏற்படுத்துவதென்ப
பகிர்தல் என்பது
ஏற்றுக்கொள்வதும்
ஒருவருக்கொருவர்
செவிமடுப்பதுமாகு
என்பது சாதாரண
பார்க்க மேலானது
சாதாரணமாக தக
அடிப்படையாக செ
ஆனால் செவிமடு
தொடர்பாடலோடு
ஒரு நெருங்கிய
ஏற்படுத்துகின்றது.
எம்மை சரியாக
செய்ய தூண்டுவ
பார்வையாளர்களா
முகவர்களாகவும்
இருக்கின்ற செயற்
நிலையைத்தவிர்க்
மேலும் செவிமடுத்
நமது கேள்விகளை
சந்தேகங்களையும்
கொண்டு, ஒருவர்
அருகருகே பயணி
மையப்படுத்தப்பட்ட
போக்கைத் தவிர்த்
ஆற்றல்களையும்,
பொது நன்மைக்க
பயன்படுத்துவதை

செவிமடுத்தல்
இலகுவானதல்ல.
சர்ந்தப்பங்களில்
நடந்து கொள்வது
செவிமடுத்தல் என்
அவதானித்தல், வி
ஆவல் கொள்ளுத
கருத்தை மதித்து,
சிந்தித்து ஏற்றுக்
என கருத்துப்படும்
விதத்தில் தற்கொ
சுயபரித்தியாகம்
எவ்வாறு மோயீச
முன்னிலையில் நி
நாமும் எமது கா
களைந்து உறவா
முன்னிலையில் உ
பூமியில் நிற்பது
வேண்டும். (வி.ப.
கற்றுக்கொள்வதெ
உண்மையில் ஓர்
அருளாகும். அது
கேட்டுப்பெற வேe
பின்னர் பல்வேறு
ஊடாக பயிற்சி
செயலுமாகும்.

மின்னஞ்சல்
குறுஞ்செய்திகள்,
வலையமைப்புக்க
பரிமாற்றங்கள் அ
ஒருவரிடையே இ
தொடர்பாடல் வ
தொடர்பாடல் இது
மேற்கொள்ளப்படு
இல்லையா என்ப
தீர்மானிப்பது தொ
மாறாக அத்தொட
சாதனங்களை ஞா
விவேகத்தோடும்
பாவிக்கின்ற மனித
மனித ஆற்றல்கள
சமூக வலையமை
நிலைகளை மெரு

# ...சிஸ் அவர்களின் செய்தி

க். 15:11-32).
து முற்றிலும்
கூடி முதன்மை
பாடுகின்ற ஒரு
ால்லோரையும்
கின்ற, வாயில்கள்
க்கும் இல்லமாக
மன்பதே எனது

டு
நாம் முதலில்
க் கொள்ள
பாடலை
து பகிர்தலாகும்.
ஒருவரையொருவர்
,
ா
ம். செவிமடுத்தல்
மாக கேட்பதிலும்
. கேட்டல் என்பது
வல் திரட்டுவதை
காண்டது.
ப்பதென்பது
தொடர்பட்டு
உறவை
செவிமடுத்தல்
செயல்களை
தோடு, வெறுமனே
ாகவும்.

பாட்டு
கின்றது.
தல் என்பது
ளயும்,
பகிர்ந்து
ஒருவரோடு
த்து, ஒரு
எதேச்சாதிகாரப்
ந்து, நமது
கொடைகளையும்
ாக
யும் குறிப்பதாகும்.
ல் என்பது
பல
செவிடர்கள் போல்
இலகுவானது.
பது கவனத்துடன்
விளங்கிக் கொள்ள
ல், அடுத்தவரது
அதனை நன்கு
கொள்ளுதல்
இது ஒரு
டை அல்லது
போன்றது.
ன் எரியும் முட்செடி
ன்றது போல
லணிகளைக்
டுபவருக்கு
ள்ள புனித
போன்று நிற்க
3:5) செவிமடுக்க
ன்பது
விசேடமான
நாம் இரந்து
ண்டிய கொடையும்,
முயற்சிகள்
சய்ய வேண்டிய

கள்,
சமூக
ள், வார்த்தை
னைத்துமே ஒருவர்
டம்பெறும் பல்வேறு
கைகளாகும். ஒரு
யசக்தியுடன்
கின்றதா
தனை
ழில்நுட்பமல்ல.
ர்பாடல்
னத்தோடும்,
தேவைக்கு ஏற்ப
உள்ளங்களும்,
நமே ஆகும்.
ப்புக்கள் உறவு
கூட்டுவதோடு

சமுதாய நலனையும் அதிகரிக்கலாம். அதேவேளை அவ்வலையமைப்புக்கள் தனிமனித, குழுக்களுக்கிடையிலான பிரிவுகளுக்கும், பிளவுகளுக்கும் காரணமாகவும் இருக்க இடமுண்டு. இன்றைய இணைய உலகானது மனிதர்களை உற்சாகப்படுத்தி ஆதரிக்கின்ற அல்லது மறு பக்கத்தில் உதாசீனப்படுத்துகின்ற ஓர் பொது சதுக்கமாகவும், சந்திப்பு கூடாரமாகவும் அமையலாம், மனிதர்களின் ஆக்கபூர்வமான கருத்துப்பகிர்வின் அல்லது விதண்டாவாதமான சச்சரவுகளுக்கும் கருத்துமோதல்களையும் வளர்க்கும் தளமாகவும் அமையவும் இடமுண்டு. இந்த ஜுபிலி ஆண்டில் இரக்கம் உண்மையில் வாழப்படுகின்ற ஒன்றாக, நாம் ஒருவர் மற்றவரை அறியவும், விளங்கிக் கொள்ளவும் தேவையான உறுதியுள்ள உரையாடல்களின் ஊற்றுவாயாக இடம் பெற வேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன். அதே வேளையில் இந்த உரையாடல்கள் குறுகிய மனநிலைகளை அழித்து, அடுத்தவரை மதிக்காத தன்மைகளை போக்கி, எல்லா வகையான வன்முறைகளையும், பாகுபாடுகளையும் இல்லாமல் செய்வதாக. (Misericordiae Vultus, 23) (இரக்கத்தின் திருமுகம், 23) இணையத்தளமானது நாம் சிறந்த குடிமக்களாக வாழ உதவுகின்றது. இணைய வலையமைப்புக்களில் அங்கம் வகித்தலென்பது மறுபக்கத்தில் நம்மால் காண முடியாத நிலையிலுள்ள அயலவர்களின் மாண்பையும், மரியாதையையும், நாம் மதிக்க வேண்டிய பொறுப்புணர்வையும் உள்ளடக்கியுள்ளது. இணையத்தளத்தை ஓர் ஆரோக்கியமான, பகிர்வு மனப்பான்மையுள்ள சமூகத்தை கட்டியெழுப்பும் நோக்குடன் விவேகத்தோடு பாவிக்கலாம்.

தொடர்பாடலானது எங்கே, எப்படி இடம் -பெற்றாலும் பல மனிதர்களுக்கு அகலமான வாயில்களைத் திறந்து விட்டுள்ளது. இது ஒரு உயரிய, பொறுப்பு வாய்ந்த இறைவனின் சிறந்த கொடையாகும். இந்த தொடர்பாடல் சக்தியை ஒருவரோடொருவர் அன்னியோன்னியப்படுத்தக்கூடியது என குறிப்பிட்டுக் கூற நான் விரும்புகின்றேன். தொடர்பாடலுக்கும், இரக்கத்திற்கும் இடையிலான சந்திப்பானது ஒருவரையொருவர் கண்காணிக்கின்ற, ஆறுதல்படுத்துகின்ற, குணப்படு -த்துகின்ற தோழமைக்கு உட்படுத்துகின்ற நெருங்கிய உறவுக்கு இட்டுச் செல்லுகின்றபோது பலனளிப்பதாக அமைகின்றது. உடைந்து, பிரிவினைகளால் பிளவுபட்டுள்ள உலகில் இரக்கத்தோடு தொடர்பாடலை ஏற்படுத்துவதென்பது ஓர் ஆரோக்கியமான, சுதந்திரமான, சகோதரத்தவமுள்ள நெருங்கிய உறவினை கடவுளின் பிள்ளைகளுக்கிடையிலும், மனித குடும்பத்தில் அங்கம் வகிக்கின்ற எல்லா நமது சகோதர சகோதரிக்கிடையிலும் ஏற்படுத்துவதாகும்.

**திருத்தந்தை பிரான்சிஸ்**

**24 ஜனவரி 2016**

**வத்திக்கான்**

# நவீன தொடர்பாடலும், இன்றைய நற்செய்திப் பணியும்






அஞ்சாதீர்கள் நான் உங்களோடு இருக்கின்றேன்" (எசா 43:5) அனைத்துலக மாந்தர்க்கும் மீட்பளிப்பதற்காக ஆண்டவர் கிறிஸ்து நிறுவிய கத்தோலிக்க திருச்சபை, நற்செய்தியை அறிவிப்பது இன்றியமையாதது என்னும் உணர்வால் உந்தப்படுகிறது. ஆகவே, சமூக தொடர்புக் கருவிகளை பயன்படுத்தி மீட்புச் செய்தியை அறிவிப்பதும், கருவிகளை சரியாக பயன்படுத்தும் முறைபற்றிக் கற்பிப்பதும் தன் கடமையென்று கருதுகிறது (2ஆம் வத் ஒரு சமூக தொடர்புக் கருவிகள் இயல் 1 எண் சூ 3)

"உலக தொடர்பாடல் தினத்தை" கொண்டாடுகின்ற வேளையில, தொடர் பாடலையும், அதன் விளைவுகளையும் சிந்திக்கும் பாணியல் இன்றைய நாள் அமைகின்றது. எங்களுடைய காலத்தில் எதிர்பார்ப்பையும், நம்பிக்கையும் தொடர்புபடுத்தும் தினமாக இது கருதப்படுகிறது. தொடர்பாடல் என்னும்போது இருவருக்கிடையில் நடைபெறும் ஒரு கருத்து மாற்றம் எனக் கூறலாம். இன்றைய தொடர்பாலின் ஊடக கத்தோலிக்க நற்செய்தி அறிவிப்புப் பணி பெரும் இடத்தை வகிக்கின்றது. எனவே தான் இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூடிய வேளையில்,



சமூக தொடர்பாடலுக்கு முக்கிய இடம் கொடுத்து அது பற்றிய ஆவனமொன்றையும் வெளியிட்டார்கள்.

சமூகத் தொடர்பாடல் கருவிகள் வாயிலாக மனித வாழ்க்கையின் போக்கு மாறிக் கொண்டே வருவதை யாரும் மறுப்பதற்கில்லை. இம்மாற்றங்கள் பலர் உணராத வகையில் மிக நுணுக்கமாக முறையில் திகழ்ந்தது. பண்பாட்டிலும், நாகரீகத்திலும் ஏற்படுத்தி வரும் தாக்கங்கள் இன்றும் உண்மையில் கவலை தருவதாகும். இத்துறை மனிதரின் அறிவு வளர்ச்சிக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் உதவுவதை விட மிகுதியாக பொழுபோக்குத் துறையாகவே வளர்ந்து வருவதை நாம் காணலாம். தொடர்பாடல் வளர்வதை யாராலும் தடுக்க முடியாது. காரணம் இன்றைய நவநாகரீக முறைகளுக்கேற்ப தொடர்பாடலும் வளர்ந்து கொண்டே செல்கின்றது. இதன் பின்புலத்தில் வரும் மனித தாக்கங்களை பற்றி யாரும் கவலைய கொள்வதில்லை. காரணம் இன்றைய நவீன தொடர்பாடல் பெரும்பாலும் மனிதனை தவறான பாதைக்கு இட்டுச் செல்கின்றதேயன்றி சரியான பாதையில் வழிநடத்துவது மிகவும் குறைவாகவே இருக்கின்றது.

என்றாலும் சமூக தொடர்பாடலை விட்டு மனிதனால் விலகி நிற்க முடியாது. சமூகத் தொடர்பாடல் கருவிகள். "கடவுளின் கொடைகள்" என திருத்தந்தை 12ஆம் பியோ குறிப்பிட்டுள்ளார். ஆகவே இக்கொடைகளை பயன்படுத்தி சமுதாயம் பயன்பெற வேண்டும். அத்தோடு இதன் நவீன முறைகளை பின்பற்றி வருகின்ற கருவிகளை கொண்டு நற்செய்தி பணியினை முன்னெடுத்துச் செல்லவும் வேண்டும் என்பதும் மிகப் பெரிய அவா.

உலக தொடர்பாடல் தினத்தை கொண்டாடுகின்ற வேளையில், இலங்கையில் அதன் தாக்கமும் அதனை பயன்படுத்திய நற்செய்தி அறிவிப்ப பணியும் மிக இன்றியமையாததாகும்.

இலங்கையில் வளர்ந்து வந்துள்ள முரண்பாடுகளும், மோதல்களும் திருச்சபையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்நிலையில் இத்தொடர்பாடலை கொண்டு இலங்கை நாட்டில் நற்செய்தி அறிவிப்பு பணி என்பது மிகவும் சவாலான ஒன்று. திருச்சபையின் நற்செய்தி அறிவிப்பு பணியின் இலக்காகிய இறையாட்சி என்பது. இக்காலகட்டத்தில் இலங்கையில் தனித்துவம் மிக்க ஒன்றாகும். எவ்வாறு இதனை பரப்பலாம் உதாரணமாக இன்றைய மக்கள் கையில் தொபேசி கருவி இல்லாமல் இல்லை. இன்றைய கருவிகள் 'Smart Phone" என்று அழைக்கப்படும் புதிய தொழல்நுட்ப கருவிகளை மையமாக கொண்டு வடிவமைக்கப்படுகின்றது. இதனுள் காணப்படும் விசேட வடிவமைப்புக்களான Face book, whats App, Viber , Imo, messanger மற்றும் பல இணைப்புக்களை கொண்டு நற்செய்தி அறிவிப்பு பணியினை மேற்கொள்ளலாம். இதனால் பலர் பயன் பெறுவதோடு மட்டுமல்லாது, சவாலான எம் நாட்டின் சிறுபான்மையினமாக கத்தோலிக்கராக நாம் தொடர்ந்து கிறிஸ்துவை அறிவிக்கும் பணியில் எம்மை தொடர்ந்தும் நிலைநிறுத்தலாம்.

தாமாக விரும்பி வாசிப்போர், பார்ப்போர் யாவரும் இதனை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் இந்த நற்செய்தி அறிவிப்பு பணியின் முக்கிய குறிக்கோளாக இருப்பது, தொடர்பாடலை சரியான முறையில் பயன்படுத்தி, இதன் ஒழுக்க நெறிக்களுக்கேற்ப கடைப்பிடிக்க வேண்டும். எனவே இலங்கை நாட்டில் உள்ள மறைமாவட்டங்கள், அதன் சூழமைவுகள், தனித்துவத்தை புரிந்து கொண்டு



அதனை தேவையுணர்ந்து இப்பணியினை தொடர்ந்தாற்ற வேண்டும். இதற்காக பல சாவல்கள் இன்றளவும் காத்துக் கொண்டிருக்கின்றன. எனவே இலங்கை சூழமைவில் நவீன தொடர்பாடலுடனான நற்செய்தியானது ஏட்டுச் சுரைக்காய் போல் ஆகிவிடாமல் மக்களின் வாழ்வியலை பாதித்து அதன் தாக்கத்தை ஏற்படுத்தும் பணியாக அமைய வேண்டும்.

இன்றைய சூழமைவு நிலையினை இலங்கை மக்கள் நடுவில் தோன்றியுள்ள மாற்றங்கள், விவிலிய இறையியல் படிப்பினைகளை கருத்திற் கொண்டு நற்செய்தி பணியினை அறிவிக்க வேண்டும். உலக தொடர்பாடல் தினம் எம்மை அழைத்து நிற்பது இதுவே. காரணம் கிறிஸ்துவே தொடர்பாடலின் மையம். நாம் செயற்படும் இத்துறையில் ஒத்த சிந்தனை கொண்டு ஒத்துழைத்து மனித சமுதாயத்தின் ஒன்றிப்புக்கும், நற்செய்தி அறிவிப்பு பணிக்கும் பயன்பட்டு தொடர்பாடலில் புதுயுகம் படைத்து கிறிஸ்துவை எடுத்துச் சொல்வோம்.

ஆக்கம் :
சகோ. டிலோய்ட்சன் பெர்ணாண்டோ







ஆடை அழகும்
தலைமுடி அழகும்
ஒப்பனை செய்வதும்
**அழகே.**
ஆனால் நிரந்தர அழகு
அறிவுள்ளவையாக

நம்மை உருவாக்கும்
**கல்வியே!**
நல்ல நட்பும்
நல்ல புத்தகமும்
நல்ல அனுபவங்களுமே
**சிறப்பான அழகு**

## முயற்சி



வாழ்க்கை என்னும் கடலில்
நம்பிக்கை என்னும் படகில்
உண்மை என்னும் துடுப்பில்
இனிமை என்னும்
கரையைச் சேர முடியும்.

**முழுமை என்ற**
**முயற்சி மட்டும்**
**உன்னிடம் இருந்தால்**




**சித்திரச் சொல்லுக்கு சிந்தையில்**
**வளம் சேர்ப்பது கல்வி**
**மாறி வரும் உலகில் புதியன படைப்பது கல்வி**
**உலகம் செதுக்க உளிகள் படைத்து**
**அறிவின் கூர்மையால் அற்புதம் செய்வது கல்வி**
**உடலில் உறுதிகொண்டு ஒவ்வொரு விதையும்**
**விருட்சமாக வீரியம், கொடுக்கும் கல்வியில்**
**சிறந்து மானுடம் செழிக்க**

## சுவடுகள் பதிப்போம்.

# மூவொரு இறைவனில்...

புனித லூசியா (கன்னி பிரகாசியம்மாள்) மறைசாட்சி கி.பி 304 இவர் சிராக்யுஸ் நகரில் வாழ்ந்தார். இவரது தாய் இரத்தப்பெருக்கினால் வேதனைப்பட்டார். இதனால் தாயும் மகளும் காட்டோனியாவுக்குத் திருப்பயணம் மேற்கொண்டு அங்குள்ள ஆகத்தாவின் ஆலயத்தில் உருக்கமாக மன்றாடினார். அன்றிரவு ஆகத்தா லூசியாவுக்குக் கனவில் தோன்றி "உன் தாய்க்குத் தேவையான உடல் நலனைப் பெற்றுக்கொடுக்க உன் மன்றாட்டே போதுமானதாய் இருக்கும்போது ஏன் என்னிடம் கேட்கிறாய்? உன் கற்பென்னும் லீலி மலரைக் கொண்டு இறைவனுக்கேற்ற இல்லிடம் தயாரித்துள்ளாய். உன் விசுவாசமே உனக்கு இப்போது உதவுவதற்குப் போதுமானது?" என்றார். தாயும் நலமடைந்தார்.

லூசியா தாயின் அனுமதியுடன் சீராக்யுசுக்குத் திரும்பி தன் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடுத்தார். இளைஞன் ஒருவன் ஏற்கனவே இவரை மணந்துகொள்ள முயற்சி செய்திருந்தான். இவளது கற்பின் வாக்குறுதியைக் கேட்டுக் கலங்கினான். பழிவாங்கும் எண்ணத்துடன் "இவள் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவள்" என உயர் அலுவலரிடம் குற்றம் சாட்டினான். மேலும் அவன் லூசியாவிடம் "உன்னை அடித்து நொறுக்கும் போது உனக்குப் பேசுவதற்குக் கூட நா எழாது" என்றான். லூசியா, "இறையடியாள் நான் சரியான சொற்களைச் சரியான நேரத்தில் சொல்லத் தூ ய ஆவியானவர் துணை நிற்பார். ஏனெனில், தூய வாழ்வு வாழ்வோர் யாவரும் தூய ஆவி வாழும் ஆலயங்கள்" என்றார். "விலைமகளிர் நடுவே உன்னைத் தள்ளுவார்கள். அப்போது தூய ஆவி பறந்துவிடுவார்" என்றான். "எனது விருப்பத்திற்கு மாறாக நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் எனக்கு இருமடங்கு வெற்றி உண்டு புரிந்துகொள்" என்றார் லூசியா.

ஆவேசமடைந்த அவன், லூசியாவின் மீது காய்ச்சிய எண்ணெயை ஊற்றியபோதும் அவளை யாரும் அசைக்க இயலவில்லை. அந்த எண்ணெயும் அவருக்கு தீங்கிழைக்கவில்லை. ஆத்திரம் கொண்டவர்கள் அவள் தொண்டையில் வாளைப் பாய்ச்சினார்கள். இவ்வாறு வீர மங்கை மறைசாட்சியாக மரண வாயிலை அடைந்தார்.

**வினாக்கள்**

1. லூசியா யாரிடம் உருக்கமாக வேண்டினாள்?
2. ஆகத்தா லூசியாவின் வேண்டுதலுக்கு கூறிய பதில் என்ன?
3. லூசியா எவ்வாறு மரண வாயிலை அடைந்தார்?

ஆண்டவரின் சிறு சிற்பியாய் இருந்து மரித்த லூசியாவிற்கு அசைக்க இயலாத தைரியம் இருந்தது. அவள் தனது இதயம் மூவொரு இறைவன் தங்கி வாழும் கோவில் என்பதை உணர்ந்திருந்தாள். திரித்துவ இறைவனின் உடனிருப்பால் வரும் அன்பும், அருளும் அமைதியும் நமக்கு திடமளித்து வாழ்விக்கின்றது. புனித சின்னப்பர் "இறைவனுக்காக அனைத்தையும் தாங்கும் சக்தி மூவொரு இறைவனிடமிருந்தே வருகிறது" என்பதைத் தெளிவுபடுத்துகின்றார்.



## புத்தகம்



**ஞானத்தைப் போதிக்கும் ஞானி!**
**அறிவை வழங்கும் அறிவாளி!**
**அர்த்தம் சொல்லும் அகராதி!**
**கடவுளைச் சித்தரிக்கும் கோவில்!**
**நம்பிக்கை ஊட்டும் தத்துவவாதி!**
**வாழ்வை அளிக்கும் பெற்றோர்!**
**தோள் கொடுக்கும் உடன்பிறந்தோர்!**
**நட்பு காட்டும் நண்பன்!**
**மொத்தத்தில் ஓர் உலகம்!**

மாணவர்களே!
உங்களது
ஆக்கங்களையும்
பின்வரும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர்,
ஞான ஒளி,
கொழும்பு
கத்தோலிக்க
அச்சகம்,
இலக்கம் 02,
ஞானார்த்த
பிரதீப்பய
மாவத்தை,
கொழும்பு - 08.

# எட்டாம் நம்பர்




ஐந்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த மாணவர்களிடம் கணித ஆசிரியை ஒரு கேள்வியைக் கேட்டார். அதாவது "ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்ணில் ஒவ்வொருவருக்கும் பிடித்த எண் என்னவென்றும், அதற்கான காரணத்தையும் கூற வேண்டும்" என்றார்.

ஒவ்வொருவரும் தங்களுக்குப் பிடித்த எண்களையும், அதற்கான காரணத்தையும் கூறினார். ஒரு மாணவன் எழுந்து "எனக்குப் பிடித்த எண் ஐந்து" என்றான் காரணம் அவனால் கூறமுடியவில்லை. மாணவர்கள் அனைவரும் இதே கேள்வியை ஆசிரியரிடம் கேட்டனர். "ஆசிரியரே உங்களுக்குப் பிடித்த எண் எது? காரணம் என்ன?" என்றனர்.

ஆசிரியர் உடனே "எனக்குப் பிடித்த எண் எட்டு" என்று கூறிவிட்டு அதன் காரணத்தை பின்வருமாறு கூறினார். "ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்களை எழுதும் போது, அனைத்து எண்களும் மேலே ஆரம்பித்து, கீழே முடிவதாக இருக்கும். ஆனால் எட்டு மட்டும் மேலே ஆரம்பித்து கீழே வந்தாலும் மீண்டும் மேலே சென்றுவிடும். அதுபோல நாமும் எந்தவொரு சூழ்நிலையிலும், பின்னடைவுக்கு தள்ளப்பட்டாலும், உயர முயற்சி செய்ய வேண்டும். எப்போதும் தோல்வியைக் கண்டு பயப்படக்கூடாது, சோர்ந்து போகக் கூடாது, நம் நோக்கை, இலட்சியத்தை அடைய உயர்ந்தாக வேண்டும் என்ற சிந்தனையுடன் மீண்டும் முயற்சித்து மேலே உயர வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

**மாணவர்களாகிய நாமும் கல்வியில் பின்னடைவு ஏற்பட்டாலும் மீண்டும் முயற்சித்து உயர்வடைய முயற்சி எடுப்போம்.**



# வார்த்தைப் பொறிகளில் சிக்காதீர்

உங்களுடைய பெரும்பாலான தோல்விகளுக்குக் காரணம் என்ன தெரியுமா? ஒரு நான்னெழுத்து சமாச்சாரமான வார்த்தை

வார்த்தைப் பொறிகளில் சிக்காத மனிதர்களே கிடையாது. குறைந்தபட்சம் உங்களை மட்டுமாவது அதிலிருந்து காத்துக் கொள்ள வேண்டுமானால், கீழேயுள்ள A to Z அதாவது 26 விஷயங்களையும் கவனமாகப் படியுங்கள். இதில் பல உங்களுக்கு ஏற்கனவே தெரிந்ததாக இருக்கலாம். ஆனால் ஒன்று, நீங்கள் மாட்டிக் கொள்வது இதில் ஏதாவது ஒன்றில்தான்.

A வதந்தி பேசாதீர்கள். அந்த நேரங்களில் மெலிதாய் புன்னகையுங்கள் அசடுபோல் வழிந்துவிட்டு நடையைக் கட்டுங்கள்.

B உங்கள் அருகில் வம்புபேச உங்களுக்கு கீழ் உள்ளவர்களை அனுமதிக்காதீர்கள்.

C அடுத்தவரின் உணர்வுகளை அங்கீகரியுங்கள்.

D மற்றவரின் கருத்துக்களை மதித்துக் கேளுங்கள்.

E அவர்கள் குரல் உயர்த்திக் கருத்துச் சொல்ல அனுமதியுங்கள்.

F எதிராளி முட்டாள்தனமாகப் பேசினாலும் அவர் புத்திசாலித்தனமாகப் பேசுவது போல் உற்றுக் கேளுங்கள்.

G மற்றவர் சொல்லும் கருத்துக்களால் உங்களுக்கு பாதிப்பு இல்லையென்றால், அதை ஒப்புக் கொள்ளுங்கள்.

H யாருடைய சுயமரியாதைக்கும் சவால் விடாதீர்கள்.

I எதிராளியுடனான பேச்சில் உங்களுக்கு பயங்கரக் கோபம் ஏற்பட்டால் உடனே அந்த இடத்தைவிட்டு விரையுங்கள்.

J உண்மை எல்லா இடங்களிலும் உதவாது என்பதை உணருங்கள். பொய்க்குப் பதில் மௌனமாக இருந்து விடலாம்.

K மற்றவர்களின் தகுதியை எடைபோடாதீர்கள். அது பெரும்பாலும் தவறாக இருக்கும்.

L எப்போதும் மகிழ்ச்சிகரமாக இருப்பதாகக் காட்டிக் கொள்ளுங்கள்.

M விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்.

N அந்தரங்கமான விஷயத்தை யாரிடமும் பகிர்ந்து கொள்ளாதீர்கள்.

O ஒருவரைப் பற்றிய உங்கள் அபிப்பிராயத்தை எக்காரணம் கொண்டும் அடுத்தவரிடம் சொல்லாதீர்கள்.

P மற்றவர்களைப் புகழ்வதற்கென்று தினமும் நேரம் ஒதுக்குங்கள்.

Q தாழ்வு மனப்பான்மையுடன் எச்செயலையும் அணுகாதீர்கள்.

R கிண்டல் மற்றும் கெட்ட வார்த்தைகளை உச்சரிப்பதைத் தவிர்த்துவிடுங்கள்.

S முக்கியமான விஷயங்களைப் பேசுவதற்கு முன்பு கொஞ்சம் ரிலாக்ஸ் செய்யுங்கள்.

T உங்கள் எதிர்கால இலட்சியத்தைப் பற்றி வாய்கிழியப் பேசாதீர்கள்.

U உங்களின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் ஏதாவது நோக்கமிருக்கும் என்று மற்றவர்களை நம்பச் செய்யுங்கள்.

V எதிராளி எப்படி பதில் பேசுவார் என்பதை கற்பனையில் சொல்லிப் பாருங்கள்.

W குற்றச்சாட்டை பகிரங்கப்படுத்தாதீர்கள்

X கொஞ்சம் மெதுவாக உரத்த குரல் இல்லாமல் பேசுங்கள்

Y பெருந்தன்மையாக நடங்கள்

Z வார்த்தைகள் சில வாழ்க்கையையே சில வேளைகளில் திசை திருப்பிவிடும் என்பதை மறவாதீர்கள்.




# சிந்தனைக்காக சில துளிகள்

⏭ நம்மிடையே உள்ள பிரிவினைகள் நம் நற்செய்தி அறிவிப்புக்கு மிகப் பெரிய தடையாக இருக்கின்றன.

**– திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்**

⏭ அன்பின் கண்ணுக்குத் தெரியும் வடிவமே நமது செயல்கள்

**– கலீல் ஜிப்ரான்**

⏭ மனிதன் செயல்படும்போது மனிதன் மட்டுமே செயல்படுகிறான். மனிதன் செபிக்கும்போதோ இறைவனும் செயல்படுகிறார்.

⏭ கசப்பான துன்பங்கள் அனைத்துமே இறைவனின் ஆசீர்வாதங்களின் மாறுவேடங்கள் என்பதை உணர்வது அவசியம்.

**- ஒஸ்கார் வைல்ட்**

⏭ தப்பைச் சரியாகவும், சரியைத் தப்பாகவும் பார்க்கும் நம் பார்வை மாறவேண்டும்.

⏭ நீங்கள் கடவுளை நம்புவது அவர் மேல் உள்ள பிரியத்தினால் அல்ல, உங்கள் வாழ்க்கையைப் பற்றிய அச்சத்தினால்.

⏭ கட்டளைகள் இல்லாத அன்பு ஆழமற்றது, அன்பு இல்லாத கட்டளைகள் அர்த்தமற்றவை.

## மாணவர் ஒளி

# சரியானவர்கள்



# சரியில்லாதவர்கள்

சரியானவர்கள் நிமிர்ந்து அமர்வார்கள். நேராக நிற்பார்கள், தோள்கள் அழுத்தமாகவும், நேராகவும் இருக்கும். தலை நிமிர்ந்திருக்கும். உடல் எளிமையான முறையில் நேராக இருக்கும். தெம்பாகத் தடையின்றி நடப்பார்கள். இவர்களது இதழோரம் ஒரு சிறு புன்னகை தவழும்.

சரியில்லாதவர்கள் எப்பொழுதும் சோர்ந்து காணப்படுவர், கூன் போடுவர், நடந்தாலும் உட்கார்ந்து இருந்தாலும் குனிந்த தலையுடன் சோர்வாய் காணப்படுவார்கள். மெதுவாகத் தளர்வாய் நடப்பார்கள். முகம் சற்றே வாடி இருக்கும்.

இப்படி எப்பொழுதும் சோகமாக இருப்பவருடன் யாரும் பழக முன்வர மாட்டார்கள். இதனால் இவர்கள் தனிமைப்படுத்தப்படுகின்றனர். இதனால் கண்ணாடி முன் நின்று நீங்கள் சரியானவரா? சரியில்லாதவரா? என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் சரியில்லாதவராக இருந்தால் சரியான உடல் மொழியைப் பயன்படுத்தி மகிழ்வான மனோநிலையை உருவாக்கிக் கொள்ளுங்கள்.





# தன்னம்பிக்கை

**தன்னம்பிக்கை உள்ளவர்களின் உடல்மொழி....**

- முகத்தில் பெருமித உணர்வு தோன்றும்,
- நிமிர்ந்து அமருவர், அல்லது நிமிர்ந்தவாறு நடப்பார்கள்.
- எதிரில் உள்ளவரின் கண்களை நேராகப் பார்த்து பேசுவார்கள்.
- பேசும் போது வெகு குறைவாகவே கண்களை இமைப்பர்.
- பெண்கள் கால் மேல் கால் போட்டு அமர்ந்து கைகளைக் கூப்பியபடி மடிமீது வைத்து நிமிர்ந்து அமர்ந்திருப்பார்கள்.
- கைகளை பின்னால் கட்டியிருப்பர்.
- முகத்தைச் சற்றே நிமிர்த்தி நடப்பார்கள்.
- மேசையின் மீது கால்களை வைத்திருப்பார்கள்.
- கைகளைத் தலைக்குப் பின்னால் கோர்த்துப் பின்னால் சாய்ந்து அமர்வார்கள்.
- கைகளைச் சொடுக்கெடுப்பது, சோம்பல் முறிப்பது போன்ற செயல்களைச் செய்வார்கள்.
- ஏப்பம் விடுவது கூட ஒருவகை தன்னிறைவு உடல் மொழிதான்.

# புனித பதுவை அந்தோனியார்

## (1195 – 1231)



இவர் போர்த்துக்கல் நாட்டு லிஸ்டன் நகரில் 1195 ஆவணி 15ம் திகதி அன்று பிறந்தார். இவரது ஞானஸ்நானப் பெயர் பெர்திநாந்து. பதினைந்து வயதில் இவர் புனித அகுஸ்தீன் சபையில் சேர்ந்து சந்நியாசியானார். கோயிம்பர நகர் மடத்திற்கு இவரை அனுப்பினார்கள். ஒரு முறை பிரான்சிஸ்கன் சபையின் சந்நியாசிகள் ஐந்து பேர் ஓர் இரவு அந்த மடத்தில் தங்கினார்கள். ஐவரும் வேதம் போதிக்கும்படி மொராக்கோ நாட்டிற்குச் சென்று வேதசாட்சிகள் ஆனார்கள். அவர்களது உடல் ஆரவாரத்துடன் போர்த்துக்கல் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இவரும் கடவுளுக்காக உயிர்விட ஆசித்து சிரமப்பட்டு அனுமதி பெற்று பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து வேதம் போதிக்கும்படி ஆப்பிரிக்காவுக்கு புறப்பட்டார். கப்பலுக்கு ஆபத்து ஏற்படவே ஐரோப்பாவிற்கு அது திரும்பியது இவருக்கு தாழ்ந்த வேலைகள் சபையில் கொடுக்கப்பட்டது. ஒரு முறை புதிதாகக் குருப்பட்டம் பெற்ற ஒருவர் முதல் திருப்பலி நிறைவேற்றுவதற்காக அருகிலிருந்த ஓர் ஊருக்கு வந்தார். இத்திருப்பலியைக் காண திருச்சபையிலும், நாட்டிலும் உயர்ந்த பதவிகள் வகித்த பலர் வந்திருந்தார்கள். மறையுரை நிகழ்த்த இருந்த குரு ஏதோ ஒரு காரணத்தினால் வரவில்லை. பங்குக்குரு கலங்கினார். மறையுரையை நிகழ்த்தும்படி பலரைக் கெஞ்சிக் கேட்டார். எல்லோரும் பயந்து பின்வாங்கி மறுத்தார்கள். புனித அந்தோனியாரை நெருங்கி "நீர் போய் பரிசுத்த ஆவி உமக்குச் சொல்லுகிறபடி பேசும்" என்றார் அவருடைய சிரேஷ்டர். அந்தோனியார் கீழ்ப்படிந்து எவ்வளவு அழகாக பேசினார் என்றால் எல்லோருமே பிரமித்துப் போனார்கள். அந்தோனியாரிடமாய் தங்களுக்கு ஒரு பெருந்திரவியம் கிடைத்திருக்கிறது என பிரான்சிஸ்கன் சபை குருக்கள் அறிந்தார்கள். குருத்துவ மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க அவரை நியமித்தார்கள். ஊர் ஊராய் போய் மக்களுக்கு கடவுளைப் பற்றி போதித்து அவர்களை கடவுளிடம் கொண்டு வர வேண்டும் என்று விரும்பிய அந்தோனியார், ஆசிரியர் பதவியை விட்டு விலகி பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலியா என்றும் நாடுகளில் ஊர் ஊராய்ச் சென்று பிரசங்கித்து அநேக பாவிகளை மனம் திருப்பினார்.

ஓர் ஊரில் திசோ (Tiso) என்னும் நல்ல மனிதர் ஒருவர் இருந்தார். அந்தோனியார் அந்தப் பக்கம் அடிக்கடி செல்வதைக் கண்ட அவர் தம் இல்லத்தில் தங்கும்படி ஓர் அறையை அவருக்கு தயாரித்துக் கொடுத்தார். ஒரு முறை அந்தோனியார் அங்கு தங்கியிருக்கையில் ஓர் அபூர்வ ஒளியை நள்ளிரவில் திசோ அங்கு கண்டார். காரணத்தை அறிய விரும்பி அவர் சாவித் துவாரத்தின் வழியாக உற்று நோக்கினார். அவர் கண்ட காட்சி அவரை பரவசத்தில் ஆழ்த்தியது. அதிசய அழகு வாய்ந்த குழந்தையொன்று மேசை மீது திறக்கப்பட்டுக் கிடந்த புத்தகத்தில் நின்று கொண்டு தன் இரு கரங்களாலும் அந்தோனியாரின் கழுத்தைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு விளையாட்டிக் கொண்டிருந்தது. சற்றுப் பின் அக்குழந்தை சாவித் துவாரத்தை சுட்டிக் காட்டி அந்தோனியாரிடம் சொல்லியது. இதைக் கண்ட திசோ அவ்விடத்தை விட்டு பயந்து ஓடினார். அந்தோனியாரும் அவர் பின்னே ஓடி அவரைப் பிடித்துக் கொண்டார். தாம் உயிரோடு இருக்கும் வரை இந்நிகழ்ச்சியை யாரிடமும் வெளிப்படுத்தக்கூடாது என்று அவரை மன்றாடிக் கேட்டு வாக்குறுதியையும் வாங்கிக் கொண்டார். 13.06.1231ல் அந்தோனியார் இறந்தார். இறந்த மறு ஆண்டே இவருக்கு புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது. கி.பி 1946ல் திருத்தந்தை 12ம் பத்திநாதர் மறைவல்லுநர் பட்டமளித்து இவரைப் பெருமைப்படுத்தினார். இன்று திருச்சபையில் இவரை நினைவுகூர்வதற்கு முதன்மையான காரணம் ஏழைகளின் மீது இவர் கொண்டிருந்த பரிவிரக்கம். இவர் பெயரால் பணிஸ் ஆலய வளாகங்களில் ஏழைகளுக்கு அளிக்கப்படும் வழக்கத்தை நாம் பார்த்திருக்கின்றோம். குழந்தை இயேசு இவர் தம் கைகளில் வந்து அமர்ந்த இவரது உருவத்தை பார்த்திருக்கின்றோம். இழந்த பொருட்களை கண்டுபிடிக்க இவரின் உதவியை மக்கள் நாடுகின்றதைப் பார்த்திருக்கின்றோம். பல புதுமைகள் அன்றும் இன்றும் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றது. இதனால் தான் பல்லாயிரம் மக்கள் இவரைத் தேடி ஓடி வருகிறார்கள். வந்து ஆசீரையும் பெற்றுச் செல்கிறார்கள். அதிலும் கத்தோலிக்கர்கள் தவிர்ந்த இனமத பேதமின்றி மக்கள் சமய பாகுபாடற்ற முறையில் வெள்ளம் குவிந்து வருகிறதைப் பார்க்கும் போது வியப்பாக உள்ளது.

திருமணத்தை நல்ல முறையில் நடத்திக் கொடுக்க, பிள்ளை வரம் பெற்றுத்தர, காணாமற் போனதைக் கண்டுபிடிக்க, பேய் பிடித்தவர்களிடம் பேயின் விலங்குகளை அறுத்தெரிய இவ்வாறு பல நன்மைகளை எதிர்பார்த்து அவற்றைப் பெற்று மகிழ்ச்சியடைகின்ற ஆயிரக் கணக்கான பக்தர்களை நாம் இன்றும் காணலாம்.

# அன்னை மரியே வாழ்க

ஆண்டவர்
இயேசுவை
பெற்றெடுத்த
அன்னை மரியே
வாழ்க வாழியவே
அன்புக்கே
உருவான ஆரமுதே
அடைக்கலம் அம்மா
உன் காலடியில்

வைகாசி மாதம்
என்றால்
வானோர்கள்
மகிழ்ந்திட பூலோகம்
வாழ் மாந்தர்
ஆசி பெற
வந்துதித்தாயே
வாழ்க மரியே

அமலோற்பவியே
தேவனின் தாயே
அனைவரையும்
அரவணைக்க
அகிலத்தில்
காட்சித் தந்தாயே
ஆசீர் தந்து
அன்பு காட்டினீரே

செபமாலை ஓத
சிறார்களுக்கு
சொன்னாயே
இன்றும் உம் புகழ்
செபமாலையில்
கமழுதம்மா
சேயர்கள் எம்மை
காப்பாயே

மரியாயின்
சேனையாருக்கு
மாசற்ற அன்பு
கொள்வாயே
மாசில்லா
உற்பவித்த
தாயே
மாசற்ற
வாழ்வு வாழ
உதவிடுவாயே
வாழ்க மரியே
வாழ்கவே



ஆக்கம்
திருமதி. அன்னம்மா சகாயம்

# சிந்தனைக்கு

- எழுதப்படும் சொல்லை விட பேசப்படும் சொல்லே வலிமை வாய்ந்தது.
- இலட்சியமில்லாமல் சாதனைகள் நிகழ்த்த முடியாது.
- குடும்பத்தில் சமாதானம் நிலவ அங்கு இருக்க வேண்டியவை - அன்பு, இரக்கம்
- நுண்ணறிவுடன் அன்பும் கைகோர்த்துக் கொண்டால் உலகில் எதையும் சாதிக்க முடியும்.
- வேலை எந்த மனிதனையும், கொல்வதில்லை, கவலைத் தான் மனிதனைக் கொல்லும் ஆயுதம்.
- தேவை அறிந்து அளிப்பது சேவை. தேவைக்கு மேல் தருவது திணிப்பு.
- ஒருவருக்கு உண்மையான சுகத்தைத் தருவது நல்ல மனம் கொண்டவர்களின் நட்பு ஆகும்.

**பசித்தவனுக்கு**
உணவே கடவுள்
**தேடுபவனுக்கு**
அறிவே கடவுள்
**ஏங்குபவனுக்கு**
அன்பே கடவுள்
**இல்லாதது**
**கிடைத்தால்**
அங்கே அது தான்
**கடவுள**



ஓலைக்
குடிசையிலும்
மண்
தரையிலும்
வாழும்
ஏழையின்
வீட்டில்
இருக்கும்
அமைதி
சொகுசு
பங்களாவில்
வாழும்
சிலரிடம்
இருப்பதில்லை

வெற்றிக்கும்
தோல்விக்கும் சிறு
வித்தியாசம் தான்
கடமையை செய்தால் வெற்றி
கடமைக்கு செய்தால்
தோல்வி







ஒரு தாய் ஐந்து
குழந்தைகளையும் வளர்த்து
விடுவாள் ஆனால் ஐந்து
குழந்தைகளும் சேர்ந்து
ஒரு தாயை காப்பாற்றுவது
கடினம்.

கடவுளைப்
பார்க்க கோயிவுக்குப்
போக தேவையில்லை
ஒரு வாரம் உன்
வீட்டு செலவை
நீயே பொறுப்பேற்று
சமாளித்துப் பார் உன்
"அப்பா"
உனக்கு கடவுளாக
தெரிவார்

அன்பை
விற்கவோ,
வாங்கவோ
முடியாது.
அன்பிற்கு
அன்பே
விலை

எந்த செயலையும்
ஆர்வம் குறையாமல்
நம்பிக்கையுடன்
ஆரம்பியுங்கள்.
வெற்றி நம்மைத்
தேடி வரும்.





# பாத்திமா காட்சிகளின் சுருக்கம் 01

பாத்திமா என்னும் ஊர், லிஸ்பன் தலைநகரில் இருந்து வடக்கே தொலைவில் உள்ளது. காட்சிகள் நடைபெற்ற இடம் கோவா தா ஈரியா இது 2 கி.மீ மேற்காக அமைந்துள்ளது.

பாத்திமா ஊரில் மாதாவின் காட்சிகள் இடம் பெற்றதால் தான் பாத்திமா மாதாவின் காட்சிகள் என அழைக்கப்படுகின்றது.

யுத்த காலத்தை தடுத்துவதன் மூலம் மக்கள் மனம்திரும்பி அவரின் மாசற்ற இருதயத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜெபமாலை சொல்ல வேண்டும் என்பதே அன்னையின் உறுதியான தீர்வாக இருந்தது. இதன் மூலம் யுத்தமில்லாமல், பிளவுகள், பழி பாவங்களுக்கு முகம் கொடுக்காமை, அடிமை, ஒழிப்பு, பஞ்சம் என்பன நீங்கி மக்கள் இறையன்பில் ஒன்றித்து வாழ்வதே அவரின் செய்தியாக இருந்தது.(அன்னையின் காட்சியை பெற்றவர்கள். லூசியா, பிரான்சிஸ் ஜசிந்தா என்ற சிறுவர்களே. அவர்கள் கண்ட காட்சியானது....)

## காட்சி 01

திடீரென ஒரு பெரும் ஒளி வீசியது! மின்னல் என அவர்கள் எண்ணினார்கள். அவர்கள் அச்சத்துடன் ஒரு மரத்தடிக்கு ஓடினார்கள். அவர்கள் அங்கு வர மீண்டும் ஒளி வீசியது. பயத்துடன் மீண்டும் அசின்ஹோரா என்ற தாழ்வான ஒரு மரத்தருகே ஒளி வரவும் அங்கே நின்றுவிட்டார்கள்.

அம்மரத்தின் உச்சியில் ஒரு ஒளியுருண்டை அதன் நடுவில் ஓர் பெண்! லூசியா எழுதியபடி முழுவதும் வெண்மையான ஒரு பெண். ஒளி வீசும் சூரியனை விட அதிக ஒளியுடனும், அதிக தெளிவுடனும் மிகப் பிரகாசமான சூரியக் கதிர்பாயும் ஒளிக்கட்டிப்போல் காணப்பட்டார்” அவர் முகத்தை வர்ணிக்க முடியாது. அந்த முகத்தில் துயரமில்லை, மகிழ்வுமில்லை ஆனால் ஆழ்ந்த தோற்றமாயிருந்தது. செபிக்கும் பாவனையில் அவர் கரங்கள் நெஞ்சில் கும்பியிருந்தன. வலது கரத்தின் விரல்களுக்கிடையில் ஒரு ஜெபமாலை தொங்கியது. ஒரு வெண்ணிற அங்கி கால் வரையிலும் முடியிருந்தது.

அன்னை சிறுவர்களைப் பார்த்து
**‘பயப்படாதீர்கள் நான் உங்களுக்கு ஒரு தீமையும் செய்யமாட்டேன்’**
உடனே மூவரும் திடமடைந்தார்கள். அன்னையிடம் கேள்வி கேட்கும் அளவுக்கு லூசியா திடம் பெற்றாள்.
**‘நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்’**

**‘நான் மோட்சத்திலிருந்து வருகின்றேன்’**

**‘உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்’**

**‘நீங்கள் தொடர்ச்சியாக ஆறு மாதமும் 13ஆம் திகதியில் இதேநேரம் இங்கு வர வேண்டும் என்று கூற வந்தேன். நான் என்ன விரும்புகின்றேன் என்று பின்னால் கூறுவேன். ஏழாவது முறை இங்கு திரும்பவும் வருவேன்’**

**‘நான் மோட்சத்திற்குப் போவேனா?’**

**‘ ஆம் நீ போவாய்’**

**‘ஜசிந்தா’**

**‘அவளும் போவாள்’**

**‘பிரான்சிஸ்’**

**‘அவனும் அங்கு போவான். ஆனால் அதற்கு முன் அவன் அநேக ஜெபமாலைகள் சொல்ல வேண்டும்** என்றார்கள். தன் பெயர் சொல்ல கேட்டதும் பிரான்சிஸ் லூசியாவிடம்
**‘என்னால் அங்கு ஒருவரையும் பார்க்க முடியவில்லை. ஒரு கல்லை எறி அது ஒரு ஆள் தானா என்று பார்ப்போம்’** என்றான்.
லூசியா அதை மறுத்து ஆச்சரியத்துடன்” **“பிரான்சிசால் உங்களை ஏன் பார்க்க முடியவில்லை’** என்று கேட்டாள்.

**“அவனை ஜெபமாலை சொல்லச் சொல். அப்போது என்னை காண்பான்’**
லூசியா இதை பிரான்சிஸிடம் கூறினாள். அவன் உடனே தன் ஜெபமாலையை எடுத்து செபிக்க தொடங்கினாள். ஆறு ஏழு அருள் நிறை மந்திரம் சொல்லவும் திடீரென அவனும் காட்சியைக் கண்டான். ஆனால் பிரான்சிஸ் காட்சியைக் கண்டானேயன்றி தேவ அன்னை கூறிய எதையும் அவனால் கேட்க முடியவில்லை.

மாதா கூறியதை அவன் மற்ற இருவரிடமே கேட்டு அறிந்துக்கொண்டான். இதற்கிடையில் லூசியா மேலும் சில கேள்விகள் கேட்டாள். மோட்சத்தைப் பற்றி பேச்சு வந்ததால், லூசியா வீட்டில் அவள் அக்காவிடம் நெசவு கற்று சமீபத்தில் இறந்துப்போன இரு பெண்களைப் பற்றி அவளுக்கு நினைவு வந்தது எனவே.
**‘தஸ்நேவிஸ் மேரி மோட்சத்திலிருக்கின்றாளா?**
**‘ஆம் அவள் மோட்சத்தில் இருக்கின்றாள்’**
**‘அமெலியா’**
**‘அவள் உலகம் முடிவு வரை உத்தரிக்கின்ற ஸ்தலத்தில் இருப்பாள்’**
மீண்டும் நம் அன்னை பேசினார்கள். **“கடவுளை நோகச் செய்யும் பாவங்களுக்குப் பரிகாரமாகவும் பாவிகள் மனம் திரும்பும் படி மன்றாட்டாகவும், அவர் உங்களுக்கு அனுப்ப விரும்பும் எல்லா துன்பங்களையும் அவருக்கு ஒப்புக்கொடுக்க நீங்கள் விரும்புகின்றீர்களா?’** என்று கேட்டார்கள்.

**‘ஆம் விரும்புகின்றோம்’** என்று மூவர் சார்பிலும் பதிலளித்தாள் லூசியா
**‘அப்படியானால் நீங்கள் அதிகம் துன்பப்பட நேரிடும். ஆனால் கடவுளின் வரப்பிரசாதம் உங்களைத் தேற்றும் என்று கூறியபடியே தேவ அன்னை தன் கரங்களை விரித்து எங்கள் மீது ஒரு தெய்வீக ஒளியை பாயவிட்டார்கள். அந்த ஒளி எவ்வளவு பிரகாசமுடையதாயிருந்தது என்றால் நாங்கள் எங்களையே மறந்து இறைவனைக் காணச் செய்தது’** என்று லூசியா கூறுகின்றார்.

**‘அவ்வொளி எங்கள் இருதயத்தின் உள் ஆழங்களையும் ஊடுருவிச் சென்று, எங்களையே நாங்கள், அவ்வொளியாக இருந்த இறைவனின் கண்ணாடியில் காண்பதை விட அதிகத் தெளிவாகத் காணச் செய்தது’**
மேலும் ஒரு அந்தரங்க ஏவுதல் எங்களுக்குக் கொடுக்கப்பட, நாங்கள் முழங்காலில் விழுந்து
**‘ஓ மிகவும் பரிசுத்த திருத்துவமே உம்மை ஆராதிகின்றேன். என் தேவனே திவ்விய நற்கருணையில் உம்மை நேசிக்கின்றேன்’**
மூவரும் இவ்வாறு செபித்து முடியும் வரை தேவ அன்னை சற்று நேரம் காத்திருந்த பின் அவர்களை பார்த்து
**‘உலகத்திற்கு சமாதானத்தை பெற்றுக் கொள்ளவும் யுத்தம் முடிவடையவும் ஒவ்வொரு நாளும் செபமாலை சொல்லுங்கள்’** என்ற கூறி சூரிய ஒளியுடன் கலந்து எல்லையற்ற தொலைவில் மறைந்தார்கள்.

**காட்சிகள் தொடரும்**

# இதயத்தின் முட்கள்



**ஏராளமான பாவங்கள்**
**மண்ணுலகில் பெருகியதால்**
**இறைவனே**
**நீர் இதயம் நொந்தீர்!**
**எந்த வித எதிர்பார்ப்பும்,**
**இல்லாமல்**
**மனுக்குலத்தை**
**ஏந்தியே காக்க**
**வந்தீர் மனிதர்**
**எண்ணங்களனைத்தையும்**
**நம்பிக்கைத் துரோகமாக**
**சிலுவையிலே உயிரைத்**
**தந்தீர் - உம் இருதயம்,**
**முழுக்கவே வலிகள்தான்**
**எம்மாலே இன்னலன்றி**
**எதை நீர் கண்டீர்**
**எது எதற்கோ ஆசைப்பட்டு**
**தீய வழி என்னவென்று**
**மனிதர்கள் இங்கு ஆய்கிறோம்**
**இறுகிப்போன சுயநலத்தினால்**
**நன்மைகளை விற்றவராய்**
**பாவ நெருப்பில்**
**குளிர் காய்கிறோம்**
**எப்படியோ பொருள் சேர்த்து**
**கொடி கட்டிப் பறந்தவராய்**
**ஆள்மனம் இழந்து**
**தேய்கிறோம். ஈட்டியதைக்**
**கூட்டிப் பார்த்து**
**இறுதியில் மீதம் கண்டு**
**இழந்த வாழ்வை**
**எண்ணி மாய்கிறோம்**
**பண்பு கெட்டு**
**நாங்கள் செய்த**
**பாவங்கள் எல்லாமே**
**இதயத்தில் முட்கள்**
**செருகும்.**
**பரமன் உம் திரு இதயம்**
**பாதிப்புக்குள்ளாகி**
**இடைவிடா(து)**
**குருதியொழுகும்**
**பரிசுத்த தனத்தை விட்டு**
**பாதை மாறி நடந்தாலும்**
**மன்னித்து இரக்கம்**
**பெருகும்,**
**பாழும் எம் நெஞ்சங்கள்**
**உம் பாசம் உணராது,**
**பாறை போல் தினமும்**
**இறுகும். நன்றியில்லா**
**நடத்தைமிக நாளும்**
**பல முட்களினால்,**
**நெஞ்சத்தையே குத்திப்**
**பிளந்தோம்**
**நல்லவராம் ஆண்டவர் நீர்**
**மன்னித்தருள்வதனால்**
**நாங்களும் வாழ்வை**
**அடைந்தோம்இன்று**
**மட்டுமல்ல, என்றும்**
**இயேசுவின்**
**திரு இருதயம்**
**வணங்குவோருக்கு**
**உயர்வு நிச்சயம். இறைவா**
**எமக்காக உமையீந்த நன்றி**
**நினைந்து நடந்தாலே**
**எமக்குறல் வாழ்வுண்டு**
**இதுவே சத்தியம்**

**ஆக்கம் : அல்பர்ட்**

# எங்கும் பணியாற்ற எப்போதும் தயாராக இருத்தல்



தான் பணியாற்றும் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்ல எப்போதும் தயாராக இருப்பவராக ஒவ்வொரு அருள்பணியாளரும் இருக்கவேண்டும், ஏனெனில் வரலாற்றின் மையம் அவரல்ல என்றும், அவர் சுதந்திரமானவர் என்பதை அவர் அறிவார் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்தின் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றி மறையுரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எந்த தீமைகளோடும் உடன்பாடு கொள்ளாமல், இறைவன் அனுப்பும் இடத்திற்கு பணியாற்றச்செல்ல தான் எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்று, தன் மந்தையிடமிருந்து தனக்கான எவ்வித எதிர்பார்ப்புமின்றி வாழும் சுதந்திர மனிதராகிய மேய்ப்பருக்குத் தெரியும் என உரைத்தார்.

இச்செவ்வாய்க்கிழமை திருப்பலியின் முதல் வாசகமாகிய, திருத்தூதர் பணிகள் நூலில், புனித பவுல், தூய ஆவியாரின் கட்டளைக்கிணங்க தான் எருசலேமுக்குச் செல்வதாக கூறியதை தன் மறையுரையில் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை, ஒவ்வொரு மேய்ப்பரின் பணியும் எப்போதும் முழுமையடைந்ததாக இருக்கவேண்டும், பாதியில் விட்டுச் செல்வதாக அல்ல, என்றார்.

மந்தையுடன் ஒரு மேய்ப்பர் கொள்ளும் பிணைப்பு, இயேசுவின் சிலுவையால் சுத்திகரிக்கப்பட்டதாக இருக்கும்போது, அதனை விட்டுவிட்டு மற்றொரு இடத்திற்கு பணியாற்றச் செல்வது, இலகுவானதாக இருக்கும் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

எந்த ஒரு மேய்ப்பரும், தீயவைகளோடு உடன்பாடு கொள்ளாதவராகவும், அனுப்பப்படும் இடங்களுக்கு எவ்வித கேள்வியும் இன்றி கீழ்ப்படிதலுடன் செல்பவராகவும், தன் வாழ்வுக்கு முக்கியத்துவம் தராதவராகவும் செயல்படவேண்டும் என மூன்று விதிகளை தன் மறையுரையில் முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம் மேய்ப்பர்களாகிய அருள்பணியாளர்கள், ஆயர்கள், திருத்தந்தை என அனைவருக்காகவும் செபிப்போம் எனவும் கேட்டுக்கொண்டார்.

# எகிப்தின் புதிய மறைசாட்சிகளுக்காக செபிப்போம்



கடந்த வாரத்தில் எகிப்தில் தங்கள் விசுவாசத்திற்காக கொல்லப்பட்ட கிறிஸ்தவர்கள் குறித்து தன் ஆழ்ந்த அனுதாபங்களை இஞ்ஞாயிறு அல்லேலூயா வாழ்த்தொலி உரையின்போது வெளியிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ். இத்தாலியின் ஜெனோவா நகரில் இடம்பெற்ற மேய்ப்புப்பணி சார்ந்த பயணத்தின்போதும், எகிப்து படுகொலைகள் குறித்து தன் ஆழ்ந்த கவலையை வெளியிட்டிருந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், காப்டிக் ஆர்த்தடாக்ஸ் சபையின் திருத்தந்தை தவாத்ரோஸ் அவர்களுக்கும், எகிப்து நாடு முழுவதற்கும் தன் அனுதாபங்களையும் தெரிவித்துள்ளார்.

எகிப்து கிறிஸ்தவர்கள் பேருந்தில், நாட்டிற்குள் திருப்பயணத்தை மேற்கொண்டபோது, வழியில் நிறுத்திய இஸ்லாமிய தீவிரவாதிகள், கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை மறுதலிக்கவேண்டும் என கட்டாயப்படுத்தியபோது மறுத்ததால், குழந்தைகள் உட்பட 35 பேரை சுட்டுக் கொன்றுள்ளது பற்றி ஆழ்ந்த கவலையை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த புதிய மறைசாட்சிகளை தன் இல்லத்திற்குள் வரவேற்கும் இறைவன், பயங்கரவாதிகளின் மனம் மாறவும் உதவுவாராக எனவும் தெரிவித்தார்.

மேலும், மான்செஸ்டர் நகரில் இடம்பெற்ற வெடிகுண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் படுகாயமடைந்தவர்கள் குறித்து கவலையையும் அனுதாபங்களையும், இஞ்ஞாயிறு அல்லேலூயா வாழ்த்தொலி உரையின்போது குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அவர்களுக்கான செபத்திற்கும் உறுதி கூறினார். மேலும், கடந்த மாதம் சிறப்பிக்கப்பட்ட "உலக சமூகத்தொடர்பு நாள்" குறித்தும் தன் உரையின் இறுதியில் குறிப்பிட்ட திருத்தந்தை, "அஞ்சாதே, நான் உன்னோடு இருக்கிறேன்" என்ற இந்நாளுக்கான தலைப்பையும் எடுத்துரைத்து, சமூகத்தை கட்டியெழுப்பும் நோக்குடன், எவ்வித முற்சார்பு எண்ணங்களும் இன்றி, நம்பிக்கையையும் பற்றுறுதியையும் விதைத்து, தகவல் துறை செயல்படவேண்டும் என்ற விண்ணப்பத்தையும் முன்வைத்தார்.

# உண்மையான அன்பு என்பது....

உண்மையான அன்பு வெறும் வார்த்தையில் அல்ல மாறாக மெய்யான, இந்த உலகு சார்ந்த செயல்களில்தான் வேரூன்றியிருக்கின்றது என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். "கடவுளின் அன்பு கூட அவருடைய ஒரே மகன் மனிதனாகப் பிறந்து நம் மத்தியில் வாழ்ந்ததில் தான் உள்ளது. அதேபோல், நம் அன்பும் நம் செயல்களில்தான் வெளிப்படுகின்றது. ஆண்டவர் சிலுவையைச் சுமந்த மெய்யான செயலில்தான் அவருடைய அன்பு வெளிப்பட்டது. மத்தேயு நற்செய்தி 25:31-44 இல் ஆண்டவர் நமக்குக் கற்பிப்பது அன்பின் மெய்யான செயல்கள், மலைப்பொழிவில் ஆண்டவர் கற்பிப்பதும் இத்தகைய செயல்கள், இவை அனைத்தும் உலகத்தைச் சார்ந்த மெய்யான செயல்கள், இத்தகைய செயல்களின் வழியாக வெளிப்படுத்தப்படாத அன்பு அன்பேயில்லை. உண்மையான அன்பு ஒளிந்திருக்கின்றது" என்கிறார் திருத்தந்தை

# புனித கபிரியேல் பொசேந்தி இறை அழைத்தலுக்காக பரிந்துரைப்போம்



கபிரியேல் 1838ஆம் ஆண்டு இத்தாலியில் ஸ்பொலேட்டோ என்னும் ஊரில் பிறந்தார். அவருடைய தந்தை சாந்தே போசேந்தி அவர் ஒரு சட்ட வல்லுனர். 13 பிள்ளைகளில் 11வது பிள்ளை கபிரியேல் ஆவார். அவருடைய திருமுழுக்குப் பெயர் பிரான்சிஸ். கபிரியேலுக்கு நான்கு வயதான போது அவருடைய தாயார் மரணமானார். அவர் ஸ்பொலேட்டோவில் இயேசு சபை குருக்களால் நடத்தப்படும் ஒரு பாடசாலையில் கல்வி பயின்றார். அவர் ஏனைய மாணவர்களைப் போலவே செயலாற்றினார். அவருடைய நண்பர்களுடன் ஒற்றுமையாக மகிழ்வுடன் இருந்தார். அழகான ஆடைகளை அணிந்த போதிலும் நண்பர்களுடன் அன்புடன் பேசிப் பழகினார்.

கபிரியேல் கல்வி கற்று முடித்ததும் அடிக்கடி நோயினால் பீடிக்கப்பட்டார். அது அவருடைய வாழ்வில் முக்கியமான மாற்றங்களுக்கு வழியாயிற்று. அவர் நோயிலிருந்து குணம் பெற்றால் தமது வாழ்வை இறைவன் சித்தத்திற்கேற்ப வாழ்வதாக தீர்மானித்தார். நோயினால் குணம் பெற்றவுடன் இயேசு சபையில் சேர்வதற்காக விண்ணப்பித்தார். அதே நாட்களில் அவருடைய ஒரு சகோதரி கொலரா நோயினால் பீடிக்கப்பட்டு மரணமானார். இந்நிகழ்வின் காரணத்தால் துறவற வாழ்வை அடைவது தாமதமாயிற்று. சில நாட்களுக்குப் பின்பு மிகவும் கடினமான தியாக வாழ்வைக் கொண்ட ஒரு துறவற சபையில் சேர்ந்தார். அங்கு அவருடைய செயல்கள் ஏனையோருக்கு முன்மாதிரிகையாக அமைந்தது. மிகச் சிறிய செயலையும் இறைவனுடைய நாமத்தின் மகிமைக்காக செய்தார். அவர் அமைதியான செப வாழ்க்கை, தாழ்ச்சி, ஏனையோருக்கு உதவி புரிதல் விடாமுயற்சி, இன்னும் அவரது துறவற வாழ்க்கை மூலமாக அனைவருடைய அன்பையும் பெற்றுக்கொண்டார்.

1862ஆம் ஆண்டில் துறவற வாழ்வை ஆரம்பித்தார். துறவற வாழ்வில் 6வது ஆண்டு அவர் மறுபடியும் நோயுற்றார். அவ் ஆண்டில் மாசி மாதம் 27ஆம் திகதி விண்ணகப் பேற்றை அடைந்தார். 1920ஆம் ஆண்டு புனிதராகப் திருநிலைப்படுத்தப்பட்டார்.

தொகுப்பு
செல்வி அனஸ்டன் அன்தனி
கொழும்பு ~ 10

# பயம் நீங்கி மகிழ்ந்து வாழ!

"தேவையில்லாமல் பயப்படுவதும், மகிழ்ச்சியில்லாமல் இருப்பதும் கிறிஸ்தவர்களுடைய பண்புகளாகாது" என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ் "சில கிறிஸ்தவச் சமுதாயங்கள் பின்விளைவுகளைப் பற்றி மிகவும் பயந்து, துணிவுடன் செயல்பட முன்வர மாட்டார்கள். "நாம் இதை செய்யக்கூடாது" "நாம் அதைச் செய்யக் கூடாது" என்பார்கள். "தடை செய்யப்பட்டுள்ளது" என்ற வார்த்தை அவர்களுடைய கதவில் எழுதி ஒட்டப்பட்டுள்ளதோ என எண்ணத் தோன்றுகிறது. அனைத்துமே பயத்தினால் தடை செய்யப்பட்டுள்ளன. இத்தகைய ஒரு சமுதாயத்தில் நாம் நுழையும்போது, அங்கு ஆரோக்கியமற்ற அசுத்த காற்றுதான் நம்மைத் தாக்கும்" என்கிறார் திருத்தந்தை.

"இந்தப் பயமானது தேவ பயத்திலிருந்து வித்தியாசமானது. தேவை பயமானது புனிதமானது. அது நம்மை தாழ்த்தாது. வலுவிழக்கச் செய்யாது. மாறாக, அது நம்மை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் சென்று ஆண்டவருடைய பணியை நிறைவேற்ற உதவும்" என்கிறார் பிரான்சிஸ். மேலும் மகிழ்ச்சில்லாத ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவே இல்லை என்கிறார் திருத்தந்தை. "எப்போதும் சோகமாக இருக்கும் ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்தவனே அல்ல, சோதனை வேளைகளிலும், உடல் நலக் குறைவிலும் கூட அமைதியை இழந்துவிடும் ஒரு கிறிஸ்தவனிடம் ஏதோ குறை உள்ளது என்றுதான் அர்த்தம். கிறிஸ்தவ மகிழ்ச்சியானது நமது ஆண்டவர் வென்றுவிட்டார் என்ற ஆழமான விசுவாசத்திலிருந்து எழுவது. ஆண்டவர் ஆட்சி செய்கின்றார். தந்தையின் வலப்புறம் வீற்றிருக்கின்றார். தூய ஆவியின் அருளை என்மீது பொழிந்து என்னை தந்தையின் பிள்ளையாக மாற்றியுள்ளார் என்ற ஆழ்ந்த விசுவாசத்தால் எழுவது" என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## 01 கொழும்பு உயர்...

இத்தினங்களில் நாட்டின் பல மாவட்டங்களிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய சீரற்ற வானிலையின் காரணமாக பெரும் இக்கட்டான நிலைக்கு உள்ளாகியவர் மற்றும் வதிவிடங்களை இழந்துத் தவிக்கின்ற எமது சகோதர மக்களுக்கு உதவும் பொருட்டு பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களின் விசேட வேண்டுகோளுக்கு, பெருமதிப்பளிப்பளித்து கொழும்பு உயர் மறைமாவட்ட கத்தோலிக்க மக்களால் பல்வேறுபட்ட உதவிப்பொருட்களை பங்கு ரீதியாக விசேடமாக புனித சூசையப்பர் ஆலயம், தில்லந்துவ நீர்கொழும்பு, புனித மரியாள் ஆலயம் துடல்ல, புனித பேதுரு சின்னப்பர் ஆலயம் றாகமை, புனித அன்னம்மாள் ஆலயம், வத்தளை, புனித அந்தோனியார் திருத்தலம் கொச்சிக்கடை, புனித லோரன்ஸ் ஆலயம் வெள்ளவத்தை, புனித செபஸ்தியார் ஆலயம் மொறட்டுவ, திருச்சிலுவை ஆலயம் களுத்துறை, புனித தோமஸ் ஆலயம் கோட்டை, புனித சூசையப்பர் ஆலயம் நுகேகொட ஆகிய பங்குகளில் சேர்க்கப்பட்டு கொழும்பு கரிட்டாஸ் மற்றும் செத் சரண நிறுனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு சேர்க்கப்பட்ட பொருட்களுள் தண்ணீர் போத்தல்கள், உலர் உணவுப் பொருட்கள், உடைகள், பால் மா, குழந்தைகளுக்கான உணவுப் பொருட்கள், பிஸ்கட் வகைகள், சுகாதார பொருட்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதாக, செத்சரண நிறுவனத்தின் இயக்குனர் அருட்தந்தை அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும் கர்தினால் ஆண்டகையின் ஆலோசனைக்கு அமைய, கொழும்பு கரிட்டாஸ் - செத் சரண நிறுவனத்தின் புதிய இயக்குனர் அருட்தந்தை லோரன்ஸ் ராமநாயக்க அடிகளாரின் வழிகாட்டுதலின் கீழ் இந்நிவாரணப் பொருட்கள் அனைத்தும் பாதிக்கப்பட்ட மக்களுகளிடையே பகிர்ந்தளிப்பதற்காக தராள, ஹங்வெல்ல, ஹொரனை, மத்துகமை, களுத்துறை - நாகோட, கெத்ஹேன, காலி மற்றும் இரத்தினப்புரி ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள நிவாரணப் பொருட்கள் வழங்கும் மத்திய நிலையங்களுக்கு ஓப்படைக்கப்பட்டுள்ளதாக இயக்குனர் அருட்தந்தை அவர்கள் தெரிவித்தார்.

இலங்கை கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குனர் அருட்தந்தை மகேந்திர குணதிலக்க கூறுகையில் "மக்கள் எல்லா இடங்களிலும் இருந்து இப்பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய வருவதை எண்ணி மகிழ்ச்சி அடைவதோடு அவர்களுடைய கிறிஸ்தவ சமூகப் பண்பையும், மனிதாபிமானம் மற்றும் ஆதரவையும் பங்களிப்பையும் நாம் தொடர்ந்தும் நலன்விரும்பிகளிடமிருந்து பெற்றுக்கொள்கின்றோம்".

மேலும் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை போன்ற கரித்தாஸ் மறைமாவட்ட நிறுவனங்களும் இப்பாதிக்கப்பட்ட மக்களுக்கு தம்மால் இயன்ற பண உதவியை அளித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## 01 புனித அந்தோனியார்..

இத்திருவிழாவின் ஆரம்பமாக 3ம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு திருப்பலிக்குப் பின் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

**திருவிழா திருப்பலிகள்**

காலை 4.00 மணி தமிழ், 6.00 மணி தமிழ் திருப்பலிகள் மற்றும் காலை 8.00 மணி திருநாள் சிறப்புத் திருப்பலி கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படுகின்றது.

மாலை 5.00 மணிக்கு திருச்சுரூப பவனி தொடங்கி இரவு 8.00 மணிக்கு கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்று ஆசீர்வாதம் அளிக்கப்பட்டு நிறைவுபெறும்.

## 03 தூய ஆவியின்

நமது ஆன்மீக வாழ்விலே அவராலன்றி நாம் ஒன்றும் செய்ய இயலாது. "தூய ஆவியின் ஏவுதலின்றி இயேசு ஆண்டவர்" என்று யாரும் சொல்ல முடியாது (1 கொரி 12:3) இயேசு அருளும் பாவ மன்னிப்பு அவர் வழியாகவே நம்மை வந்தடைகின்றது. "தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவர்களுக்கு அவை மன்னிக்கப் பெறும்.. (யோவ 20:22-23) என்று யோவான் நற்செய்தியில் இயேசு அப்போஸ்தலர்களுக்கு பாவ மன்னிப்பின் அதிகாரத்தை வழங்குகின்றார்.

நமது தனி வாழ்விலே நாம் தூய ஆவியால் இயக்கப்படுகின்றோமா? நம்மில் பலருக்கு ஆன்மீக வாழ்வில், ஆவிக்குரிய வாழ்வில் ஈடுபாடு குறைந்திருப்பதன் காரணம் தூய ஆவி நமக்கு மறக்கப்பட்ட கடவுளாக இருப்பதே. அவரது அசைவை தங்கள் வாழ்வில் உயர்ந்தவர்களின் வாழ்க்கை எத்தகைய மாற்றம் பெற்றிருக்கின்றது என்பதை நாம் சில சமயங்களில் பார்க்கின்றோம். ஆவியானவரால் ஏவப்பட்டு, ஆவியானவரால் நிரப்பப்பட்டவர்களாக வாழ்வோம்.

## 06 மன்னிக்க மறுத்த...

ஆபத்தாய் அமைவரானால் அவரைச் சமூகத்திலிருந்து விலக்கி வைப்பதே முறையாகும். இறையாட்சி வாழ்வின் இத்தனை பண்புகளையும் அழுத்தமாகக் குறிப்பிட்ட நற்செய்தி ஆசிரியர் இறுதியாக, மிக முக்கிய இறையாட்சிப் பண்பை, ஒரு நீண்ட உவமையின் வாயிலாக விளக்குகிறார். அதுவே மன்னித்தல் - எத்தனை முறை தவறு செய்யினும், அத்தனை முறையும் மன்னித்தல், இவ்வாறு பெரியவர் சிறியவர் என்னும் வேறுபாடு பாராதல், துர்மாதிரியாய் இராதல், வழி தவறிச் சென்றோரைத் தேடிச் சென்று மீண்டும் சமூகத்தில் சேர்த்தல், தவறு செய்வோரைத் திருத்துதல் ஆகிய பண்பு நலன்களின் முத்தாய்ப்பாக, மத்தேயு பார்வையில், எல்லையற்ற மன்னிப்பு இறையாட்சியின் அடிப்படைப் பண்பாக அமைகிறது.

### 5. இன்றைய பார்வையில்

"மன்னிப்பு" இறையாட்சி வாழ்வுக்கு இன்றியமையாது இருப்பது போன்று, சமூகத்தில் மனித வாழ்வுக்கும் அது மிக மிகத் தேவை. முன்பு குறிப்பிட்டது போன்று மனிதர் செய்யும் குற்றங்களுக்குக் குற்றம் செய்யும் மனிதர் மட்டுமே பொறுப்பன்று, யாருக்கு எதிராக குற்றம் செய்யப்பட்டதோ அவரும் - இவர்கள் இருவரும் நாம் வாழும் சமுதாயமும் பொறுப்பே!

எனவேதான் இறையாட்சிச் சமூகத்தில் ஏழுமுறை எழுபது முறை - எண்ணற்ற முறை மன்னிக்க வேண்டும் என இயேசு அறுதியிட்டுக் கூறுகின்றார். இறையாட்சி மக்களின் அருள்நெறி மறைநூல் அறிஞர், பரிசேயரின் நெறியை விட சிறந்திருக்க வேண்டும். இல்லையெனில் ஒருவர் இறையாட்சியில் புக முடியாது. (மத் 5:20) மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மூன்று முறை மட்டுமே மன்னிக்கப் பணித்தனர். இயேசுவின் முதன்மைச் சீடர் பேதுரு ஏழுமுறை மன்னிக்கத் தயாராய் இருந்தார் (லூக் 17:41). ஆனால் இயேசு இவ்வெண்ணிக்கைகளை உதறித் தள்ளி விட்டு எண்ணற்ற முறையில் மன்னிக்க வலியுறுத்துகிறார்.

இறையாட்சி என்பது மன்னிக்கப்பட்டோரின் சமூகம். மன்னிக்கப் பெற்ற அனுபவம் கொண்ட இவர்களும் பிறரை மன்னிப்பதே இயல்பானது. இறையாட்சியில் பழிவாங்குதலுக்கு இடமில்லை. அங்கு எல்லையற்ற மன்னிப்பு மட்டுமே வாழ்க்கை முறையாகிறது. மன்னிக்க மறுப்போர் தாங்களே இறையாட்சி சமூகத்திற்குப் புறம்பே சென்று விடுகிறார்கள். தொடர்ந்து கடவுளால் மன்னிக்கப் பெறவும் தகுதி இழக்கிறார்கள். இயேசுவே கூறுவது போன்று, "மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்" (மத் 6:15). இந்த அடிப்படையில் தான் நாமும் ஆண்டவர் கற்றுத் தந்த செபத்தில் "எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல, எங்கள் குற்றங்களையும் மன்னியும்" (மத் 6:12) என வேண்டுகிறோம்.

இன்று நாம் வாழும் உலகில் மன்னித்தல் மிகவும் குறைந்துள்ளது. இது ஆபத்தானது. இதுவே பல சீரழிவுகளுக்கும் பகைமைகளுக்கும் போர்களுக்கும் காரணம். பிறர் குற்றங்களுக்குத் தாங்களும் காரணம் என்பதால் பிறரை மன்னிக்க இயேசு இன்றும் அறைகூவல் விடுக்கிறார். அவர் சிலுவையில் இறக்கும் நிலையிலும் தம்மைக் கொன்றோரை முழுமனதுடன் மன்னித்த நிகழ்வு (லூக் 23:34) அனைவருக்கும் இன்றும் என்றும் ஓர் ஒப்பற்ற பாடமாகவே உள்ளது.

மன்னிக்கும் திருப்பணியை மேற்கொண்டுள்ள அருள்பணியாளர்கள் கூட சில வேளையில் பிறரை மன்னிப்பதில் தயக்கம் காட்டுவது முற்றிலும் முரண்பாடே. மன்னிப்பு அனுபவத்தால் அவர்கள் நிறைந்திருந்தால் அவர்களும் நிறைவாய் மன்னிப்பர். தங்கள் உடன் மனிதரை மன்னிக்க மறுக்கும் அருள்பணியாளர் மன்னிப்பு அருள்சாதனத்தை நிறைவேற்ற முன்வருவது ஒரு கேலிக்கூத்தாகும் எனக் கூறினால் அது மிகையாகாது!

## XIX தூய ஆவியார் நம்மை

அவன் வெறுப்பதை நாம் வெறுத்தொதுக்க முடிகிறது.

- தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் இயேசுவைப்போல் சமூகச் சேவையிலும் ஈடுபடுவர்.
- தீராத நோயிலிருந்தும், உணர்ச்சிக் கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுதலை பெறுகின்றனர் உதாரணம் காசநோய், சர்ம நோய், தொழுநோய், பயம், கவலை, குற்றப்பழி உணர்வு, தாழ்வு மனப்பான்மை, கோபம், பகைமை உணர்ச்சி முதலியன.
- நற்செய்தியை எங்கும் அறிவிக்க வேண்டும் என்ற தனியாத தாகமும், உற்சாகமும், உண்டாகிறது.
- எல்லா மக்களையும் மதம், இனம், மொழி, சாமி, சிற, வேற்றுமையின்றி அன்பு செய்யும் ஆத்தும பாரத்தோடு பரிந்துரை செய்யும் கடமை உணர்வும் ஏற்படுகிறது.

# எந்நேரமும் கண்காணிக்கும் அன்னை மரியா

804 மீட்டர் உயரமுடைய ஃபிகோஞ்ஞா (Figogna) என்ற மலை, இத்தாலி நாட்டின் வடமேற்கிலுள்ள, புகழ்பெற்ற ஜெனோவா துறைமுக நகருக்கு ஏறக்குறைய இருபது கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இந்த மலையிலுள்ள, அன்னை மரியா திருத்தலம், இத்தாலியில் திருப்பயணிகள் அதிகமாகச் செல்லும் திருத்தலங்களில் ஒன்றாகும். மத்திய காலத்தில், ஜெனோவா துறைமுகத்தை நோக்கி வரும் கப்பல்களையும், படைகளையும் இந்த ஃபிகோஞ்ஞா மலையிலிருந்து கண்காணித்து வந்தனர். இதனால், இத்திருத்தலம், கண்காணிப்பு அன்னை திருத்தலம் (Nostra Signora della Guardia) என அழைக்கப்படுகின்றது. இத்திருத்தலத்திற்கு ஒரு வரலாறும் உள்ளது. 1490ம் ஆண்டு ஆவணி 20ம் திகதி, பெனெதெத்தோ பரேத்தோ (Benedetto Pareto) என்ற விவசாயிக்கு, அன்னை மரியா தோன்றி, இந்த ஃபிகோஞ்ஞா மலையில் தனக்கென ஓர் ஆலயம் எழுப்புமாறு கேட்டுக்கொண்டார். இதைக் கேட்டு வியப்படைந்த பரேத்தோ அவர்கள், நானோ ஏழை, ஆலயத்தை என்னால் கட்ட இயலாது என்று சொன்னார். அதற்கு அன்னை மரியா, அஞ்ச வேண்டாம் என்று, அவரிடம் சொன்னார். அன்று வீடு திரும்பிய பரேத்தோ அவர்கள், இக்காட்சி பற்றி யாரிடமும் சொல்லவில்லை. சில நாள்கள் கழித்து, பரேத்தோ அவர்கள் ஒரு மரத்திலிருந்து கீழே விழுந்து படுகாயமடைந்தார். அன்னை மரியா மீண்டும் அவருக்குத் தோன்றினார். அவரும் அற்புதமாக குணமடைந்தார். இந்த நிகழ்வுக்குப் பின், அவர், அன்னை மரியா தனக்குத் தோன்றி கேட்டுக்கொண்டது பற்றி, எல்லாரிடமும் கூறி, ஆலயம் கட்டுவதற்கு உதவி கேட்டார். அன்னை மரியா தோன்றிய இடத்தில் முதலில் சிறிய ஆலயம் ஒன்றைக் கட்டினார் பரேத்தோ. அங்குச் செல்லும் திருப்பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கவே, அவ்விடத்தில் பெரிய ஆலயம் கட்டப்பட்டு, 1890ம் ஆண்டு வைகாசி 26ம் திகதி அர்ச்சிக்கப்பட்டது. பின்னர், பழைய ஆலயம் இடிக்கப்பட்டு, 1903ம் ஆண்டில் புதிய ஆலயம் கட்டப்பட்டது. ஜெனோவாவைச் சேர்ந்த திருத்தந்தை 15ம் பெனடிக்ட், 1915ம் ஆண்டு பங்குனி 11ம் திகதி, இந்த ஆலயத்தை பசிலிக்கா நிலைக்கு உயர்த்தினார். திருத்தந்தையர் புனித 2ம் ஜோன் போல் (புரட்டாதி 22, 1985), 16ம் பெனடிக்ட் (வைகாசி, 18, 2008) ஆகிய இருவரும், இத்திருத்தலத்திற்குச் சென்றுள்ளனர். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வைகாசி 27, 2017 அன்று இத்திருத்தலத்தில் ஜெனோவா பகுதி இளையோரைச் சந்தித்தார்.



**அன்னை மரியா, தாய்க்குரிய பாசத்துடன், எவ்வேளையிலும் நம்மைக் கண்காணித்து பராமரித்து வருகிறார்.**




## வீட்டு வைத்தியம்

- வசம்பை இடித்துத் தூளாக்கி இரண்டு கிராம் அளவு எடுத்து வாயில் போட்டு சுவைத்து, வெந்நீர் குடித்தால் நரம்புத் தளர்ச்சி குணமாகும்.
- கண்களில் எந்த நோய் தென்பட்டாலும் அன்னாசிப்பழம் அடிக்கடி சாப்பிட்டு வந்தால் குணமாகும்.
- இஞ்சியைப் பிழிந்து கொஞ்சம் உப்புப் போட்டு குடித்தால் வயிற்று வலி, வயிற்றுப் போக்கு நிற்கும்.
- கடலை மாவு, வெந்தயம் அடிக்கடி தேய்த்து வந்தால் பருக்கள் நீங்கும் முகம் சொரசொரப்பு எரிச்சல் நீங்கும்.
- கறிவேப்பிலை, கரிசலாங்கண்ணி, கீழாநெல்லி போன்றவற்றின் சாறெடுத்து தினமும் தலையில் தடவி வர நரை மாறும்.

## ஹிமோகுளோபின் அளவை அதிகரிக்க உதவும் பழங்கள்

- ☺ திராட்சைப்பழம் கருப்பு / பச்சை
- ☺ பேரீச்சம்பழம்
- ☺ மாதுளம்பழம்
- ☺ தர்ப்பூசணி
- ☺ அத்திப்பழம்
- ☺ கொய்யாப்பழம்



## சத்தான ஸ்நாக்ஸ் தினை உருளைக் கிழங்கு கட்லெட்



சிறுதானியங்களை உணவில் அடிக்கடி சேர்த்து கொள்வது நல்லது. இன்று தினை, உருளைக்கிழங்கை வைத்து சத்தான கட்லெட் செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

**தேவையான பொருட்கள் :**

உருளைக்கிழங்கு - 2,
தினை அரிசி - ஒரு கப்,
இஞ்சி பூண்டு விழுது - அரை டீஸ்பூன்,
பச்சை மிளகாய் விழுது - ஒரு டீஸ்பூன்,
பச்சைப் பட்டாணி - கால் கப்,
கேரட் - 2,
உப்பு, எண்ணெய் - தேவைக்கு ஏற்ப,
கொத்தமல்லி, புதினா - சிறிதளவு.

**செய்முறை :**

- ✱ தினை அரிசியை வேகவைத்து கொள்ளவும்.
- ✱ உருளைக்கிழங்கு. பச்சை பட்டாணியை வேக வைத்து மசித்து கொள்ளவும்.
- ✱ கேரட்டை துருவிக்கொள்ளவும்.
- ✱ ஒரு பாத்திரத்தில் வேக வைத்து உருளைக்கிழங்கை போட்டு அதனுடன், வேகவைத்த தினை அரிசி, இஞ்சி பூண்டு விழுது, பச்சைமிளகாய் விழுது, வேகவைத்த பச்சைப்பட்டாணி, துருவிய கேரட், உப்பு, கொத்தமல்லி, புதினா சேர்த்துப் பிசைந்துகொள்ளவும்.
- ✱ பிசைந்த மாவை, விருப்பமான வடிவில் தட்டி (தட்டையாகவோ, நீளமாக உருட்டியோ) வைக்கவும்.
- ✱ தோசைகல்லை அடுப்பில் வைத்து சூடானதும் உருட்டி வைத்துள்ள கட்லெட்டுகளை போட்டு, சுற்றிலும் எண்ணெய் விட்டு இருபுறமும் சிவக்கவிட்டு எடுத்தால், கட்லெட் தயார்.
- ✱ தினை உருளைக்கிழங்கு கட்லெட் ரெடி.

# இதய நோயிலிருந்து தப்பிக்க....



மனித உடலின் மிக மிக முக்கியமான உறுப்பு இதயம் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அப்படிப்பட்ட இதயத்தை எவ்வாறு போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும்.

- ❖ சரிவிகித அன்றாட உணவு, தேவையான உடற்பயிற்சி, நல்ல சிந்தனைகள் இவைகளைக் கடைப்பிடிப்பவர்களுக்கு இதயநோய் அபாயம் குறைவு.
- ❖ காலை உணவை எக்காரணம் கொண்டும் தவிர்க்கக்கூடாது.
- ❖ இரவு நேர உணவை, நாம் உறங்கச் செல்வதற்கு மூன்று மணி நேரத்திற்கு முன்பே சாப்பிட்டு விடுவது நல்லது. அதாவது இரவு 8 மணிக்குள் சாப்பிட்டுவிட வேண்டும்.
- ❖ பசிக்குச் சாப்பிடுங்கள், ருசிக்குச் சாப்பிடாதீர்கள்.
- ❖ அரை வயிறு சாப்பாடு, கால் வயிறு தண்ணீர், கால் வயிறு காலியாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- ❖ தினமும் மூன்று லீட்டர் தண்ணீர் அவசியம் அருந்த வேண்டும்.
- ❖ அதிக உப்பு, காரம், மசாலா நிறைந்த உணவுகளை அறவே நீக்கிட வேண்டும்.
- ❖ எண்ணெயில் பொரித்த பூரி முதல் அப்பளம் வரை தவிர்ப்பது நல்லது.
- ❖ கவலை, பயம், பதட்டம் போன்றவை உடலின் எல்லா உறுப்புக்களையும் பாதித்த போதிலும், இதய இரத்த நாளங்களை அதிகப்படியான பாதிப்புக்கு உள்ளாக்குகின்றன.
- ❖ எனவே ஒருபோதும் கவலைப்படக் கூடாது. கவலைப்படுவதால், இரத்தக் குழாய்கள் சுருங்கி விடுகின்றன. இரத்தக்குழாய் சுருங்கும்போது “ஹார்ட் அட்டாக்” அபாயம் அதிகரிக்கிறது.
- ❖ எதிர்மறைச் சிந்தனைகள் எப்போதும் நம் ஆரோக்கியத்திற்கு எதிரானவை. எனவே உடன்பாட்டுச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- ❖ நகைச்சுவை உணர்வு உள்ளவர்களுக்கு இதயநோய் அபாயம் இல்லை. எனவே மனம் விட்டு பேசி சிரிங்க. நம் ஜெனிட்டிக் தன்மையையே மாற்றிவிடும் சக்தி மனமகிழ்ச்சிக்கு இருக்கிறது.

# நடை



ஒருவரது நடையை வைத்தே அவர் எத்தகையவர்? என்பதை தெரிந்து கொள்ள முடியும்.

- ✱ வேகமாக, தோள் உயர்த்தி நடந்தால் மகிழ்ச்சி
- ✱ மெதுவாகக் கூன் போட்டு, கால்களைக் சிரமப்பட்டு எடுத்து வைத்து நடந்தால் சோகம்
- ✱ கால்சட்டையில் கைபோட்டு நடப்பவர் எதையோ மறைக்கின்றார் அல்லது இவர் இரகசியம் காப்பவர் அல்லது குறைகூறும் தன்மை கொண்டவர்
- ✱ இடுப்பில் கை வைத்து நடப்பவர் துரிதமாகத் தன் குறிக்கோளை அடையக் கூடியவர்.
- ✱ ஒருவர் தன் தலையைக் குனிந்தவாறே, கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு நடந்தால் மனதில் ஏதோ பிரச்சினை குறித்துச் சிந்திக்கின்றார் என்று பொருள்.
- ✱ ஒருவர் முகத்தை உயர்த்தி, கைகளை வீசி, கால்களை நேராக வைத்து நடந்தால், மன அமைதியோடு, நிறைவான மனநிலையில் உள்ளார் என்று பொருள்.
- ✱ ஒருவர் முன்னால் செல்லும்பொழுது பின்னால் ஒருவர் நடந்து சென்றால், முன் செல்பவருக்கு மரியாதை அளிக்கிறார் என்று பொருள்.
- ✱ ஒருவர் கால்களை எட்டப்போட்டு நடந்தால் அவர் தைரியமானவர், சுயநம்பிக்கை உடையவர் என்று பொருள்.
- ✱ ஒருவர் வேகமாக, குறுகிய அடிகளாய் எடுத்து வைத்து நடந்தால், மனவலிமை குன்றியுள்ளார் என்று பொருள்.

## கர்ப்பிணி பெண்களுக்கு செல்போனால் ஆபத்து



கர்ப்பிணிகள் செல்போன் உபயோகித்தால் குழந்தைகளில் நடத்தையில் மாற்றம் ஏற்படும் என்று ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது. குழந்தைகள் முரடர்களாக மாறும் வாய்ப்பு அதிகம் உள்ளதால் கர்ப்பிணிகள் செல்போன் உபயோகிப்பதை தவிர்க்கவேண்டும் என்று ஆய்வாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

குழந்தைகள் நலனுக்கும், மொபைல்போனுக்கும் உள்ள தொடர்பு பற்றி அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.7 வயதான 28 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்களும், அவர்களின் பெற்றோரும் இந்த ஆய்வில் பங்கேற்றனர். அதே போல் 1996 முதல் 2002 வரை கர்ப்பமடைந்த பெண்கள் பற்றியும் விவரங்கள் சேகரிக்கப்பட்டன. ஒரு லட்சம் பேரிடையே நடத்தப்பட்ட ஆய்வின் முடிவில், கர்ப்பமடைந்த பெண்கள் தொடர்ச்சியாக மொபைல்போன் பயன்படுத்தினால், அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளின் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டது தெரியவந்தது.

முரட்டுத்தனம் அதிகரிப்பு: ஆய்வில் பங்குபெற்ற 3 சதவீத குழந்தைகள் வழக்கத்திற்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். உடல் பருமன், எளிதில் உணர்ச்சி வசப்படுத்தல் போன்ற பாதிப்புகளையும் கொண்டிருந்தனர். சில சமயம் முரடர்கள் போல் நடந்து கொண்டனர். இதற்கு சிறுவர்களின் தாய் கர்ப்பமாக இருந்த காலத்தில் தொடர்ச்சியாக மொபைல்போன் பயன்படுத்தியது தான் காரணம் என தெரியவந்துள்ளதாக ஆய்வுக்குழுத் தலைவர் லீகா கெய்பட்ஸ் கூறியுள்ளார். இதனை அந்த குழந்தைகளில் பெற்றோரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

எனவே கர்ப்பகாலத்தில் பெண்கள் மொபைல்போனை பயன்படுத்தினால், அவர்களின் குழந்தைகள் முரட்டுத்தனம் கொண்டவர்களாக மாறும் வாய்ப்புள்ளது. என்று கண்டறியப்பட்டுள்ளது.




## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

**"நாம் வாழ்வது, வேலைசெய்வது, கடுமையாக முயற்சி செய்வது, துன்புறுவது ஆகியவற்றின் இலக்கையும், மகிமையையும் நினைவு கூர்ந்தவர்களாய், நம் வாழ்வை எப்போதும் உயர்நிலைக்கு வைத்திருக்கும் வழிகளைத் தேடுவோமாக"**

**"நமக்கு வரும் சவால்களை பொறுமையோடு எதிர்கொள்ளவும், அன்புடன் அவற்றை வெல்லவும் வரம் வேண்டி, மரியாவிடம் நம்மையே ஒப்புக்கொடுப்போம். சீனாவில் உள்ள கத்தோலிக்கர்களுடன் இணைந்து செபிப்போம்"**

**"விண்ணக மகிமைக்கு இறைவன் ஏறிச் சென்றதில், இறைவனோடு இணைந்த முழு வாழ்வில் நாமும் பங்கு பெறுகிறோம். இதனை நாம், நம் தினசரி வாழ்வில், நம் இதயங்களில் எடுத்துச் செல்வோம்"**

**"இடர்களை எதிர்கொள்ளும் நேரங்களில் நாம் கடவுளை மறந்தாலும்கூட, அவர் நம்மோடு எப்போதும் துணை நிற்கிறார்"**

**"பிறர் இல்லாமலும், பிறருக்கு மேம்பட்டவர்களாக, அல்லது பிறருக்கு எதிரானவராக வாழாமல், பிறரோடும், பிறருக்காகவும் வாழ்வதற்கு நாம் அழைக்கப்பட்டுள்ளோம்"**

## காப்டிக் கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டதற்கு திருத்தந்தை இரங்கல்



எகிப்தில், காப்டிக் வழிபாட்டுமுறை கிறிஸ்தவர்கள், பயங்கரவாதத் தாக்குதலில், கொல்லப்பட்டது குறித்து, தனது ஆழ்ந்த அனுதாபத்தை வெளியிட்டுள்ள அதேவேளை, இக்கொலைகள், வெறுப்பின் அறிவற்ற செயல் என, தனது வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

திருத்தந்தையின் இந்த அனுதாபத்தை, தந்திச் செய்தியாக, திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள், எகிப்து அரசுத்தலைவர், Abdul Fattah al-Sisi அவர்களுக்கு அனுப்பியுள்ளார்.

எகிப்து தலைநகர் கெய்ரோவிலிருந்து, ஏறக்குறைய, 140 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள, புனித சாமுவேல் துறவு மடத்திற்கு, திருப்பயணம் மேற்கொண்ட கிறிஸ்தவர்கள் சென்ற பேருந்தில், துப்பாக்கிகளுடன் வந்த ஏறக்குறைய பத்து மனிதர்கள் சுட்டதில், குறைந்தது 28 பேர் கொல்லப்பட்டனர், மற்றும், ஏறக்குறைய 23 பேர் காயமடைந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களும், சிறாரும்.

இப்பயங்கரவாதத் தாக்குதலில் பலியானவர்கள் மற்றும், காயமடைந்தவர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும், தனது செபங்களையும், ஒருமைப்பாட்டுணர்வையும் தெரிவித்துள்ள திருத்தந்தை, எகிப்தில் அமைதியும் ஒப்புரவும் ஏற்படுவதற்கு, தான் செபிப்பதாகவும் கூறியுள்ளார்.

# தூய ஆவியாரை இதயத்தில் பாதுகாத்துக்கொள்ள திருத்தந்தை அழைப்பு



தூய ஆவியார், இனிமையும், மதிப்பும் நிறைந்த ஒரு சிறப்பு மொழியை நம்மிடம் பேசுகிறார், இவரின் இந்த மொழி, கிறிஸ்தவர்கள் என்பதை நம் எண்ணத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஞாயிறு திருப்பலியில், மறையுரை வழங்கினார்.

உரோம் நகரிலுள்ள புனித பீட்டர் தமியான் (San Pier Damiani ai Monti di San Paolo) பங்கிற்கு, 21.05.2017 அன்று ஞாயிறு மாலையில் சென்று, புதுநன்மைக்குத் தயார் செய்யும் 80 சிறார், ஏறக்குறைய நூறு இளையோர் உட்பட பல்வேறு குழுவினரைச் சந்தித்து திருப்பலி நிறைவேற்றியத் திருத்தந்தை, நாம் பெற்றுள்ள தூய ஆவியாரைக் காத்துக்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி மறையுரையாற்றினார்.

கோபமும், கசப்புணர்வும் தீயவனின் தூண்டுதலால் வருபவை, இவை, பொறாமையினால் வெளிப்படுபவை, பிளவுகளை உருவாக்கும் இந்தப் போக்கு, நம் கிறிஸ்தவ சமூகங்களில் பரவலாகக் காணப்படுகின்றது என்றும், திருத்தந்தை தெரிவித்தார். இவ்விதப் போக்கு, உண்மையிலேயே என் இதயத்தைக் காயப்படுத்துகின்றது, நாம் ஒருவர் ஒருவர் மீது கற்களை எறிவதுபோல் இது உள்ளது, தீயவன் இதனால் ஆனந்தமடைகின்றான், இது தூய ஆவியாரைக் கேலிக்கு உட்படுத்துவதாகும் என்றும், திருத்தந்தை, மறையுரையில் கூறினார். கடவுளின் தூய ஆவியாருக்குத் துயரம் வருவிக்காமல் இருக்கவும், நம்மிலுள்ள ஆவியானவரைக் காத்துக்கொள்ளவும் அருள்வேண்டி மன்றாடுவோம் என்றும், இனிமையாகப் பேசும் மற்றும், பிறரை மதிக்கும் பண்பை வளர்த்துக்கொள்வோம் என்றும் திருத்தந்தை கேட்டுக்கொண்டார்.

தூய ஆவியார் நம்மிடம் நடந்துகொள்வது போன்று, பிறரை எப்போதும் கனிவுடனும் மதிப்புடனும் நடத்துமாறும், புறங்கூறுதலை விலக்கி நடக்குமாறும் புனித தமியான் பங்கு மக்களைக் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ். புனித பீட்டர் தமியான் இறந்ததன் 900மாம் ஆண்டையொட்டி, அருளாளர் திருத்தந்தை 6ம் பவுல் 1972ம் ஆண்டிலும், புனித திருத்தந்தை 2ம் ஜான் பால், 1988ம் ஆண்டிலும் இந்தப் பங்கிற்குச் சென்றுள்ளனர்.

# தூய ஆவியாருக்கு இதயத்தைத் திறங்கள் – திருத்தந்தை



இயேசுவே ஆண்டவர் என்று சொல்வதற்கு நமக்குக் கற்றுத்தர வல்லவர் தூய ஆவியார் மட்டுமே என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்திங்கள் காலை நிறைவேற்றியத் திருப்பலியில், மறையுரை வழங்கினார். "நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம், நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன், தூய ஆவியாராம் துணையாளரை உங்களுக்கு அனுப்புவேன், அவர், தந்தையிடம் உங்களுக்காகப் பரிந்து பேசுவார்..." என, இயேசு இறுதி இரவு உணவின்போது தம் சீடர்களுக்கு ஆற்றிய நீண்ட உரையை மையப்படுத்தி, இத்திருப்பலியில் மறையுரையாற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தூய ஆவியாருக்குச் செவிமடுக்கும் வண்ணம், நாம் நம் இதயங்களைத் திறந்து வைத்திருக்க வேண்டும், இதன் வழியாக நாம் கிறிஸ்துவுக்குச் சான்று பகர முடியும் என, தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றியத் திருப்பலியில், கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசுவால் நாம் மீட்கப்படுவோம் என்பதற்கு உறுதி வழங்கும் தூய ஆவியாராம் துணையாளர் பற்றி, தனது மறையுரையில் சிறப்பாக கவனம் செலுத்திய திருத்தந்தை, இயேசுவின் கொடையாகிய தூய ஆவியார், திருஅவையின் தோழராகப் பயணம் செய்கிறார் என்றும் கூறினார்.

தூய ஆவியார் இன்றி, இயேசுவே ஆண்டவர் என, நம்மில் யாருமே சொல்ல முடியாது, அதை ஏற்று வாழ முடியாது என்றும், தூய ஆவியாருக்கு நாம் இதயங்களைத் திறக்காவிடில், அவரால் அங்கு நுழைய முடியாது என்றும் மறையுரையில் கூறினார் திருத்தந்தை.


நம் இதயங்கள் உண்மையிலேயே, தூய ஆவியாருக்குத் திறக்கப்பட்டுள்ளனவா எனவும், தூய ஆவியாரின் ஏக்கங்களையும், அவர் நம் இதயங்களில் சொல்வதையும் கேட்பதற்கு நாம் முயற்சிக்கின்றோமா? எனவும், நம்மையே நாமே கேட்டுக்கொள்வோம் என, திருப்பலியில் கலந்துகொண்ட விசுவாசிகளிடம் கூறியத் திருத்தந்தை, தூய ஆவியாருக்கு நம் இதயங்களைத் திறப்பதற்கு ஆண்டவரிடம் அருளை மன்றாடுவோம் எனவும் கூறினார்.

# கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை அறிவிப்பதற்காக உள்ள இடம் உலகம்

இயேசு கிறிஸ்துவை அறிவிப்பதற்காக, கிறிஸ்தவர்களின் இடமாக இருப்பது, இந்த உலகம் என்றும், அதேநேரம், இயேசுவோடு ஒன்றிணைவதற்காக, கிறிஸ்தவர்களின் பார்வை, எப்போதும் விண்ணை நோக்கியதாய் இருக்க வேண்டும் என்றும், 26.05.2017 அன்று வெள்ளி காலை மறையுரை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருவிவிலியம் கிறிஸ்தவர்களின் பயணத்திற்கு, மூன்று வார்த்தைகளையும், மூன்று இடங்களையும் குறிப்பிடுகின்றது என்று சொல்லி, அவற்றை விளக்கினார். முதல் வார்த்தை நினைவு என்றும், உயிர்பெற்றெழுந்த இயேசு தம் சீடர்களை கலிலேயாவுக்குப் போகச் சொன்னார், இங்கு, சீடர்களுக்கு, உயிர்த்த ஆண்டவருடன் முதல் சந்திப்பு நடந்தது என்றும் கூறியத் திருத்தந்தை, நம் ஒவ்வொருவருக்குமே, உயிர்த்த ஆண்டவர் தம் சீடர்களுக்குத் தோன்றிய கலிலேயா உள்ளது, அங்கு நாம் அவரைச் சந்தித்தால், அவரை ஆர்வமுடன் பின்பற்றும் மகிழ்வு கிடைக்கும் என்றும் கூறினார்.

நல்ல கிறிஸ்தவராக வாழ்வதற்கு, இயேசுவோடு நாம் நடத்திய முதல் சந்திப்பின் நினைவு எப்போதும் நம்மிடம் இருக்க வேண்டும் என உரைத்த திருத்தந்தை, மறைநூல் குறிப்பிடும் இரண்டாவது இடம் விண்ணகம் என்றும், நாம் இவ்வுலகில் இருந்துகொண்டே விண்ணகம் பற்றிய சிந்தனைகளில் வாழ வேண்டும் என்றும் கூறினார். மறைநூல் குறிப்பிடும் மூன்றாவது இடம், உலகம் என்றும், இயேசு விண்ணேற்பு அடையும் முன்,



நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள் என்று தம் சீடர்களிடம் சொன்னார் என்றும் கூறியத் திருத்தந்தை, நாம் இயேசுவை அறிவிக்கும் இடம், இந்த உலகம் என்று உரைத்தார்.

நாம் இயேசுவால் மீட்படைந்துள்ளோம், நமக்கு அருளை வழங்கவும், இறைத்தந்தையிடம் நம் அனைவரையும் அழைத்துச் செல்லவும், அவர் இவ்வுலகுக்கு வந்தார் என்ற, இயேசுவின் திருவார்த்தையை அறிவிப்பதற்கு, கிறிஸ்தவர்களுக்குரிய இடம் இந்த உலகம் என, மறையுரையில் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். நினைவு, செபம், மறைப்பணி ஆகிய மூன்று வார்த்தைகளும், கலிலேயா, விண்ணகம், உலகம் ஆகிய மூன்று இடங்களுமே கிறிஸ்தவர்களைக் குறித்துக் காட்டும் அடையாளங்கள் என்றுரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்தக் கூறுகளுடன் வாழ்ந்தால், கிறிஸ்தவ வாழ்வு அழகாகவும், மகிழ்வாகவும் அமையும் எனக் கூறினார்.

'நான்கு நற்செய்திகளையும், தனித்துப் படிக்கும்போது இயேசுவின் வாழ்க்கையையும் பணிகளையும், வரலாற்றுக்கோர்வையாக அறிந்து கொள்வது எளிதன்று எனவே நான்கு நற்செய்திகளையும், தொகுத்து, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் விண்ணேற்பு வரை சுலபமாகப் படித்து அறிய ஒரு சந்தர்ப்பம் இதோ. இயேசுவை ஆழமாக அறியவும், அவர் வாழ்ந்த விழுமியங்களை அறிந்து கொள்ளவும் இத் தொடரை தொடர்ந்து வாசித்து பயன்பெறுங்கள்



# உள்ளத்தை தொடும் போதனைகள்

வாழ்விற்கு புதிய வழிமுறைகள்

அதிகாரம் 01

## 13. மகிழ்வோடு நோன்பு இருத்தல்

**மத் 6:16** மேலும் நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்கவேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

**மத் 6:17** நீங்கள் நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து, முகத்தைக் கழுவுங்கள்.

**மத் 6:18** அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது மாறாக. மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்.

## 14. விதை விதைப்பவர் உவமை



**மத் 13:1** அதே நாளில் இயேசு வீட்டிற்கு வெளியே சென்று கடலோரத்தில் அமர்ந்தார்.

**மத் 13:2** மக்கள் பெருந்திரளாய் அவரிடம் ஒன்றுகூடி வந்தனர். ஆகவே அவர் படகில் ஏறி அமர்ந்தார். திரண்டிருந்த மக்கள் அனைவரும் கடற்கரையில் நின்றுகொண்டிருந்தனர்.

**மத் 13:3** அவர் உவமைகள் வாயிலாகப் பலவற்றைக் குறித்து அவர்களோடு பேசினார்" விதைப்பவர் ஒருவர் விதைக்கச் சென்றார்.

**மத் 13:4** அவர் விதைக்கும்பொழுது சில விதைகள் வழியோரம் விழுந்தன. பறவைகள் வந்து அவற்றை விழுங்கி விட்டன.

**மத் 13:5** வேறு சில விதைகள் மிகுதியாக மண் இல்லாப் பாறைப் பகுதிகளில் விழுந்தன. அங்கே மண் ஆழமாக இல்லாததால் அவை விரைவில் முளைத்தன

**மத் 13:6** ஆனால் கதிரவன் மேலே எழ, அவை காய்ந்து, வேரில்லாமையால் கருகிப் போயின.

**மத் 13:7** மற்றும் சில விதைகள் முட்செடிகளின் இடையே விழுந்தன. முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெருக்கிவிட்டன.

**மத் 13:8** ஆனால் இன்னும் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவற்றுள் சில நூறு மடங்காகவும் சில அறுபது மடங்காகவும் சில முப்பது மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன.

**மத் 13:9** கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்" என்றார்.

**மத் 13:10** சீடர்கள் அவரருகே வந்து, "ஏன் அவர்களோடு உவமைகள் வாயிலாகப் பேசுகின்றீர்?" என்று கேட்டார்கள்.

**மத் 13:11** அதற்கு இயேசு அவர்களிடம் மறுமொழியாகக் கூறியது "விண்ணரசின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது அவர்களுக்கோ கொடுத்து வைக்கவில்லை.

**மத் 13:12** உள்ளவருக்குக் கொடுக்கப்படும் அவர் நிறைவாகப் பெறுவார். மாறாக, இல்லாத வரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும்.

**மத் 13:13** அவர்கள் கண்டும் காணபதில்லை கேட்டும் கேட்பதில்லை புரிந்து கொள்வதுமில்லை. இதனால் தான் நான் அவர்களோடு உவமைகள் வாயிலாகப் பேசுகிறேன்.

**மத் 13:14** இவ்வாறு எசாயாவின் பின்வரும் இறைவாக்கு அவர்களிடம் நிறைவேறுகிறது "நீங்கள் உங்கள் காதால் தொடர்ந்து கேட்டும் கருத்தில் கொள்வதில்லை. உங்கள் கண்களால் பார்த்துக் கொண்டேயிருந்தும் உணர்வதில்லை.

**மத் 13:15** இம்மக்களின் நெஞ்சம் கொழுத்துப்போய்விட்டது காதும் மந்தமாகிவிட்டது. இவர்கள் தம் கண்களை மூடிக்கொண்டார்கள் எனவே கண்ணால் காணாமலும் காதால் கேளாமலும் உள்ளத்தால் உணராமலும் மனம் மாறாமலும் இருக்கின்றார்கள். நானும் அவர்களைக் குணமாக்காமல் இருக்கிறேன்."

**மத் 13:16** உங்கள் கண்களோ பேறுபெற்றவை ஏனெனில் அவை காண்கின்றன. உங்கள் காதுகளும் பேறுபெற்றவை ஏனெனில் அவை கேட்கின்றன.

**மத் 13:17** நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் பல இறைவாக்கினர்களும் நேர்மையாளர்களும் நீங்கள் காண்பவற்றைக் காண ஆவல் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் காணவில்லை. நீங்கள் கேட்பவற்றைக் கேட்க விரும்பினார்கள் ஆனால் அவர்கள் கேட்கவில்லை.

**மத் 13:18** "எனவே விதைப்பவர் உவமையைப் பற்றிக் கேளுங்கள்

**மத் 13:19** வழியோரம் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறையாட்சியைக் குறித்த இறைவார்த்தையைக் கேட்டும் புரிந்து கொள்ளமாட்டார்கள். அவர்கள் உள்ளத்தில் விதைக்கப்பட்ட விதைகளைத் தீயோன் கைப்பற்றிச் செல்லுவான்.

**மத் 13:20** பாறைப் பகுதிகளில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறைவார்த்தையைக் கேட்டவுடன் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வார்கள்.

**மத் 13:21** ஆனால், அவர்கள் வேரற்றவர்கள். எனவே அவர்கள் சிறிது காலமே நிலைத்திருப்பார்கள் இறைவார்த்தையின் பொருட்டு வேதனையோ இன்னலோ நேர்ந்த உடனே தடுமாற்றம் அடைவார்கள்.

**மத் 13:22** முட்செடிகளுக்கு இடையில் விழுந்த விதைகளுக்கு ஒப்பானோர் இறைவார்த்தையைக் கேட்டும் உலகக் கவலையும் செல்வ மாயையும் அவ்வார்த்தையை நெருக்கிவிடுவதால் பயன் அளிக்க மாட்டார்கள்.

**மத் 13:23** நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறைவார்த்தையைக் கேட்டுப் புரிந்து கொள்வார்கள். இவர்களுள் சிலர் நூறு மடங்காகவும், சிலர் அறுபது மடங்காகவும் சிலர் முப்பது மடங்காகவும் பயன் அளிப்பர்."

# தூய ஆவியார் நம்மை ஆட்கொண்டால்



**தூய ஆவியார் ஒருவரை ஆட்கொள்ளும்போது அவர் முற்றிலும், மாறிய புதிய படைப்பாகிறார். பழைய இயல்பு புதைக்கப்படுகின்றது. புதிய இயல்பு உயிர் பெற்றெழுகிறது. இருளின் ஆதிக்கம் மறைகிறது. அருளின் ஒளியின் வாழ்வு உதயமாகிறது. 'இதோ நான் அனைத்தையும், புதியனவாக்குகிறேன்' (தி.வெ 21:3) மனமாற்றமே புது வாழ்வின் ஆரம்பம் மனமாற்றத்தின் பின் தூய ஆவியார் தரும் மாற்றங்களைப் பார்ப்போம்**

★ தினமும் இறைவன் சந்நிதியில் தனித்து செபிக்க வேண்டும் என்ற ஆர்வம் பிறக்கிறது.

★ இறைவார்த்தை மேல் ஓர் வாஞ்சை ஏற்படுகிறது. அதைத் தினமும் படித்து சுவைத்து தியானிக்க ஆர்வம் ஏற்படுகிறது. இதனால் தூய ஆவியார் பல புதிய காரியங்களை வெளிப்படுத்துவார். முழு உண்மையை நோக்கி வழிநடத்துகிறார். இறைவார்த்தையே வாழ்வின் ஒளியும் வழியுமாக மாறுகிறது

★ இறைதந்தையின் எல்லையில்லா அன்பை அன்றாட வாழ்வில் அனுபவ ரீதியாக உணர முடிகிறது. இயேசுவே நம் மீட்பர் ஆண்டவர் என்று உணர முடிகிறது. தூய ஆவியார் நம்மோடு இருந்து, நம்மில் செயல்படுவதையும், வழிநடத்துவதையும் உணர முடிகிறது.

★ பல ஆண்டுகள் விட்டொழிக்க முடியாத பாவப்பழக்க வழக்கங்களிலிருந்து பாவக் கட்டுக்களிலிருந்தும் விடுதலை கிடைக்கின்றது. பாவத்தை வெல்ல வலிமை கிடைக்கிறது.

★ மண்ணுலகத்தை சார்ந்தவற்றில் உள்ள நாட்டம் குறைந்து விண்ணுலகத்தைச் சார்ந்தவற்றில் ஈடுபாடு வளர்கிறது.

★ தூய ஆவியால் பல கொடைகளாலும், கனிகளாலும் நம்மை நிரப்புவார். செபக்கொடை, இறைவாக்கு உரைக்கும் வரம், குணமளிக்கும் வரம், அன்பு, மகிழ்ச்சி, அமைதி போன்ற கனிகள் நமக்கு கிடைக்கின்றன.

★ நாம் தூய ஆவியாரின் ஏவுதல் படி நடக்க முடிகிறது அவர் விரும்புவதை நாம் செய்ய முடிகிறது.

# பரிசுத்த ஆவியை விசுவசிக்கின்றேன்



***நம் விசுவாசத்தின் அருட்சாதனமாகிய திருமுழுக்கு வழியாக தூய ஆவியை கொடையாக பெற்றுக்கொண்டோம் அவர் கடவுளிடமிருந்து வருபவர். கடவுள் தம் மகன் வழியாக அவரை நமக்கு அருளியுள்ளார். அந்த விசுவாசத்தை உறுதிப்படுத்தவே 'பரிசுத்த ஆவியை விசுவசிக்கின்றேன்' என்று ஆடம்பரமாக எங்களுடைய விசுவாசப் பிரமாணத்தில் அறிக்கையிடுகின்றோம்.***

தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் ***'இயேசுவே ஆண்டவர்'*** எனச் சொல்ல முடியாது (1 கொரி 12:3). நம் ஆண்டவர் அவருடைய பிள்ளைகளாக நாம் இருப்பதனால் தம் மகனின் ஆவியை அனுப்பியுள்ளார். அந்த ஆவி ***'அப்பா தந்தையே'*** (கலா 4:6) எனக் கூப்பிடுகின்றது. விசுவாசம் தொடர்பான அறிவானது தூய ஆவியிடம் மட்டுமே தங்கியுள்ளது. நாம் தூய ஆவியினால் முழுவதுமாக ஆட்கொள்ளப்பட வேண்டும் அவர் எம்மை சந்திக்கின்றார். எம் விசுவாசத்தை உறுதிப்படுத்துகின்றார்.

நம் விசுவாசத்தின் அருட்சாதனமாகிய திருமுழுக்கு வழியாக தூய ஆவியை கொடையாக பெற்றுக் கொண்டோம் அவர் கடவுளிடமிருந்து வருபவர். கடவுள் தம் மகன் வழியாக அவரை நமக்கு அருளியுள்ளார். அந்த விசுவாசத்தை உறுதிப்படுத்தவே ***'பரிசுத்த ஆவியை விசுவசிக்கின்றேன்'*** என்று ஆடம்பரமாக எங்களுடைய விசுவாசப் பிரமாணத்தில் அறிக்கையிடுகின்றோம். அந்த தூய ஆவியின் திருநாளை கொண்டாடும் இவ்வேளையில், அவரால் ஆட்கொள்ளப்பட்டு அந்த தூய ஆவியின் ***'உண்மையான ஒரே கடவுளையும் அவருடைய மகனாகிய இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்வதுமே'*** (யோவா 17:4) எமது அழைப்பாக இருக்கிறது.

***'பிதாவினின்றும் சுதனினின்றும் புறப்படும் ஆண்டவரும் உயிரளிப்பவருமான பரிசுத்த ஆவியை விசுவசிக்கின்றேன். இவர் பிதாவோடும் சுதனோடும் ஒன்றாக ஆராதனையும் மகிமையும் பெறுகின்றார்'*** எனவே இந்த விசுவாச மறையுண்மையானது ***'தமதிரித்துவ இறையியல்'*** வழியாக அறிந்து கொள்ள முடியும். இதே தூய ஆவியானவர் படைப்பின் தொடக்கத்தில் கடவுளோடு இருந்து மீட்பு அலுவல்களில் பங்காற்றினார். எனவே அவரை ***'ஆள்தன்மை'*** கொண்டவராக நாம் அறிகின்றோம். இறைத்திட்டத்தின் பணியில் படைப்புக்களின் தலைப்பேறான கிறிஸ்துவுடன் இணைந்து மனித குல மீட்புக்கு பணியாற்றினார்.

## 1. தூய ஆவியை பற்றி அறிந்து கொள்ளும் இடங்கள்

கிறிஸ்து தூய ஆவியை பற்றி பல இடங்களில் பேசியுள்ளார். அவர் தூய ஆவியை ***'துணையாளராக'*** (யோவா 14:16) காண்பிக்கின்றார். அத்தகைய ஆவியின் பணிகள் விவிலியத்திலும் திருச்சபையின் மரபிலும் செயலாற்றியதை நாம் காண்கின்றோம்.

- திருவிவிலியம் தோன்றுவதற்கு இறைவெளிப்பா -டாகவும், இறையூக்கமாகவும் இருந்தார்.
- திருச்சபை மரபில் திருச்சபையின் தந்தையர்களின் சாட்சிய வாழ்வில் இருந்தார்.
- திருச்சபையின் அதிகாரத்தை வழிநடத்தினார்
- அருட்சாதன வழிபாட்டில், வார்த்தையாகவும், அடையாளமாகவும், இருந்து கிறிஸ்துவுடன் எம்மை ஒன்றிக்கின்றார்.
- செபத்தில் எமக்காக பரிந்து பேசுகிறார்
- திருச்சபையின் பணியாளர்களுடன் உடனிருந்து கட்டியெழுப்புகிறார்
- அப்போஸ்தல மறைபரப்பு வாழ்வின் அடையாள -மாயிருக்கிறார்
- புனிதர்களின் தூய வாழ்விற்கு உறுதுணையாக இருந்து மீட்பின் பணியை தொடர துணை நின்றார்.

## 2) தூய ஆவியாரின் உண்மையான பெயர்

***'தூய ஆவி'*** என்று நாம் மகிமைப்படுத்துவது, தந்தை -யோடும் மகனோடும் இணைந்திருக்கும் அந்த நபரை. திருச்சபையானது இப்பெயரை கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொண்டு புதிய குழந்தைகள் திருமுழுக்கு பெறும்போது இதனை அறிக்கையிடுகின்றது.

***'ஆவி'*** என்பது எபிரேய மொழியில் மாற்றம் செய்யும்போது ***(ருஆ)'*** (Ruah) என்ற மொழிபெயர்க்கப்படுகிறது. இதன்பொருள் மூச்சு, ஆவி, காற்று இயேசு நிக்கதேமுடன் உரையாடும்போது இதுபற்றி (யோவா 3:8) தெளிவுபடுத்துகிறார்.

## 3) தூய ஆவியின் ஏனைய பெயர்கள்

தூய ஆவியார் பற்றியும் அவரது வருகையை பற்றியும் இயேசு குறிப்பிடும்போது ***'தேற்றுபவர்'*** (Paraclete) என்று கூறுகின்றார். இன்னுமொரு பக்கம் அவரை ***துணையாளர்'*** (யோவ 14:16) என்று காட்டுகின்றார். "Paraclete" என்பது தேற்றுபவர் ஆகவே இயேசுவே முதன் தேற்றரவாளர், இயேசுவும் தூய ஆவியை ***'உண்மையின் ஆவி'*** (யோவா 16:3) என்று காட்டுகின்றார்.

***'தூய ஆவி'*** என்ற பெயர் குறிப்பாக அப்போஸ்தலர் பணியிலும், பவுலின் மடல்களிலும் குறிப்பிடப்படுவதை காணலாம். புனித பவுலும் தூய ஆவியை பல பெயர் கொண்டு அழைப்பதை காணலாம்.

- ☆ வாக்களிக்கப்பட்டவர் (கலா 3:14)
- ☆ கிறிஸ்துவின் ஆவி (உரோ 8:9)
- ☆ கடவுளின் ஆவி (1 கொரி 6:11
- ☆ உரிமை பேற்றின் ஆவி (கலா 4:6)
- ☆ ஆண்டவரின் ஆவி (2 கொரி 3:17)
- ☆ மாட்சிமையின் ஆவி (1 பேதுரு 4:14)

## 4) தூய ஆவியின் உருவகங்கள்

தண்ணீர் : இது திருமுழுக்கின்போது தூய ஆவியார் செயற்பாட்டை சித்தரிக்கின்றது. "தூய ஆவியாரே உண்மை எனவே சான்று அளிப்பவை மூன்று இருக்கின்றன. தூய ஆவியும் நீரும், இரத்தமும், அவை" (1 யோவா 5:8)

அருட்பொழிவு : பரிசுத்த தைலத்தினால் அபிஷே கம் செய்வது தூய ஆவியை குறிக்கின்றது. கிறிஸ்து ஆவியால் அபிஷேகம் செய்யப்பட்ட நாமும் திருவருட்சாதனங்கள் வழியாக அபிஷேகம் செய்யப்படுகின்றோம்

நெருப்பு : இது தூய ஆவியின் பலத்தினால் செயற்பாடுகள் மாற்றமடைவதை சுட்டிக் காட்டுகின்றது. இறைவாக்கினர் எலியாவின் செபம் நெருப்பை போலவும், அவருடைய வார்த்தைகள் வெளிச்சம் போலும் எரிந்தது என்பதை காணலாம். (சீரா 48:1), "உலகிற்கு தீயை மூட்டவே வந்தேன" (லூக் 12:49) என்று இயேசு கூறுகிறார். பெந்தகோஸ்து நிகழ்வின் போது தூய ஆவி நெருப்பு வடியில் இறங்கியதையும் (தி. ப 2:3-4) அடையாளப்படுத்துகிறது.

மேகம், வெளிச்சம் : இது பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் இறைவனின் கருணையை பெற்ற விதத்தினை சுட்டிக் காட்டுகின்றது(வி.ப 24:15-18) மேகத்தினின்று ஒளிர்ந்ததை காண்கின்றோம்.

கரங்கள் : இயேசு தம் கரங்களை தலைமீது வைத்து சிறுவர்களை ஆசீர்வதித்தார். (மாற் 6:5) அப்போஸ்தலர்களும் இதனை தொடர்ந்தார்கள். தம் கரங்களை வைத்து செபித்து தூய ஆவியை அருளினார் ( திப 8:17-19)

விரல்கள் : நான் கடவுளின் ஆற்றலால் பேய்களை ஓட்டுகிறேன். (லூக் 11:20) கிறிஸ்து எழுதிய கடிதம். வாழும் கடவுளின் ஆவியால் எழுதப்பட்டது. (2 கொரி 3:3)

புறா : நோவா காற்று வெள்ளப்பெருக்கு நிறைவுற்றபோது புறாவை அனுப்பி பார்ப்பது (தொ.நூ 8:8-12) இயேசுவின் திருமுழுக்கு (மத் 3:16) ஆலயத்தில் நற்கருணை பேழையும் இரண்டு புறாக்களின் மத்தியில் ஸ்தாபித்திருப்பது என்பன தூய ஆவியை அடையாளப்படுத்துகிறது.

## 5) ஆவியில் நம் வாழ்வு

நாம் தூய ஆவி குடிகொள்ளும் உயிருள்ள ஆலயங்கள். அந்த ஆவி எம்மை பரிசுத்தப்படுத்தி வழிநடத்துகிறார். இறைவாக்கினர்கள், அரசர்கள், நீதிபதிகள் மற்றும் இயேசு கிறிஸ்துவை வழிநடத்திய அதே தூய ஆவியானவர் தான் இன்று எம்மை வழிநடத்துகின்றார். அந்த ஆவியில் இணைந்த வாழ்வு வாழவும், ஞானஸ்நானத்தின் மூலம் பெற்றுக்கொண்ட ஆவியார் மூலம் உறுதிப்பூசுதல் வழியாக நாம் திடப்படுத்தப்பட்டோம். ஆகவே ஆவியானவர் எம்மில் செயலாற்ற நாம் அவருக்கு எம்மை முழுவதுமாக அர்ப்பணிக்க வேண்டும். தூய ஆவியானவர் மனிதனையும் அவன் போகவேண்டிய பாதையையும் தம் அருளினால் பலப்படுத்துகிறார். இதே ஆவி உயிர்த்த ஆண்டவரை சந்திக்கச் செய்கிறார். அவருடைய பாடுகள், மரணத்தைப் பற்றி அறிந்துகொள்ள எமது சிந்தனையை சீர் செய்கின்றார். அவரோடு இணைந்திருக்கவும், இணைந்து பலன் கொடுக்கவும் எம்மை அழைக்கின்றார். அந்த ஆவியின் குரலுக்கு செவி கொடுத்து, அவருக்கு எமது இதயத்தை திறந்து செயலாற்ற விடும்போது கடவுளின் மகிமையான செயல்களை எங்கள் அன்றாட வாழ்வில் காணலாம். எனவே தூய ஆவியை நோக்கி செபிப்போம். வாரும் தூய ஆவியே துணை தாரும் ஆவியே" என்று நாள்தோறும் அழைத்து இறையன்பின் தூதுவர்களாக அவரால் ஆட்கொள்ளப்பட்ட மக்களாக மாறுவோம்.

**ஆக்கம் :**

**சகோ. டிலோய்ட்சன் பெர்னாண்டோ**

## ஒப்புரவாதலால் என்ன பயன் ?

### பாவ அறிக்கை இட்டவருக்கு தூயஆவியார் அருளும் நன்மைகள் பலப்பல

- கடவுளின் கட்டளையை நிறைவேற்றிய மனச்சாந்தி.
- மன்னிப்பு கிடைத்தது என்ற நிச்சயம்.
- சாவிலிருந்து வாழ்வுக்கு கடந்து போகிறோம்.
- பாவக் கட்டிலிருந்து விடுதலை கிடைக்கின்றது.
- கடவுளுக்கு ஆன்மீக வழிபாடு செய்கிறோம்.
- ஆறுதலும், அமைதியும் பெறுகிறோம்.
- இறையரசின் மக்களாய் மாறி வாழ முடிகிறது.
- பாவ வழிகளிலிருந்து விடுதலை பெறுகிறோம்.
- முறிந்த உறவு திரும்பவும் புதுப்பிக்கப்படுகிறது.
- கடவுளின் எல்லையில்லா அன்பை உணர்கின்றோம்.
- நம் மனசாட்சி கூர்மை அடைகிறது.
- நாம் குணமடைகிறோம்.



## வரலாற்று சிறப்புமிக்க வஹாக்கோட்டை

# புனித அந்தோனியார் தேசிய திருத்தலம்

## வருடாந்த திருவிழா - 2017



மாலை ஆராதனை
ஜூன் - 17
மாலை 7.00 மணிக்கு

கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி வியானி பர்னாந்து ஆண்டகையின் தலைமையில்

### திருவிழா சிறப்புத் திருப்பலி

**ஜூன் - 18, காலை 8.30 மணிக்கு**

ஏனையத் திருப்பலிகள் : -
காலை 5.00 சிங்களம், காலை 6.30 தமிழ்,
நண்பகல் 12.00 சிங்களம், மாலை 5.00 சிங்களம்.

### புனித அந்தோனியார் பிறப்பு திருவிழா
### ஆவணி - 20 மற்றும் 21




### யாத்திரிகளின் விசேட கவனத்திற்கு

- ✳ வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, திருத்தலத்தின் மதிப்பினை பாதுகாக்கும் வண்ணம் நடந்து கொள்ளவும்.
- ✳ இப்புனித பூமி அமைந்துள்ள இடத்திற்குள் மதுபானம், இசைக்கருவிகள், விளையாட்டுப் பொருட்கள், மற்றும் செல்லப்பிராணிகள் ஆகியவற்றை கொண்டுவருவதை தவிர்க்கவும்.
- ✳ திருத்தலத்தின் உள்ளேயும், வெளியேயும் சாதாரண உடை அணியவும், உங்களது கூடாரங்களில் இருக்கும்போதும் ஒழுக்கமான உடைகளை அணிவது அத்தியாவசியமாகும்.
- ✳ தேவையற்ற விதமாக தங்க நகைகள், பணம், மற்றும் பெறுமதியான பொருட்களை கொண்டு வருவதை தவிர்க்கவும்.
- ✳ திருத்தலத்தல பூமியில் உள்ள வீடுகளை பெற்றுக்கொள்பவர்கள் அவற்றை துப்பரவாகவும் சேதம் விளைவிக்காத வண்ணமும் பாவிப்பது அவசியம் என்பதை கருத்திற் கொள்ளவும்.

அருட்பணி
டொம் சன்சன வசார (பு.ஆ.ச)
திருத்தல பரிபாலகர்
புனித அந்தோனியார்
தேசிய திருத்தலம், வஹாக்கோட்டை
0775 - 515616 066-2289210

(Q17N1443)



# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்



## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்
- அடையாள அட்டைகள் தொடக்கம் A-3 அளவிலான லெமினேட்டிங் சேவைகள்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

**தொடர்புகொள்ளுங்கள்**

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927
பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.co

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்